தென்றல் வெளியீடு. கரு.

# சமுதாய விடுதலை.

மதிப்புரைக்கு

அறிஞர். ஆர். ஜி. இங்கர்சால்.

தமிழாக்கம்:

தோழர். இரா. நெடுஞ்செழியன் M. A.

தென்றல் நூற்பதிப்புக் கழகம்,
சலகண்டபுரம். :: சேலம் மாவட்டம்.

FIRST EDN; FEB, 1953.

★

Published by:
THENRAL BOOKS PUBLISHING SOCIETY.

Printed at:
THE SENTHAMIZH PRINTING WORKS,
Jalakantapuram: - - Salem Dt.

(Copy right)

விலை 0-12-0

# பதிப்புரை.

தமிழகத்திலே பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பி, மக்களிடையே அறிவுப் புரட்சியை விளைவித்தது சுயமரியாதை இயக்கம். தற்போது அந்த இயக்கத்தின் நிலை எப்படியிருப்பினும், அது விளைவித்த புரட்சியின் பயனை இன்று பல துறைகளிலும் நாம் காண்கின்றோம்; பூரிக்கின்றோம்.

கொள்கைகள், பரவுதலோடு நின்றுவிடக் கூடாது. கொள்கைவழி மக்கள் நடத்தல் வேண்டும். அதற்கு, கொள்கையிலே நல்ல தெளிவும், அசையாத பற்றும், ஆழ்ந்த அறிவும், மனத்திண்மையும் மக்கள் பெறுதல் வேண்டும். இவற்றைச் செய்து முடிக்கும் ஆற்றல் சிறந்த நூல்களுக்கு உண்டு.

அறிஞர் இங்கர்சால் அவர்களின் எழுத்தும் பேச்சும், பகுத்தறிவாளர்களின் மதிப்பிடற்கரிய பெருஞ் செல்வம். சுயமரியாதைச் சுடருக்கு ஒளிசேர்த்த அணையா ஒளிப்பிழம்பு.

1871-ம் ஆண்டிலே அவர் ஆற்றிய (The liberty of man, woman and child) 'ஆண் பெண் குழந்தை ஆகியோரின் விடுதலை' என்ற சொற்பொழிவு மிகவும் சக்தி வாய்ந்தது. படித்தவர் மனதைக் காந்தம்போல் கவர்ந்திழுக்கும் தன்மையது. இளமைகுன்றாத புதுமைக்கருத்துக்கள் மலிந்தது. அச் சொற்பொழிவின் மொழி பெயர்ப்பே "சமுதாய விடுதலை" என்ற நூல் வடிவு பெறுகின்றது.

இதனை ஏற்கனவே இருவர் மொழிபெயர்த்துள்ளனர். மூன்றாவதாக, தமிழ்நாட்டின் சிறந்த சிந்தனையாளர், பகுத்தறிவாளர் தோழர், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் மொழிபெயர்த்துள்ளார்கள். ஒரே துறை, ஒரே கருத்து, ஒரே

பண்பு ஆகியவை மூல ஆசிரியர்க்கும், மொழிபெயர்ப்பாசிரியர்க்கும் இருந்து விட்டால்,பயன் எத்துணை சிறப்பாக அமையும் என்பதற்கு இம்மொழிபெயர்ப்பு ஓர்எடுத்துக்காட்டு. கருத்துச் சிதையாமல்,கட்டுக் குலையாமல் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. இப்பணியினை வெற்றிகரமாகச் செய்து முடித்து உதவிய எமதரிய நண்பர் தோழர். இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கட்கு எமது நெஞ்சுகந்த நன்றியறிதலைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறோம்.

"பகுத்தறிவு" இதழில் இஃது தொடர்ந்து வந்த பொழுது படித்துப்பாராட்டி, புத்தகமாக்க ஊக்கினர் நண்பர்கள் பலர். அவர்கட்கும் எமது நன்றி.

இதனை மலிவுப்பதிப்பாக வெளியிட்டால் எல்லோரும் வாங்கவும், மக்களிடையே பகுத்தறிவுக் கொள்கைகள் பரவவும் நல்வாய்ப்பு ஏற்படுமென்று கருதினோம். எனவே கூடிய மட்டும் குறைந்த விலையில் இதனை வெளியிடுகின்றோம். இதற்கு மக்கள் காட்டும் ஆதரவு, அறிஞரின் பிறநூல்களையும் தமிழாக்கிக் குறைந்த விலையில் வெளியிடவேண்டும் என்ற எங்கள் ஆர்வத்தை வளர்ப்பதாகும்.

**வணக்கம்.**

சலகண்டபுரம்
23—2—53

**தென்றல் நூற்பதிப்புக் கழகத்தார்.**

# அறிஞர். இங்கர்சால்.

அமெரிக்காவிலே, நியூ யார்க் மாகாணத்தில், டிரெட்ஸ்டன் என்னும் ஊரில், 1833-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 11-ம் நாள் பிறந்தார் ராபர்ட் கிரீன் இங்கர்சால்.

இவரது தந்தையார் ஜான் இங்கர்சால், ஒரு கிறிஸ்து மதப் பாதிரியார். தாயார் மேரி லிவிங்ஸ்டோன் எண்ணத்திலும், செயலிலும் மேம்பட்ட மங்கையர்த்திலகம். அருங்குணங்கள் யாவும்படைத்து, ஏழை எளியோரிடத்து மட்டற்ற அன்பும், பரிவும் காட்டும் மாதர் மணியை அன்னையாகப் பெற்றிருந்தும், இங்கர்சாலுக்கு அவரது அரவணைப்பிலே வளரும் வாய்ப்பு கிட்டவில்லை. தாயையும்,சேயையும் பிரித்தது சூழ்நிலை.

பாதிரி ஜான் இங்கர்சாலும், மேரி லிவிங்ஸ்டோனும் இணைந்து சென்ற வாழ்க்கைப் பாதை இரண்டாகப் பிரிந்தது. எனவே இங்கர்சால் தமது இரண்டாவது வயதிலேயே தந்தையோடு தனியே விடப்பட்டார்.

பாதிரித் தந்தையார்,தொழில் முறைக்கேற்ப, கிறிஸ்துவ வேத நூல் பைபிளைப் படிப்பதும், அதனை மக்களுக்குப் போதிப்பதும், மதச்சடங்குகளை நடத்திவைப்பதுமான செயல்களில் ஈடுபட்டு வந்தார். வயதிலும், அறிவிலும் வளர்ச்சி பெற்றுவந்த இங்கர்சால் அவற்றைக் கவனிக்கத் தொடங்கினர். அவற்றிலே பலமாறுபட்ட கருத்துக்கள், முரண்பாடுகள் அவருக்குத் தோன்றின. உள்ளத்திலே பல ஐயப்பாடுகள் முளைவிட்டன, அந்நாளில் அவர் கொண்ட சந்தேகங்களேதாம், எதிர்காலத்திலே அவர் உலகம் போற்றும் பேரறிஞராகத் திகழப் பெரிதும் உதவின எனலாம்.

இங்கர்சால் கல்விகற்றார். அவரது கல்லூரிப்படிப்பு சொற்பம் என்றாலும், கல்வியிலே ஆர்வமும், அதனைப் பிறருக்குக் கற்றுத்தரவேண்டும் என்பதிலே ஆசையும் பேரளவுக்கு அவரிடம் பொங்கிப் பெருகின. எனவே தமது 20-ம் வயதிலே, தானாக முயன்று ஒருபள்ளியை நிறுவினார், தானே ஆசிரியராக அமர்ந்தார். ஏழை எளியகுழந்தைகளைக் கூட்டிவைத்து கல்வியறிவு ஊட்டத்தொடங்கினார்.

ஆசிரியர் இங்கர்சால், மதக்கழனியிலே முளைத்த மூடக் கொள்கைகளை பல வேடிக்கைத் துணுக்குகளாக வெளியிடுவார். அவரது சொல்லோவியங்களை ரசிக்க, எப்பொழுதும் அவரைப் பலபேர் சூழ்ந்த வண்ணமிருப்பர். அவரது கருத்துக்கள் கசந்தன, எனினும் பேச்சுக்கள் கரும்பாக இனித்தன.

தனது வாழ்க்கை வசதிகளை உயர்த்திக்கொள்வான் வேண்டி, 1854-ம் ஆண்டில் தன்னை ஓர் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார் இங்கர்சால். நீதி மன்றத்தில் மிகத்திறமையோடு வழக்காடினார். அவர் எடுத்துக் கொண்ட வழக்குகள் எதிலும் தோல்வியென்பதே இல்லாமல் வெற்றிபெற்று வந்தார். அவரது அறிவின் ஆற்றல் பெருஞ்சுடரென ஒளிர்ந்தது. குலையாத தன்னம்பிக்கையும், தன்மதிப்பும் பெற்றார். புகழ் பெற்றார்.

அறிவு வளத்தோடு, உடல் வளமும் பெற்றவர் இங்கர்சால். எனவே 1861-ம் ஆண்டில், அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டுச் சண்டையிலே பெரும்பங்கு கொண்டார். 1862-ம் ஆண்டிலே, **பார்க்கர்** என்ற அழகிய மங்கை கல்லாரைக் காதலித்தார். கடிமணம் புரிந்துகொண்டார். அவர்களது காதல் மணம், வாழ்விலே அறிவும், புகழும் மணக்கச் செய்தது.

இங்கர்சாலின் அறிவாற்றல் கண்ட அமெரிக்க அரசினர், இவரை இல்லீனியா நாட்டின் அட்டர்னி ஜெனரல் பதவியில் நியமித்தனர். கடமையை நிறைவேற்றினார். தமது சுயமரியாதையைப்

பொருட்படுத்தாமல், அடிமையாகக்கு ஆதரவாக இருந்திருப்பாரேயானால், இங்கர்சால் அமெரிக்க நாட்டுத் தலைமைப் பதவியையும் பெற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை.

தன்மனதில் தோன்றிய கருத்துக்களை சுயேச்சையாக வெளியிடத் தொடங்கினார் இங்கர்சால். அவரது எழுத்துக்கள் மதவெறியரை வீழ்த்தும் வலிமை வாய்ந்த அறிவுக்குண்டுகள். பேச்சுக்கள் கேட்போரைப் பிணித்துக் கேளாதோரையும் வேட்பமுறச் செய்யும் அறிவுநயம், பொருள்நயம் செறிந்த ஆராய்ச்சி முரசங்கள்.

மனிதப் பண்புபடைத்த எவரும், அறிஞர் இங்கர்சாலின் பகுத்தறிவு வாதத்தை ஒப்புக் கொண்டே தீருவர். பழைமை விரும்பிகள் பகைப்பார்களே, செல்வர்கள் சீறுவார்களே, மதவாதிகள் மருட்டுவார்களே என்று அஞ்சாமல், தனக்குச் சரியெனப்பட்ட கருத்துக்களை, தகுதியான, கண்ணியமான முறையிலே பலசொற்பொழிவுகள் மூலம் வெளியிட்டார் இங்கர்சால். அவைகள் இன்றும் அமெரிக்கர்களுக்கு பெரும் அறிவு நிதியமாகவும், உலகத்திற்கு இருளகற்றும் ஒளி விளக்காகவும் அமைந்துள்ளன.

இங்கர்சால் நிறத்திமிர் படைத்த அமெரிக்கப் பெருங்குடியில் பிறந்தும், நீக்ரோ மக்களைச் சோதரர் போன்று நடத்தினர். அவர்களின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களை வழங்கினர். அவரது அன்பும், அறிவும் பரந்த நோக்கமுள்ளவை. மனிதர் யாவரும் சம சுதந்திரம் பெற வேண்டும் என்று முழக்கமிடுபவை. அவரது உண்மைக்கடவுள்கள் என்ற நூல், மதவாதிகளிடையே பெரும்புயலைக்கிளப்பிற்று. அளவற்ற பகைவர்கள் தோன்றினர். எனினும், அறிஞரின் அறிவு வாதத்தின் முன்னால், சூரியனைக்கண்ட பனித்துளிகளாயின எதிர்ப்புக்கள்!

அறிஞர் இங்கர்சால் சிறந்த பகுத்தறிவுவாதி. அவரது பேச்சும், எழுத்தும் ஒரு தனித்தன்மைவாய்ந்தவை. நாம் படியாமல் விட்ட, அல்லது படித்துமறந்த உலக வரலாறு; விஞ்ஞானம்,

உழவு, கைத்தொழில், மருத்துவம், கல்வி, காவியம், கலைகள், தத்துவம்,வேதாந்தம் போன்ற எல்லாத்துறைகளிலும் நமக்கு அறிவும் தெளிவும் நல்கும் ஒளிப்பிழம்புகளாகும் அவரது சொற்பொழிவுகள். அவர் ஒரு கலைஞானப் பெட்டகம்!

"சொல்வதெளிது செய்வதரிது" என்பதை மெய்யாக்கும் சில பெரியார்களைப் போலல்லாமல், கொண்ட கொள்கையினைச் செயற்படுத்திக்காட்டினார் அறிஞர் இங்கர்சால். தமது வருமானத்தில் நான்கில் ஒருபங்கை—அதாவது ஆண்டுக்கு 5000 பவுன்களை ஏழை மக்களுக்குச் செலவிட்டார். தன்னலம் கருதாத அக் கர்ம வீரரின் அருங்குணமும், பெருஞ்செயலும் அவரது பகைவரையும் பணியவைத்தன என்பதிலே வியப்பில்லை.

கி. மு. 469-ம் ஆண்டில் தோன்றிய கிரேக்க நாட்டுப் பேரறிஞர் சாக்ரட்டீஸ் பகுத்தறிவுப் பயிரை நட்டார். இடையில் வந்த ஆபத்துக்கள் பலப்பல! பத்தொன்பதாம் நூற்றாண்டிலே எழுத்தெருவிட்டு, பேச்சு நீர்வார்த்து அதனை வளப்படுத்திய முன்னணி வீரர் அறிஞர் இங்கர்சால். அத்தகைய நல்லறிஞர்—தலைசிறந்த பகுத்தறிவாளர், 1899-ம் ஆண்டு, ஜூலைத்திங்கள் 21-ம் நாள் இயற்கை முடிவை எய்தினார். அவரது மரணச்சடங்குகள் கூட பாதிரிகளின்றியே பகுத்தறிவு முறையில் செய்யப்பட்டன.

அமெரிக்காவில், பிடாரியா என்ற நகரில், 1911-ம் ஆண்டு, அக்டோபர் திங்களில், அறிஞரது, உருவச்சிலை யொன்று நிறுவப்பட்டது. காலத்தால் வெல்ல முடியாத கருத்துக் குவியலை—பகுத்தறிவுச் செல்வத்தை—நமக்களித்த அறிஞர் **ராபர்ட் கிரீன் இங்கர்சால்** அவர்களின் புகழ் என்றும் மங்காது—மறையாது!

# சமுதாய விடுதலை.

## 1. மனித உரிமை.

அறியாமையைக் காட்டிலும் அடிமைத்தனம் வேறொன்றில்லை. அறிவுடைமையின் குழந்தையே விடுதலையாகும்.

அடிமைத்தனம்—அநீதி—அக்கிரமம் ஆகியவற்றின் வரலாறே, பொதுவாக மனிதனின் வரலாறாக இருந்துவருகிறது. இப்படிப்பட்ட வரலாற்றுத் தன்மையோடு வளர்ந்த மனிதன் தனக்குத் தெரிந்த சில வாழ்க்கை வசதிகளைக் கடைப்பிடித்து, அந்தகாரம் நிறைந்த இறந்த காலங்களை மெதுவாகவும், துன்பத்தோடும் கடந்து முன்னேறி வந்திருக்கிறான். மடாதிபதிக்கும், மண்டலாதிபதிக்கும் அவன் முறையே ஒரு விருந்தாகவும், வேட்டையாகவும் இருந்துவந்திருக்கிறான். மூடநம்பிக்கைக்கும், கொடுங்கோலாட்சிக்கும் அவன் ஒரு நல்லுணவு! அரசனின் ஆதிக்கபலம், அச்சுறுத்தலின் மூலம், அறியாமையை ஆட்சிபுரிந்துவந்திருக்கிறது. ஏமாற்றுக் கொள்கையும் கொடுங்கோலாட்சியும் மனித உரிமைகளைத் தின்று கொழுக்கும் இருவல்லூறுகளாக இருந்துவந்திருக்கின்றன. இப்படிப்பட்ட கொடுமைகளிலிருந்தெல்லாம் விடுபடுவதற்கு இருந்துவரும், இருக்கும் ஒரே வழி-அறிவு வளர்ச்சியாகும். உழைப்பின் முதுகில் சவுக்கடி கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. உணர்வின்மீது மூடநம்பிக்கை என்னும் விலங்கு மாட்டப்பட்டுவந்திருக்கிறது. விடுதலை வேட்கையின் எதிரிகளால் செய்யப்படாமல் விடப்பட்ட செயல் யாதொன்றும் பாக்கியில்லை. அவர்கள் விடுதலை வேட்கைக் குரலை அடக்க எதையும் செய்தார்கள்—எல்லாவற்றையும் செய்தார்கள். ஒவ்வொரு கலையும், கண்டுபிடிப்பும், ஒவ்வொரு கொடுமையும்,

கொடூரமும் மனித உரிமைகளை அழித்தொழிக்கும் வகையில் கையாளப்பட்டும், நிறைவேற்றப்பட்டும் வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட பெரும் போராட்டத்தில், விடுதலை விரோதிகளால் இழைக்கப்படும் ஒவ்வொரு குற்றத்திற்கும் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது; விடுதலை விரும்பிகளால் செய்யப்படும் ஒவ்வொரு குணச் செயலுக்கும் கொடுந் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது படித்தல்—எழுதுதல்—எண்ணுதல்—கண்டுபிடித்தல் எல்லாம் குற்றங்களே!

ஒவ்வொரு விஞ்ஞான விளைவும், தீண்டப்படாத தொன்ருகவே கருதப்பட்டு வந்திருக்கிறது.

மனித சமுதாய முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் வகையில் எல்லா மதப்பீடங்களும், ஆட்சி மன்றங்களும் இணைந்து நின்றே வேலை செய்துவந்தன மன்னனே கொக்கரித்தான்; மனித சமுதாயம் தாமாக எதையும் செய்யக்கூடாது என்று. மடாதிபதியோ கூறினன்; மனித சமுதாயம் தாமாக எதைப்பற்றியும் சிந்தனை செய்யக்கூடாது என்று. ஒருவன் கைகளுக்கு விலங்கிட்டான்; மற்ருெருவன் உள்ளுணர்வுக்கு விலங்கிட்டான். இப்படிப்பட்ட கொடிய ஆட்சியின் கீழ்தான் மனித அறிவு, அதிகார ஆணவம என்னும் சீறிடும் பாம்பின் வாயிலே சிக்கிய இரைப் பறவையாகப் பல்லூழி ஆண்டு காலம் இருந்துவந்தது.

மனித சமுதாயமே சிறையிடப்பட்டுக்கிடந்தது. காலம் செல்லச்செல்ல, சிறைக் கம்பிகளின் வழியே ஒளிக் கற்றைகள் சில ஊடுருவிப்பாய்ந்தன. விஞ்ஞானம் தன்னுடைய பொலிவிழந்த, ஆனல் சிந்தனை மிகுந்த முகத்தை நீட்டிக்கொண்டு, சிறைக் கம்பிகளின் வழியே மனித சமுதாயத்தைப் பார்க்கத் தொடங்கிற்று. முன்னேற்றப் பாதையில் மூகிழ்த்தெழுந்துகொண்டிருந்த மனித சமுதாயம் விஞ்ஞானத்தை வரவேற்றுகின்றது. சிறைக் கம்பி

கள் ஒன்றன்பின் ஒன்ருக உடைத்தெறியப்பட்டன. ஒரு சில பேரறிஞர்கள் சிறையினின்றும் தப்பி வெளியேறி, தம்மைச் சேர்ந்தோரை எல்லாம் விடுவிக்கும் முயற்சியில் வாழ்நாட்களைச் செலவழித்தார்கள்.

ஒரு சில காலத்துக்கு முன்புதான் மனித உள்ளம் விழிப்புணர்ச்சி பெற்றெழுந்தது. மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கினர்: "முடிசூடிய கொள்ளைக்காரன், எந்த உரிமையைக்கொண்டு தனக்காக மற்றையோரையெல்லாம் வேலை செய்யச் சொல்கிருன்?" என்று. இந்தக் கேள்வியைககேட்ட மனிதன் துரோகியாகக் கருதப்பட்டான். மற்றுஞ் சிலர் கேட்டனர்: "மதச் சின்னந் தரித்திருக்கும ஏமாற்றுக்காரன், எந்த உரிமையைக் கொண்டு மற்றவர் சிந்தனையை அடக்கி ஆளுகிருன்?" என்று. அப்படிக் கேட்டவர்கள் நம்பிக்கைத் துரோகிகள் என்று அழைக்கப்பட்டனர். மதகுரு கேட்டான்—மன்னன் கேட்டான்: "புதியன கண்டுபிடிக்கும் உணர்ச்சியின் வேகம் எங்கு போய் நிற்கும?" என்று. அவர்கள் அன்றும் கூறினர்கள், இன்றும் கூறுகிருர்கள், மனிதனை சுயேச்சையாக விடுவது ஆபத்தானதொன்ருகும் என்று. நானே அத்தகைய கூற்றை வன்மையாக மறுக்கிறேன். அறிவுக்கடல் மிகப் பெரியது, அதில் எந்த ஒரு கப்பலும் எப்படியும் மிதக்கலாம்: அவ்வளவு பரந்து விளங்குவது அது. அறிவு வானம் மிகப் பெரியது; அதில் எந்த ஒரு பறவையும் பறககலாம்; அவ்வளவு பரந்ததாகும் அது.

தனக்குத்தானே சிந்திக்கத் தெரியாத மனிதன் ஒரு அடிமை—அதுமட்டுமல்லாமல், அவன் அவனுக்கும் சரி, அவனைச் சார்ந்த ஏனைய மக்களுக்கும் சரி ஒரு துரோகியாகவே இருக்கிருன்.

ஒவ்வொரு மனிதனும், நீல நிறவானின் கீழே அதில் மின்னிடும் உடுக்களின் ஒளியிலே, எஃ

யற்ற இயற்கைக் கொடியின் நிழலிலே, எல்லா விதத்திலும் மற்றொரு மனிதனுக்குச் சரிசமமாகவே நின்று வாழவேண்டும்.

'காணப்படாத கடவுளின்' முன்னிலையில் நின்று கொண்டிருக்கும் எல்லா மக்களும், சிந்தனை செய்ய, ஒரே விதமான உரிமையைப் பெற்றிருக்கவேண்டும்; பிறப்பு இறப்பு பற்றிய முக்கிய பிரச்சினைகளில், ஒரேவித மனப்போக்குக்கொண்டவர்களாக இருக்க வேண்டும். நான் கோருவதெல்லாம்—நான் புரிந்து பேச விரும்புவதெல்லாம் எண்ணுவதற்கும், எடுத்துக்கூறுவதற்கும் உரிமை இருக்கவேண்டும் என்பதுதான். அதுதான் நான் வேண்டுவதெல்லாம்! நான் கூறுவதுதான் முழுக்க முழுக்க உண்மையென்று எதையும் நான் பாசாங்கு செய்துகூற வரவில்லை; ஆனால் எதை உண்மையானதென்று நான் உணருகிறேனோ, அதையே கூற விரும்புகிறேன். எல்லா உண்மைகளையும் அலசிப்பார்த்துக் கூறிவிடுவதாகவும் நான் பாசாங்கு செய்ய வரவில்லை.

எண்ணங்களின் உயர்ந்த நிலைகளை எட்டிப் பிடித்துவிட்டதாகச் சொல்லிக்கொள்ளவும் நான் முற்படவில்லை; பொருள்கள் எல்லாவற்றின் தன்மையையும் முழுக்க முழுக்கத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு, ஆழ்ந்த அறிவு பெற்றுவிட்டேன் என்று பெருமையடித்துக்கொள்ளவும் நான் முற்படவில்லை. நான் பொதுவாகக் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், நான் என்ன கருத்துக்களைக் கொண்டிருக்கிறேனோ, அவற்றை அப்படியே வெளியிட எனக்கு முழு உரிமையும் உண்டு என்பதேயாகும். எந்தவொரு மனிதனாவது அந்த உரிமையை மறுத்துரைத்தால், அவனை நான் அறிவைப் பறிக்கும் திருடன் என்பேன்—கொள்ளையிடும் கொள்ளைக்காரன் என்பேன். அதுதான் என் தீர்ப்பு!

மனித உணர்வைக் கட்டுப்படுத்தியிருக்கும் சங்

கிலிகளை அகற்றுங்கள்! விலங்குகளை உடைத்தெறி யுங்கள்! எண்ணுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால், எனக்குச் சிந்திக்கும் மூளை இருப்பா னேன்? எனக்கு அத்தகைய உரிமை இல்லை என் றால, மூன்று பேரோ நான்கு பேரோ, அல்லது அகற்கதிகமானவர்களோ ஒன்று கூடிக்கொண்டு, ஒருவித விதிமுறையை வகுத்துக்கொண்டு, கோயில் ஒன்று எழுப்பிக்கொண்டு, அதன்மீது கோபுரம் ஒன்று அமைத்துக்கொண்டு, அதில் கண்டாமணி யென்றைக் கட்டிக்கொண்டு இருக்கும் காரணத் தாலேயே, சிந்திக்கும் உரிமையெலலாம் அவர்களுக் குச் சொந்தமாகிவிடுமோ? கருத்துலகில் சற்று தாராளமாக உலாவத் தொடங்கிய நல்ல ஆடவரும், நல்ல பல பெண்டிரும் வாங்கிய சவுக்கடிகளும், பட்ட படுகாயங்களும் கணக்கிலடங்கா. அவைகளைப் பெற்றுப் பெற்று அவர்கள் அலுத்துவிட்டார்கள். அவர்கள் தங்களைப் பிணித்திருந்த இரும்புச் சங்கிலி களை நினைக்கும்போதும், தங்களை உயிரோடு எரிப் பதற்காக அடுக்கப்பட்ட ஈமவிறகுகளை நினைக்கும் போதும் அச்சத்தால் குலைநடுங்கிப் போகிறார்கள். இறுதியில் அவர்கள் விடுதலை பெற்று வெளியேறி யுள்ளனர். வெளியேறிய அவர்கள் மற்றவர்களுக்கு விடுதலையை வழங்குகிறார்கள். தன்னைசசேர்ந்த பிற மக்களில், யார் எந்த உரிமையைக் கோரினாலும், அதனை அவர்களுக்குத் தர மறுப்பவன் அயோக்கி யன் மட்டுமல்ல, பெருந்தன்மையைப் புறக்கணித்த புல்லனுமாவான்.

மிகப் பழம் பெருங்காலத்தில், நமது தந்தை மார்கள், தங்கள் கருத்துக்கேற்பவே மற்றவர்களை யும் நம்பவைக்கமுடியும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள். எண்ணற்ற இறந்த காலங் களில் வாழ்ந்த நமது முன்னோர்கள், எந்த ஒரு மனி தனையும், எந்த ஒன்றைப்பற்றியும் வலுக்கட்டாயத் தின்பேரில் ஒப்புக்கொள்ளும்படிச் செய்துவிடமுடி

யும் என்பதை உண்மையாகவே நம்பி வாழ்ந்தனர். ஒருவனைச் சித்திரவதை செய்வதாலோ, சமுதாயக் கட்டுக்கோப்பினின்றும் விலக்கிவிடுவதாலோ, அவனுடைய சிந்தனையிலே ஏற்பட்டமுடிவை உங்களால் மாற்றிவிடமுடியாது. ஆனால் இவைகளைக்கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள், உங்களால் என்ன செய்யமுடியும், இதுவரையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை என்னால் கூறமுடியும். ஆயிரக் கணக்கில், பதினாயிரக் கணக்கில் உங்களால் ஏமாற்றுக்காரர்களை, வஞ்சகர்களை உற்பத்தியாக்கமுடியும். ஒருவன் தன்னுடைய உள்ளத்தைத் தானே மாற்றிக்கொண்டுவிட்டதாக, அவனைக் கொண்டே வாயால் சொல்லவைக்கமுடியும் உங்களால். ஆனால் அப்பொழுதும், அவன் தன்னுடைய உள்ளக் கருத்தில் அசையாத நிலையை உடையவனாகத்தானிருப்பான். அவன் உடலுறுப்புகள் எல்லாவற்றிலும் விலங்குகளை மாட்டுங்கள்; இரும்புப் பூட்ஸ்களிலே அவனுடைய கால்களை இட்டுக் கசக்குங்கள்; கடைசி மூச்சுக்காக வாய் திறக்கும் வரையில் அவனைப் "புண்ணியப்" பாறையில் கட்டிப்போடுங்கள்; உங்களுக்கு விருப்பமாயின் அவனை எரித்து வேண்டுமானாலும் பாருங்கள்; ஆனாலும் அவன் வெந்து சாம்பலான பிறகுங்கூட, அந்தச் சாம்பலில் அவனுடைய கருத்துக்கள் கமழ்ந்துகொண்டுதானிருக்கும்!

பழம்பெருங் காலத்தில் வாழ்ந்த நமது தந்தைமார்கள், தாங்கள் சிந்தித்த வழியே மற்றவர்களையும் வலுக்கட்டாயத்தால் சிந்திக்கவைக்கமுடியும் என்ற எண்ணத்தைக்கொண்டிருந்தனர். அவர்களைப்பற்றிக் குறிப்பாக ஏதாவது சொல்லவேண்டுமானால், அவர்கள் இப்பொழுது இல்லை, இறந்துபோய்விட்டார்கள் என்பதுதான். வலுக்கட்டாயத்தின்பேரில் சிந்தனையைக் கட்டுப்படுத்தமுடியும் என்ற அந்த எண்ணம் இந்த நாட்டின் பெரும்பாலான பகுதி

களில் இப்பொழுதும் நின்று நிலவிவருகிறது. நாம் வாழும் இந்த நாட்களில்கூட, தானே சிந்திக்கும் தனி மனிதனைப்பற்றிக் கருதும்போதும், சில பழுத்த பக்குசிரோன்மணிகளான மதவாதிகள் "நாங்கள் அவனோடு வியாபாரம் செய்யமாட்டோம்; நாங்கள் அவனுக்குரிமைச் சீட்டு அளிக்கமாட்டோம்; அவன் வழக்கறிஞனாக இருந்தால், எங்கள் வழக்குகளில் அவனை எங்களுக்காக அமர்த்திக்கொள்ள மாட்டோம்; அவன் வைத்தியனாக இருந்தால், அவனுடைய மருந்தைக் உட்கொள்வதற்கு முன்பே நாங்கள் இறந்துபடுவோம்; அவனை விருந்துக்கு நாங்கள் அழைக்கமாட்டோம்; அவனைச் சமூகக் கட்டுப்பாட்டின் காரணமாக விலக்கிவைப்போம்; அவன் எங்களுடைய கோயிலுக்கு வரவேண்டும்—அவன் எங்களுடைய மதக் கோட்பாடுகளை ஒப்புக்கொள்ள வேண்டும்—அவன் எங்களுடைய கடவுளைத் தொழுதேத்தவேண்டும்—இல்லாவிட்டால், எந்த வகையிலும் அவனுக்கு உதவி அளிக்கமாட்டோம்" என்று சொல்லிவருகிறார்கள்.

நான் சுட்டிக்காட்டும் அந்தப்பழம் பெருங்காலத்தில், எல்லா மக்களையும் ஒரே மாதிரியாகச் சிந்திக்கவைக்கவேண்டும் என்று மதவாதிகள் பெரிதும் விரும்பினார்கள். உலகில் வளர்ந்தோங்கி நிற்கும் பொறியறிவுகளெல்லாம்கூட இரண்டு கடிகாரங்களை ஒன்றாக ஓடச்செய்யமுடியாத நிலையில் இருக்கும்போது, அறிவிலும், ஆசையிலும், பண்பிலும், கல்வியிலும், நிலைமைகளிலும், சுற்றுச் சார்புகளிலும் ஒருவர்க்கொருவர் வேறுபாடு மிகக்கொண்ட இலட்சக் கணக்கான—கோடிக் கணக்கான—மக்களை, ஒரே மாதிரியாக எண்ணும்படியும், உணரும்படியும் எவ்வாறு உங்களால் செய்யமுடியும்? நம்மையெல்லாம் தோற்றுவித்து, நாமெல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் சிந்தனை செய்யவேண்டும் என்று விரும்பிக்கொண்டிருக்கிற எல்லையற்ற

பரம்பொருள் ஒன்று இருக்குமேயானல், அந்த ஒன்று ஏன் ஒருவனுக்கு ஒரு சிறு கரண்டி அளவு மூளையைக் , கொடுக்கவேண்டும்? மற்றொருவனுக்கு ஏன் அளவுக்குமீறிய அறிவுவளர்ச்சியைத் தரவேண் டும? எல்லோரும் ஒரே மாதிரியாகச் சிந்தித்து, ஒரே மாதிரியாகத்தான் உணரவேண்டும் என்பது நியதி யானல், பழமை விரும்பியிலிருந்து பேரறிஞர் வரை யில் அறிவிலேயே ஏற்றத்தாழ்வுகள் அமைந்திருப் பானேன்?

நமது முன்னோர்கள் மனித சமுதாயத்துக்கு எவ்வளவு கொடுமைகள் இழைத்திருக்கிறார்கள் என் பதை, நான் பல நூல்களிலே படித்திருக்கிறேன். ஆனல் நான் ஒருபொழுதும் அந்தச் செயல்களைப் பாராட்டியதில்லை நான் அவைகளைப் படித்தேன்; ஆனல் அவைகள் எனக்கு நெக்குருகும் உணர்ச் சியைத் தந்ததில்லை. கிருத்தவ மதக் குருமார்கள் பயன்படுத்தி வந்த இரும்புக் கருவிகளைக் காணும் வரையிலும்கூட, மதத்தின் பேரால் செய்யப்பட்டக் கொடுமைகளை என்னல் பாராட்ட முடியவில்லை. அவர்கள் கைக்கொண்டிருந்த கட்டைவிரல் திருகா ணியை நான் கண்டிருக்கிறேன். இரண்டு இரும்புத் துண்டுகள், தமக்கிடையிலே வைக்கப்படும் பொருளை நழுவவிடாத வகையில், உள் குழிந்தனவாய் வெளிப் புறம் புடைத்துக் காணப்படுவனவாய் அமைந்திருக் கும்; அவற்றின் முனைகளின் வழியே ஒரு திருகாணி செருகப்பட்டு, இரண்டு இரும்புத் துண்டுகளையும் ஒன்று சேர்ப்பதாய் அது காணப்படும். ஞான நீராட்டுதலின் சக்தியை யாராவது மறுத்துரைத்தால், அல்லது மறுத்துரைப்பவர்போல் காணப்பட்டால், அல்லது நீரில மூழ்கி இறந்துபடாமல் காப்பாற்று வதற்காக ஒருவனை ஒரு மீன் விழுங்கிவிட்டது என்ற கதையை, தான் நம்பமுடியாது என்று யாரேனும் கூறினல், அவர்களுடைய கட்டை விரலை இந்த இரும்புத் துண்டுகளுக்கிடையிலேவைத்து,

அன்பின்பேரால், ஆண்டவனின் கருணையின் பேரால், இரண்டு இரும்புத் துண்டுகளும் ஒன்ருகச் சேரும்படி திருகாணியால் முறுக்குவார்கள். இப்படிப் பட்டச் செயலைச் செய்யும்போது பெரும்பாலான மக்கள், ''நான் என் கருத்தைப் பின்வாங்கிக்கொள்கிறேன்'' என்றுதான் கூறுவார்கள். பெரும்பாலும் நான்கூட அதேமாதிரிதான் அந்தச் சமயத்தில் சொல்லநேரிடும். நான் சொல்லக்கூடும்: ''தயவு செய்து நிறுத்துங்கள்; நீங்கள் விரும்புகிற எதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்; அதுஒரு கடவுளானாலுஞ் சரி, அல்லது பல இலட்சம் கடவுள்களானாலுஞ் சரி, அது ஒருநரகமானாலுஞ் சரி, அல்லது பல கோடி நரகங்கள் ஆனாலும் சரி அவற்றை நான் ஒப்புக்கொள்கிறேன்; நீங்கள் திருப்தி அடையுங்கள்; ஆனால் ஆணியை முறுக்குவதை மட்டும் நிறுத்துங்கள்'' என்று.

ஆனால் தாம் மேற்கொண்ட வழிகளினின்றும் தவருமலும், கொண்ட கொள்கைகளிலிருந்து அசைந்து கொடுக்காமலும் பற்பல வேளைகளில் சிலர் இருந்துவந்திருக்கிருர்கள். தாம் கொண்ட கருத்தை நிலை நாட்டுவதற்கு உயிரை விடக்கூடத் துணிவும், விருப்பமும் கொண்டசிலர் அவ்வப்போது இருந்திருக்கிருர்கள். அப்படிப்பட்ட சிலர்கள் சிலரும் இல்லாமல் போயிருப்பார்களாயின்; நாம் இப்பொழுது வெறும் காட்டுமிராண்டிகளாகத்தான் காட்சியளித்திருப்போம். அப்படிப்பட்ட ஆண்மையும், வீரமும் கொண்ட விடுதலை விரும்பிகள் காலந்தோறும் இல்லாமலிருந்திருப்பார்களாயின், நாமெல்லோரும் மனித இறைச்சியைத் தின்று வாழும் அநாகரிகர்களாய், காட்டு விலங்குகளின் வடிவுகளை உடலெல்லாம் பச்சைக் குத்திக்கொண்டு திரிபவர்களாய், செத்த பாம்பின் தோலாலான தாயத்தை அணிந்து

கொண்டு வெறியாட்டம் ஆடுபவர்களாய் இருந்திருப்போம்.

சினமும் சீற்றமும், கொடுமையும், கொலையும், சாவும், சாபமும் எதிராக ஏவிவிடப்பட்ட நிலையிலும், அவைகளையெல்லாம் சமாளித்துநின்று, தாம் சரி என்று ஒப்புக்கொண்ட உண்மைக் கருத்தை பெரும் புகழோடும், பெருமிதத்தோடும் நிலைநாட்டிய, பெருந்தன்மை வாய்ந்த அந்த நல்லவர்கள் ஒவ்வொருவருக்கும் நாம் நமது நன்றியை உரித்தாக்குவோமாக!

நமது முன்னோர்களின் பெருமதிப்பு, வீரச் செயல்கள் வாயிலாகப் புலப்படுத்தப்படவேயில்லை. தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்ள மறுத்த எந்த ஒரு மனிதனும், அவர்களால் மன்னிக்கப்பட்டதே கிடையாது. தங்கள் தீர்ப்புப்படி குற்றவாளி என்று கருதப்பட்ட மனிதனின் கட்டைவிரலில், கட்டை விரல் திருகாணியை மாட்டி, சித்ரவதையின் இறுதி எல்லையை எட்டுமளவுக்கு முறுக்கினார்கள். பிறகு அவனை அந்தகாரமும், அமைதியும், இருளும் சூழ்ந்த தனி அறையில் தள்ளிவைத்து வதைத்தார்கள். அங்கே அவன் பதைபதைத்துத் துடிதுடித்து உயிரை ஊசலாட விட்டுக்கொண்டிருந்தான். இத்தகைய செயல், அன்பின் பேரால் செய்யப்பட்டது!— அருளின்பேரால் செய்யப்பட்டது! — இரக்க மனம் படைத்த இயேசுவின் பேரால் செய்யப்பட்டது!

நான் அவர்களின் சித்ரவதைக்கழுத்து வளையத்தையும் பார்த்திருக்கிறேன். ஊசிபோன்ற கூர்மையுடைய சிறிய ஆணிகள் நூற்றுக் கணக்கில் உட்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும் இரும்புவளையமே அந்தக் கருவியாகும். தண்டனைக்குள்ளாக்கப் படுபவன்

கழுத்தில் அது மாட்டப்பட்டு, அவன் தொண்டை நெரியும்படி அழுத்தப்படும். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கழுத்து வீங்க ஆரம்பிக்கும். அவன் தொண்டை அடைபட்டுத் துடிதுடிக்க உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும். இத்துணைக்கும் அவன் செய்ததாகச் சொல்லப்படும் குற்றம் என்பதெல்லாம் "நமக்கெல்லாம் தந்தையாக இருக்கும் கடவுள், மக்களாகிய குழந்தைகளின் ஒன்று எப்பொழுதும் எல்லையற்ற பெருந்துன்பத்தையே நுகர்ந்து கொண்டிருக்கவேண்டும் என்று கட்டளையிடுவார் என்பதை, நான் நம்பமாட்டேன்" என்று கூறியதாக இருக்கக்கூடும்.

"தோட்டியின் மகள்" (Scavenger's Daughter) என்று அழைக்கப்படும் கருவியையும் நான் பார்த்திருக்கிறேன். அது இப்பொழுது இருந்து வரும் பெரிய கத்திரிக்கோல் போன்று இருக்கும். கத்திரிக்கோலில்மேலே இரண்டு கைப்பிடிகள் இருப்பது போலவே, கீழேயும் கூர்மையான இரண்டு பகுதிகளுக்குப் பதிலாக வளையம்போன்று அமைந்த இரண்டு கைப்பிடிகள் இருக்கும். இரண்டு முனையிலும் வளையங்கள் அமைந்த இரண்டு இரும்புச் சட்டங்களும், ஒன்றின்மேல் ஒன்று குறுக்காக அமையும்படி நடுவே பொருத்தப்பட்டிருக்கும். இணைப்பாணிக்குமேல் ஒரு பெரிய இரும்பு வளையம் கோர்க்கப்பட்டிருககும். மேலே உள்ள இரண்டு வளையங்களிலும் இரண்டு கைகளும் மாட்டப்படும்; நடுவிலுள்ள வளையத்தில் தலை நுழைக்கப்படும்; கீழே உள்ள இரண்டு வளையங்களிலும் இரண்டு கால்களும் இணைக்கப்படும்; குற்றவாளி என்று மதபக்தர்களால் கருதப்படுபவன் "தோட்டியின் மகள்" என்ற அந்தக் கருவியால் இவ்வாறு பூட்டப்படுவான். இப்படிப்பட்ட நிலையில், அவன் தலைகுப்புறக்

கவிழ்ந்து விழும்படி நிலத்தின்மீது தூக்கி எறியப் படுவான். உடம்பின் தசைகள் கண்டபடியெல்லாம் இழுக்கப்பட, அவன் வலி தாங்கமாட்டாமல் வருந்தி, இறுதியில் உயிர்வாதை அடைந்து இறந்துபடுவான்.

இது யாரால் செய்யப்பட்டது என்று கருதுகி றீர்கள்? "யாரேனும் ஒருவர் உன்னை ஒரு கன்னத் தில் அறைந்தால், அவரிடம் மற்றொரு கன்னத்தை யும் திருப்பிக் காட்டு" என்று சொல்லிவரும் கன்னி யர்களே இதனைச் செய்தார்கள்!

நான் அவர்கள் கையாண்டு வந்த சித்ரவதைப் பெட்டியையும் பார்த்திருக்கிறேன். பண்டங்கள் ஏற் றிச்செல்லும் வண்டியின் அடித்தளத்தில் அமைந் திருக்கும் பெட்டியைப்போல் அது காணப்படும்; அதன் ஒவவொரு பக்கத்திலும் கம்பிகளால் இணைக்கப்பட்ட உருளைகள் இருக்கும்; ஒவ்வொரு உருளையின்மீதும் சங்கிலிகள் மாட்டப்பட்டிருக்கும். தண்டனைக் குள்ளாக்கப் பட்டவனின் கணுக்கால்க ளில் சிலவும், கை மணிக்கட்டுகளில் சிலவுமாக அந் தச்சங்கிலிகளில்மாட்டிவிடப்படும் பிறகு புரோகிதர், குருமார்கள், வரம்பெற்றோர், முனிவர்கள் ஆகிய எல் லோரும் சேர்ந்துகொண்டு, அந்த உருளைகளைச் சுற் றுவார்கள். வேட்டையாடப்படும் அந்த மனிதனின் முழங்கால்களும், இடுப்பும், தோள்களும், மார்பெலும்புகளும், மணிக்கட்டுகளும், தனித் தனியே கழன்றுபோகும் வரையில் சுற்றுவார்கள். அந்தப் பரிதாபத்திற்குரியவன், உயிர்வாதையோடு இரத்த வெள்ளத்தில் மிதந்துகிடப்பான். அவனு டைய நாடியைப் பிடித்துப் பார்ப்பதற்காக, அருகி லே மருத்துவரையும் வைத்திருப்பார்கள். எதற்காக? அவன் உயிரைக் காப்பாற்றுவதற்காகவா? ஆம்!

அதுவும் கருணைகொள்வதாலா? இல்லை, இல்லவே இல்லை! மீண்டும் ஒருமுறை அவனைக் கசக்கிப் பிழிய லாமா என்று அறிவதற்காகவே!

இந்தச் செயல் மதக் குருமார்களால் செய்யப்பட்டது, நினைவிலிறுத்திக்கொள்ளுங்கள்: நாகரிகத்தின் பேரால் செய்யப்பட்டது; சட்டத்தின்பேரால், ஒழுங்கின்பேரால் செய்யப்பட்டது; கருணையின்பேரால் செய்யப்பட்டது; மதத்தின்பேரால் செய்யப்பட்டது; கருணைவெள்ளம்என்று போற்றப்படும் கிருத்துவின் பேரால் செய்யப்பட்டது!

இப்படிப்பட்ட அச்சமூட்டும் அடக்குமுறைக் கருவிகளைப்பற்றிப் படிக்கும்போதும், அவற்றைப் பற்றிச் சிந்திக்கும்போதும், சில நேரங்களில், இந்தக் கொடிய காட்சிகளையெல்லாம் நானே நுகர்ந்து, துன்புறுவதுபோல் எனக்குத் தோன்றுகிறது. சில நேரங்களில், நான் நாடு கடத்தப்பட்டு, அந்நாட்டின் கடற்கரையோரத்தில் நின்றுகொண்டு, அழுத கண்களோடு சொந்த நாட்டையும் கண்டுகொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது; சில சமயங்களில் என்னுடைய கைகளிலிருந்து நகங்கள் பிய்த்தெடுக்கப்பட, குருதி ஒழுகும் அந்த நகக்கண்கள் வழியாக அவசர அவரமாக ஊசிகளை அழுத்துவது போல் தோன்றுகிறது; சில நேரங்களில், என்னுடைய கால்களை இரும்பு மிதியடிகளுக்குள்ளே போட்டுக் கசக்கிப் பிழிவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், மதநம்பிக்கையற்ற குற்றத்திற்காக இருட்டறையில் தள்ளப்பட்டு, சங்கிலியால் பிணைக்கப்பட்டுக் கிடக்க, வெளியே திறந்துவிடுவதற்கென்று வருவோரின் காலடி ஓசையை, அறிந்துகொண்டே இருக்கும் காதுகளால் கேட்பதுபோல் தோன்று

கிறது; சில நேரங்களில், நான் கொலைக்களமேடையில் நின்று கொண்டிருக்க, என்மீது விழவரும் கொலைவாளின் பளபளப்பைப் பார்ப்பதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில் நான் சித்ரவதைப் பெட்டிக்குள்ளே கிடக்க, வஞ்சக நெஞ்சம் படைத்த குருமார்கள், குனிந்து நின்றுகொண்டு என்னை எட்டிப் பார்ப்பதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், நான் என்னுடைய வீட்டிலிருந்தும், என்னுடைய மனைவிமக்களிடமிருந்தும் பிரிக்கப்பட்டு, சங்கிலியால் பிணிக்கப்பட்டு, ஊர்ப் பொதுமன்றத்திற்கு இழுத்துச் செல்லப்படுவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில் ஈமவிறகுகள் என்மீது அடுக்கிவைக்கப்பட்டு, அவற்றிலிருந்து மேலெழுப்பப்படும் தீச்சுடர் என் கைகளையெல்லாம் பற்றிக் கொள்ள, நான் கண் இருண்டு குருடாய்ப் போய்விடுவதுபோல் தோன்றுகிறது; சில நேரங்களில், என்னை எதிர்த்தவர்களின் கரங்கள், என்னுடைய சாம்பலை நாற்றிசைக் காற்ருேடும் கலக்குமாறு வீசி எறிவதுபோல் தோன்றுகிறது. நான் அப்படி உணரும்போதெல்லாம், நானே சூளுரைத்துக் கொள்கிறேன்—"என் வாழ்நாளில் ஆடவர்—பெண்டிர்—குழந்தைகள் ஆகியோரின் உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு என்னல் எவ்வளவு தொண்டுபுரிய முடியுமோ அவ்வளவு தொண்டு புரிவேன்'' என்று!

நாம் வேண்டுவதெல்லாம் நீதி—நாணயம்—அருள்—அறிவு வளர்ச்சி! தான் விரும்புகிற ஒவ்வொரு உரிமையையும், மற்ற ஒவ்வொரு மனிதனுக்கும் வழங்க மறுக்கிறவன் இவ்வுலகில் யாரேனும் இருப்பானுகில், அவன் நாம் இப்போது இருக்கிற நிலையைக் காட்டிலும் எவ்வளவோ அப்பாற்பட்டுக் காணப்படும் காட்டுமிராண்டியோடு சேர்த்துக்

கணக்கிடப்படவேண்டியவன் என்பதே என் கருத்து. நாம் வேண்டுவது நாணயம்! தான் பெறும் அறிவுச் சுதந்திரத்தைப் பிறனொருவனுக்கு வழங்க மறுப்பவன் நாணயமற்றவன்—சுயநலங்கொண்டவன்—காட்டுமிராண்டி!

நாம் வேண்டுவது அறிவுவளர்ச்சி! நாணயமான முறையில் சிந்தித்து, அந்தச் சிந்தனைக்கேற்றபடி பொறுப்புள்ளவனாக நடந்துகொள்ளும் ஒருவனைத் தனக்கு அடங்கி, தன் விருப்பப்படி நடக்கவேண்டும் என்று கோருபவன், அறிவின் அழகிய தன்மையை அழிப்பவன்—இயற்கை நிகழ்ச்சிக்கு மாறாக நடந்து கொள்ளும் வஞ்சக அறிவு படைத்தவன்! நாம் வேண்டுவது அறிவு வளர்ச்சியே!

சிறிது நேரத்திற்கு முன்பு மனித முயற்சியால் செய்யப்பட்ட பொருள்கள் எல்லாவற்றினுடையவும் மாதிரிகளை நான் கண்டேன். நீரின்மேல் மிதக்கும் பலவகைக் கப்பல்களின் மாதிரி யெல்லாம் கண்டேன். காட்டுமிராண்டிக் காலத்தில் உடையணியாத மனிதன் ஏறிச்சென்ற கப்பலாகிய உள்குடைந்து செய்யப்பட்ட மரப்படகிலிருந்து, நூற்றுக் கணக்கான பீரங்கிகளை ஏற்றிச்செல்லும் சண்டைக் கப்பல் வரையில், எல்லாவற்றினுடையவுமான மாதிரிகளையும் நான் கண்டேன். நமது முன்னோர்களில் ஒருவனான உடையற்ற காட்டுமிராண்டி, இரண்டு அங்குல நீளமுள்ள பற்களையும், சிறிதளவான மூளையையும் வைத்துக்கொண்டு ஓட்டிச் சென்ற மரப்படகையும் கண்டேன்; நியூயார்க் துறைமுகத்தில் கிளம்பி, மூவாயிரம் மைல்களுக்கு அப்பாலும் மூச்சு விடாமல் செல்லும் நீராவிக் கப்பலையும் கண்டேன்.

நான் மனிதனால் செய்யப்பட்ட ஆயுத வகை களையுங்கூட அதே சமயத்தில் கண்டேன். காட்டு மிராண்டிக் காலத்து மனிதன் குகையிலே வாழ்ந்து, நிலத்திலே தவழ்ந்து, பாம்பைக் கொன்றுதின்ற நாட்களில், அவன் கையிலேந்தியிருந்த கற்கருவியி லிருந்து, மனிதன் அவ்வக் காலங்களில் ஏந்தியிருந்த ஆயுதங்கள் எல்லாவற்றையும் கண்டேன். கற்கருவி யைக் கண்டேன்; "பூமெராங்" கருவியைக் கண் டேன்; வாளைக்கண்டேன்; வில்லைக் கண்டேன்; பெருந்துளையையுடைய கைத்துப்பாக்கியைக் கண்டேன்; அதில் வகைவகையானவற்றை யெல்லாம் கண்டேன்; 'கிரப்' கண்டுபிடித்த பீரங்கியைக்கண்டேன்; இரண்டாயிரம் பவுண்டு எடையுள்ள, குண்டினை வீசி எறியும் பதினெட்டு அங்குல அகல வாயையுடைய பெரிய பீரங்கியைக் கண்டேன்; கற்கருவியிலிருந்து கனமான பீரங்கி வரையில் கண்டேன்!

நான், மனிதன் அணிந்துவந்த கவசங்களையெல் லாம் கூடக் கண்டேன். தன்னுடைய நாட்டைக் காப்பதற்காகப் போர்க்களஞ் சென்ற நமது முன்னோனான போர்வீரன், தனது மார்பில் அணிந் திருந்த ஆமை ஓட்டுக் கவசத்தைக் கண்டேன்; இடைக்காலத்து மனிதனால் தலையிலிருந்து மார்பு வரையில் அணியப்பட்டு, எதிரியின் வாளினாலும், ஈட்டியினாலும் துளைக்கப்பட்டு, முட்களோடு கூடிய தாய் இருந்த முள்ளம்பன்றியின் தோலாலாகிய கவ சத்தையும் கண்டேன்; இப்பொழுது அணியப்பட்டு வரும் எஃகினாலான கவசத்தையும் கண்டேன்.

நான் அதேபோது, மனிதனுடைய இசைக் கரு விகளின் வகைகள் பலவற்றையுங்கூடக் கண்டேன்;

பக்குவப்படுத்தாத தோலாலாகிய தப்பட்டையிலிருந்து, நம்மைச் சூழ்ந்து வீசும் காற்றில் மெல்லிய இசையை மிதந்து வரச்செய்யும் இற்றைக்கால இசைக் கருவிகள் வரையில் எல்லா வகைகளையுங் கண்டேன்.

நான், மக்கள் முயற்சியால் உருவான ஓவியங்கள் எல்லாவற்றையுங் கூடக் கண்டேன். மஞ்சள் நிற மண்ணைக்கொண்டு தீட்டப்பட்ட கரடுமுரடான ஓவியத்திலிருந்து, உலகக் கண்காட்சிசாலைகளை அழகு படுத்திக் கொண்டிருக்கும், உயர்தர ஓவியங்கள் வரையில் பலவற்றையுங் கண்டேன்.

நான், நமது முன்னோர்களால் செய்யப்பட்ட பலவகைச் சிற்பங்களையும், ஆறு கைகளையும், பல மூக்குகளையும், இரண்டு மூன்று வரிசைக் காதுகளையும், மிகச் சிறிதான மூளையற்ற ஒரு தலையையும் கொண்ட கடவுளிலிருந்து, பளிங்கினல் ஆன கவர்ச்சிமிக்க இற்றைகாலச் சிற்பம் வரையில் பலப்பல கண்டேன்.

நான், அவர்களின் புத்தகங்கள் பலவற்றைக் கண்டேன்; காட்டுவிலங்குகளின் தோலில் எழுதப் பட்ட புத்தகங்கள்-ஆடுகளின் தோள்பட்டை எலும்புகளில் எழுதப்பட்ட புத்தகங்கள்—இலைகளில் எழுதப்பட்ட புத்தகங்கள்—மரப்பட்டைகளில் எழுதப் பட்ட புத்தகங்கள்—இன்று நமது நூல் நிலையங்களைக் கவின்பெறச் செய்துகொண்டிருக்கும் அழகிய புத்தகங்கள் ஆகிய எல்லாவற்றையுங் கண்டேன். நான் நூல் நிலையங்களைப்பற்றிக் குறிப்பிடும் போது, எனக்குப் பிளாட்டோவின் கூற்று நினைவுக்கு வருகிறது; "நூல் நிலையம் ஒன்றைக் கொண்டிருக்கும் வீடு, உயிரோடு நிலவும் வீடாகும்."

நான் அவர்களின் பல்வேறுவகை உழவுக் கருவிகளையும் கண்டேன்; எருதின் கொம்பைக் கரடுமுரடான கழியோடு, வைககோல் பிரியால் கட்டிச் செய்யப்பட்ட கலப்பையிலிருந்து, நிலத்தின், எல்லாத் தன்மைகளையும் அறிந்துகொண்டு, உழுவதற்கேற்ற வகையில் அமைந்த இற்றைக்கால உயர்தர உழவுக் கருவிகள் வரை பலவற்றையும் கண்டேன்.

இப்படிப்பட்ட பொருள்களையெல்லாம் பார்க்கும் போது, மனிதன் தன்னுடைய அறிவையும் உழைப்பையும் ஒன்று சேர்த்கதன் மூலம்தான் முன்னேறினன்—இயற்கை ஆற்றல்களோடு பங்கு கொண்டதன் மூலம்தான் முன்னேறினன்—சூழ்நிலைகளைத் தனககு நலம்பயக்கும் முறையில் மாற்றிக்கொள்ளக் கற்றுக் கொண்டதன் மூலம்தான் முன்னேறினன்-அச்சத்தளையினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டதன் மூலம்தான் முன்னேறினன்—கடவுளின் நம்பிக்கையை இழந்த காரணத்தால்தான் முன்னேறினன்; என்ற முடிவுக்கு நான் வரவேண்டியவனுனேன்.

நான் அதே சமயத்தில் பலவகைப்பட்ட மனித மண்டை ஓடுகள் வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்; நீண்டர்தால் (Neanderthal) என்ற இடத்தில் வெட்டி எடுக்கப்பட்ட மண்டை ஓட்டையும், மத்திய ஆஃப்ரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட மண்டை ஓடுகளையும், ஆஸ்திரேலியாவில் வாழ்ந்த வேட்டைககாரர்களின் மண்டை ஓடுகளையும், பஸிபிக் மாபெருங் கடலில்,வெகு தொலைவிற்கு அப்பால் இருக்கும் தீவுகளிலிருந்து எடுத்துவந்த மண்டை ஓடுகளையும், கடைசித் தலைமுறை மக்களின் மண்டை ஓடுகளையம் அடுக்கடுக்காகக் கண்டேன்.

அந்த மண்டை ஓடுகளின் உள்ளே இருந்த சத்துப் பொருள்களிடையே எவ்வளவு வேறுபாடுகள் காணப்பட்டனவோ, அவ்வளவு வேறுபாடுகள் மண்டை ஓட்டுக்களிடையேயும் இருக்கப் பார்த்தேன். அப்பொழுது, எனக்குத்தானே நான் சொல்லிக்கொண்டேன்: "அறிவு வளர்ச்சியின் விளைவேயல்லாமல் வேறொன்றில்லை" என்று. மரப்படகுக்கும்—நீராவிக் கப்பலுக்கும், கற்கருவிக்கும்—கனமான பீரங்கிக்கும்—மஞ்சள் மண் ஓவியத்திற்கும்—தப்பட்டைக்கும்—இற்றைக்கால யாழ்க் கருவிக்கும் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ, அவ்வளவு வேறுபாடுகளே அந்தத் தாழ்ந்த தர—உயர்ந்த தர மண்டை றமாகவும் ஓடுகளுக்கிடையே இருந்தன,

இந்த மண்டை ஓட்டு வரிசையிலே முதலாவதும், மிகத் தாழ்ந்த தரத்தைச் சேர்ந்ததுமான மண்டையோடு, தத்தித்தத்தி நடந்த மனிதனின், அற்ப சொற்ப மனித உணர்ச்சிகள் ஊசலாடிய ஒரு குகை போலக் காணப்பட்டது; இறுதியானதும், மிக உயர்ந்த தரத்தைச் சேர்ந்ததுமான மண்டை ஓடுகள், அன்பு-மகிழ்ச்சி-விடுதலை ஆகியவை தவழும் மாமன்வும் காணப்பட்டன.

இதெல்லாம் மூளையின் வலிவு—அறிவு வளர்ச்சியின் விளைவு!

விடுதலை வேட்கை யுணர்ச்சியிடம் நமது முன்னோர்களைவிட, நாம் மிக மிக நெருக்கத்தில் நிற்கிறோமென்றால், சராசரி மனிதனைக் காட்டிலும் நிரம்பிய அறிவும், மூளை வலுவும் கொண்டிருக்கிறோம் என்பது பொருளாகும்.

இப்பொழுது நீங்கள் என்னோடு சேர்ந்து, நாணயமான முறையில் சிந்திக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். நான் எதை நம்புகிறேனோ—நான் எதை நிலைநாட்ட விரும்புகிறேனோ, அதில் உங்களுக்கு வேறுபாடு உணர்ச்சி இருக்காது என்று கருதுகிறேன். நான் உங்களை நேர்மை யுணர்ச்சி கொண்டு சிந்திக்கச் சொல்கிறேன்—மத உணர்ச்சியை, மத சம்பந்தமான கருத்துக்களைச் சிறிது நேரம் மறந்திடுங்கள். வெறும் ஆடவர் — பெண்டிர் என்ற உணர்ச்சியோடு சிறிது நேரமளவாவது நீங்கள் இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மனிதன் மரப்படகில் ஏறிக்கொண்டு, தப்பட்டையின் இசையை நுகர்ந்து கொண்டிருந்த காலத்தில், மன்னன் ஒருவனும்—மதக்குரு ஒருவனும் இருந்ததாக வைத்துக்கொள்ளுங்கள். மரப்படகைப் பற்றி அவர்கள் என்ன சொல்லியிருந்திருப்பார்கள்?—"மரத்தை உட்குடைந்து செய்யப்பட்ட அந்த மரப் படகைப்போல், வேறு படகு ஒன்றை மனிதனால் செய்யமுடியாது: மனிதனின் மிக உயர்ந்த தயாரிப்பு அதுதான்; ஊழிக்காற்றும், ஊழி வெள்ளமும் தோன்றிய காலத்தில் தோற்றமளித்த கடவுள் சொல்லித்தந்த அமைப்பே அதுதான்; எந்த ஒரு மனிதனாவது, அந்த மரப்படகைப் புதுப்பிக்க எண்ண, அதில் பாய்மரம் ஒன்றைக் கட்டி, அதைக் கடலில் மிதக்கவிட்டு, அதில் ஏறிச் செல்லலாம் என்ற யோசனையைக்கூறினால், அவன் நம்பிக்கைத் துரோகி என்ற குற்றத்திற்கு உள்ளாவதோடு, உயிரோடு கம்பத்தில் கட்டிவைத்து எரிக்கப் படவேண்டியவனுமாவான்" என்றுதானே சொல்லியிருந்திருப்பார்கள்! அப்படியானால், அதற்கு உங்களது தீர்ப்பு என்ன? நேர்மையான தீர்ப்புக்கு இடங்கொடுங்கள்!

அவர்களின் கூற்றை நிலையானதெனக் கொண்டிருந்தால், உலகநாடுகளுக்கிடையே கடல் போக்குவரத்து ஏற்பட்டிருக்குமா?

மன்னன் ஒருவனும், மதக்குரு ஒருவனும் இருந்ததாக வைத்துக் கொள்ளுங்கள்! மதக் குரு ஒருவன் அவசியம் இருந்திருப்பான் என்றே ஊகிக்கிறேன்; ஏனென்றால், அது அவ்வளவு அறியாமை நிரம்பிய காலம்! அந்த மன்னனும், மதக்குருவும் "மனிதனால் சிந்தித்துச் செய்யக்கூடிய இசைக் கருவிகளிலே, தப்பட்டைதான் மிக மிக உயர்ந்த இசைக் கருவியாகும்; ஆண்டவன் வாழும் மேல் உலகத்தில் இருப்போர், இதனுடைய இசையைத் தான் நுகர்ந்துகொண்டு இருக்கிறார்கள்; மேல் உலகத் தேவதை யொன்று, செஞ்ஞாயிற்றின் கதிர்களில் பட்டு மின்னிக்கொண்டிருக்கும் பஞ்சுபோன்ற மேகத்தின் முனையில் உட்கார்ந்துகொண்டு, தப்பட்டையை அடித்துக்கொண்டிருக்க, அதன் இசையிலே, அந்தத் தேவதையே மெய் மறந்துபோக, அதனால் தப்பட்டைத் தவறிக் கீழேவிழ, அப்படி விழுந்த தப்பட்டையே நமது கைக்கு வந்து சேர்ந்தது; அந்த இசைக் கருவியை மேலும் புதுப்பிக்க முடியும் என்று சொல்லி யாராவது, அதன் முன்புறமாகப் பலகை ஒன்றை வைத்து, நான்கு நரம்புகளை மாட்டி, மரச்சக்கைத் துண்டு ஒன்றை அவற்றிற்கு முட்டுக்கொடுத்து, மயிரிழையால் இழுத்துக் கட்டப்பட்ட வில்லொன்றின் மூலம அந்தக் கருவியைமீட்டி, இனிய இசையைப் பிறப்பிக்கச் செய்யமுடியும் என்று கூறினல், அவன் மதவிரோதி என்ற குற்றத்திற்குள்ளாகிக் கொலைத் தண்டனையைப்பெறுவான்" என்று சொல்லுவதாக வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது நான் உங்களைக் கேட்கிறேன்:

கூறுங்கள். இசையுலகில் அது எந்தவித நிலையை உண்டாக்கியிருக்கும்? அந்த ஆணைவழியே காலம் வளர்ந்து வந்திருக்குமானால், புகழ்பெற்ற இசை வல்லுநர் பலரின் அரிய இன்னிசையை மனித சமுதாயம் இதுநாளில் கேட்டிருக்கமுடியுமா? நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்!

மன்னன் ஒருவனும்—மதக்குரு ஒருவனும் இருந்ததாக வைத்துக் கொள்ளுங்கள்! அவர்கள், "கரடுமுரடான கழியினாலான கலப்பை போன்றதொன்று, இனி யாராலும் கண்டுபிடிக்கமுடியாது; இந்தக் கலப்பையின் முதல் வடிவு பக்திமானான உழவன் ஒருவனுக்கு, அவன் கனவில் ஆண்டவனால் கொண்டுவந்து கொடுக்கப்பட்டதாகும்; வைக்கோல் பிரியும் ஆண்டவன் கற்றுக் கொடுத்தவொரு அற்புதமாகும்; யாராவது ஒருவன் இந்தக் கலப்பையைப் புதுப்பிக்கமுடியும் என்று சொல்லி முன் வந்தால், அவன் ஒரு நாஸ்திகனாவான்" என்று ஆணை பிறப்பிப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஆணை உழவுத் தொழில் விஞ்ஞானத்தில் என்னவித பலனைக் கொடுத்திருக்கமுடியும் என்பதை நீங்களே ஆராய்ந்து தீர்ப்புக் கூறுங்கள்!

"எங்களுடைய உற்றார் உறவினரான கிருத்தவர்களைக் கொல்லுவதற்கு, எங்களுக்கு நல்ல ஆயுதங்கள் தேவைப்படுகின்றன; நாங்கள் மிக நேர்த்தியான கலப்பைகள்—இனிய இசை—அழகிய ஓவியங்கள் ஆகியவற்றை விரும்புகிறோம்; யாரொருவன் எங்களுக்கு நல்ல ஆயுதங்களையும், நல்ல இசையையும், நல்ல துணிமணிகளையும், நல்ல வீடுகளையும் தருகிறானோ, அவனுக்கு நாங்கள் செல்வத்தை வாரிவழங்குவோம்-அவனுக்குப் பெருமையோடு முடிசூட்டுவோம்"

என்று நாளடைவில் மக்கள் கூறத் தொடங்கினார்கள்; மன்னனும் கூறத் தொடங்கினான்; மதக் குருவுங்கூடக் கூறத்தொடங்கினான்! பொருள்களைப் புதுப்பிக்க வேண்டும் என்ற விழைவு ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்பட்டது. கற்கருவி கனமான பீரங்கியாக மாறுவதற்கும், மரப்படகு நீராவிக் கப்பலாக வளர்வதற்கும், மண்கோடுகள் வண்ண ஓவியமாகத் திருந்துவதற்கும் அதுதான் காரணம். கரடுமுரடாக உடைந்துகிடந்த கற்கள், புகழத்தக்க சிலைகளாக மாறியதற்கும் அதுதான் காரணம்.

மரப்படகில் ஏறியவனுக்கும், தப்பட்டையின் இசையைக் கேட்டு மகிழ்ந்தவனுக்கும், கரடு முரடான கழியினாலான கலப்பையைக் கொண்டு உழுது பயிரிட்டவனுக்கும், சொந்தத்தில் தனித்தனி மதக் கருத்துக்கள் இருந்தன என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. மரப்படகில் ஏறிக் காலங்கழித்தவன், பழமைக் கருத்திலேயே மூழ்கிக்கிடந்தான். ஆகையால், அவன் ஐயப்பாடுகளால் அவதியுறவில்லை, அவன் அமைதியான வாழ்க்கையமைப்போடு, அமைதியாகவே வாழ்ந்து மடிந்தான். அவன் நரகத்தை நம்பினான். உண்மைக் கருத்துக்களை ஒட்டி, தம்முடைய உள்ளத்தில் எழுந்த ஐயப்பாடுகளைத் தெரிவித்த குற்றத்திற்காகச் சிலர் நெருப்பில் வாட்டி வதைக்கப்படுவதையும், சுட்டெரிக்கப்படுவதையும் கண்டு அஞ்சிய அவன், ஐயப்பாடு ஏதும் கொள்ளாமல், மேல் உலகத்தில் வாழ்வதையே சிறப்பாகக் கருதினன் போலும்!

இப்படிப்பட்ட மனிதனின் பரம்பரையில் தோன்றியவர்கள் ஏராளமானவர்கள் என்னும்போது, வருத்தமும், வாட்டமும்தான் ஏற்படுகின்றன.

அறிவுடையவர்களைக் காட்டிலும், அறிவில்லாதவர்களின் எண்ணிக்கை இயற்கையிலேயே பெருகிக் கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்காததொரு நிகழ்ச்சியாகும். மரப்படகில் ஏறி உலாவிய மனிதன், தானே ஒரு பேயைக் கற்பித்துக் கொண்டு அதனை நம்பி வந்தான். அவனுடைய பேய்; மாட்டைப் போல் இரட்டைக் குளம்புடையதாய், ஒருகாலுடையதாய், கொடிய கூர்மையான ஈட்டியை ஏந்தியதாய், கந்தக ஆவியை மூச்சாக விடுவதாய் நம்பப் பட்டது. பேய் கிட்டத்தட்ட கடவுளுக்குச் சமமான நிலையையுடையதாகவே கருதப்பட்டது; கடவுளைப்போல் அமைப்பில் அவ்வளவு பெரிதாகக் கருதப்படாவிட்டாலும், அறிவில் சற்றுப் பெரிதாகவே கருதப்பட்டது. சென்ற ஆயிரம் ஆண்டுகாலமாக இந்தப் பேயின் வளர்ச்சியில் குறிப்பிட்ட மாறுதல் ஏதேனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

மரப்படகில் காலந்தள்ளிய மனிதன், கடவுளை ஒரு கொடுங்கோலன் என்றே நம்பினான். அவனவன் அவனவனுடைய உயர்ந்த கொள்கைகளுக்கேற்ப வாழ்ந்தால், கடவுள் அந்தகையோரைத் தண்டிப்பான் என்று நம்பினான். மேலும் அவன் உலகம் தட்டையானதென்றே நம்பினான். நரகத்தில் நெருப்பில் போட்டு எரிப்பது, கந்தகக்குழம்பில் போட்டுக் கொதிக்கவைப்பதும் உண்மை என்றே அவன் நம்பினான். அவன் அவனுக்கேற்றபடி அரசியல் கொள்கையையும் கொண்டிருந்தான். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்றபடி, "வல்லமை வகுப்பதே நியாயம்" என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தான். அந்தக் கோட்பாட்டை மாற்றி "நியாயம் வகுப்பதே வல்லமை" என்று ஏற்படுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாயிற்று என்னலாம்.

நான் கேட்க விரும்புவதெல்லாம் மனிதனின் இசைக் கருவியை மாற்றம் செய்வதற்கு எவ்வுளவு வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட்டனவோ, அவ்வளவு வாய்ப்பும் வசதியும் அவனுடைய கொள்கையை வளர்ச்சியுறச் செய்வதற்கு ஏன் அளிக்கப்படக் கூடாது என்பதுதான்; மனிதனுடைய மரப்படகை வளர்ச்சியுறச்செய்ய எவ்வளவு வாய்ப்பு அளிக்கப் பட்டதோ, அவ்வளவு ஏன் அவனுடைய அரசியல் கொள்கையை வளர்ச்சியுறச் செய்வதற்கு அளிக்கப் படக்கூடாது என்பதேயாகும். அவ்வளவுதான் நாம் வேண்டுவது! ஒவ்வொரு துறையிலும் மனித உணர்வு வளர அதேஉரிமை அளிக்கப்படவேண்டும் என்பதே என்கோரிக்கை. அந்த ஒரு குற்றத்தைத்தான் நான் செய்கிறேன்! நாம் சிந்திப்போம்-என்றுதான் நான் கூற விரும்புகிறேன்! நம்மில் ஒவ்வொருவரும் அவரவரது கருத்தை வெளியிடுவோம். நாம் கண்டு பிடிப்பவர்களாக மாறுவோம்—பின்பற்றுபவர் களாகவோ, தொத்திக்கொண்டு நிற்பவர்களாகவோ, தாவிக்கொண்டிருப்பவர்களாகவோ, நாம் ஒருபொழுதும் இருக்கவேண்டியதில்லை! மேல் உலகத்தில், எல்லையறு பரம்பொருளாக ஒருவன் இருப்பானேயானல், அவன் கோழைகளினுடையவும், ஏமாற்றுக் காரர்களினுடையவுமான வழிபாட்டை ஏற்றுக் கொண்டு, ஒரு நாளும் மனக்களிப்பு அடையமாட்டான்! நாணயமான நம்பிக்கையின்மை—நாணயமான மதமாறுபாடு—நாணயமான நாஸ்திகம் ஆகிய இவைகள், பக்தியின்பேரால் செய்யப்படும், வெளிவேட ஏமாற்றுத்தனத்தால் வீசப்படும் தீ நாற்றத்தை எங்கும் எப்பொழுதும் போக்கும் நன்மணமாகத்தான் கமழும்—'மேல் உலகில்'கூட அப்படியேதான் கமழ்ந்துதீரும்!

என்னுடைய கோட்பாடு இதுதான்—"நீங்கள் கோருகிற ஒவ்வொரு உரிமையையும் மற்றவர்க்கும் கொடுங்கள். இயற்கையின் ஆற்றல்கள் நன்கு ஆட்சி செய்யும்படி உங்கள் உள்ளத்தைத் திறந்துவையுங்கள். அன்புள்ளத்தோடு புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுங்கள். நாம் அனைவரும் முன்னேறுவோம்."

மதவாதி தன்னுடைய உணர்வு என்னும் கப்பலை, வெய்யலில் காய்ந்து கருகும்படி, வைதிகம் என்ற துறைமுகத்திலே நிறுத்தி வைத்திருக்கிறான். அவன் தன்னுடைய கப்பலிலுள்ள பழைய எண்ணங்கள் என்ற பாய்கள், பழைய கோட்பாடுகள் என்ற கம்பங்களிலே உராய்ந்து கொண்டிருப்பதைக்கண்டு மகிழ்கிறான். கப்பலிலுள்ள கீல்களும், பக்கப்படுதாக்களும் எப்பொழுதும் திறந்துகிடந்து வெய்யலில் உலருவதையே அவன் பெரிதும் விரும்புகிறான். "என்னுடைய எண்ணங்களைக் கலைக்காதீர்கள். என்னுடைய உள்ளத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவராதீர்கள். என்னுடைய உள்ளத்தை நான் வரையறுத்து வைத்துக்கொண்டுவிட்டேன். நம்பிக்கையற்ற தன்மையை ஏற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. என்னை முற்போக்கில் தள்ளாதீர்கள். என்னைப் பிற்போக்கிலேயே போகவிடுங்கள்" என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்வதை அவன் பேரின்பமாகக் கருதுகிறான்!

என்னைப் பொறுத்தவரையில், நான் என்னுடைய கப்பலை அலைகடலின் நடுவே கொண்டு செலுத்தவே விரும்புகிறேன். காற்றும், அலையும், உடுக்களும் என்னை எங்கெல்லாம் அழைத்துச் செல்கின்றனவோ, அங்கெல்லாம் செல்லவே விரும்புகி

றேன். பெருமிதமான சூறவளியில் சிக்கிக்கொள்வதை நான் விரும்பினாலும் விரும்புவேனேயொழிய, எப்படிப்பட்ட வைதிகத் துறைமுகமாக இருந்தபோதிலும், அதில் கிடந்து வெய்யலில்வாட மட்டும் ஒருநாளும் விரும்பமாட்டேன்.

காலத்திற்குக் காலம் நாம் வளர்ச்சி பெற்றுவருகிறோம் என்பதுமட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும். இன்றுள்ள வைதிகர்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருந்தால், மதக் கருத்துக்கு மாறுபட்டவர்கள் என்ற குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு எரிக்கப்பட்டிருப்பார்கள். இன்று, நான் என்னுடைய கருத்தை வெளியிடக்கூடாது என்று மறுத்துரைக்கும் மந்திரிமார்கள், அப்பொழுது இருந்திருந்தால், மத விரோதிகளைத் தள்ளும் சிறைச்சாலையிலே தள்ளப்பட்டிருப்பார்கள். சமுதாய முன்னேற்ற வீரர்கள் சென்ற வழியில்தான் மடங்களும், மாதாகோயில்களும் அறிந்தோ அறியாமலோ சென்றன. ஒரு நூற்றாண்டுக்குமுன் எந்தக் கருத்துக்களைக் கடைபிடித்த குற்றத்திற்காக மதவிரோதிகள், நம்பிக்கையற்றவர்கள் என்று சீர்திருத்தவாதிகள் கருதப்பட்டனரோ; அதே கருத்துக்களைத்தான் இன்றுள்ள மதவாதிகள் கடைபிடித்துவருகிறார்கள். கோயில்—அது எப்படிப்பட்டதாக இருந்துவந்திருந்த போதிலும், இப்பொழுது எவ்வளவோ முன்னேற்ற மடைந்துவிட்டது என்னலாம். கிருத்தவ மதக்கருத்துக்களைஎதிர்ப்பவர்களும்,மறுப்பவர்களும் மதத்திற்குள்ளேயே எதிர்ப்பாளர்களாக இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டுள்ளது. கிருத்தவக்கோயில் முன்னேற்றம் அடைந்திருக்காவிட்டால், இங்கு நான் என்னுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கக்கூட முடியாது.

மனிதன் தன்னுடைய அறிவை எந்த அளவுக்குத் தன்னுடைய தொழிலோடு தொடர்பு படுத்திப் பார்க்கிறானே, அந்த அளவுக்கு முன்னேற்றத் துறையில் முன்னேறி வருபவனாக இருக்கிறான். கப்பல் மாலுமி காற்றையும், கடலலையையும் அடக்கும் ஆற்றலைப் பெறாமலும், கடல் நீரோட்டங்களின் தன்மைகளையும், கடலின் கொந்தளிப்பையும் அறியாமலும், கடவுளை நம்பியே காலங்கள்ளிவிடலாம் என்ற மூட நம்பிக்கையில் இருந்துவிடுகிறான். அதுபோலவே உழவன் பருவ காலத்தைத் தன்னால் அடக்கி ஆளமுடியாத நிலையில் இருந்துகொண்டு, தன்னுடைய வாழ்வைவளமாக்கிக்கொள்ள எதிர்காலத்தை நம்பிக்கொண்டிருக்கிறான். ஆனால் இயந்திரத் தொழிலாளியோ, ஒரு சுழலும் உருளை நின்றுபோய் விட்டால், உடனே முழங்கால் படியிட்டுக்கொண்டு ஆண்டவனின் உதவியைக் கேட்டு நிற்பதில்லை. பகுத்தறிவு என்று ஒன்று இருப்பதை அவன் அறிகிறான். அதை அவன் பயனபடுத்துகிறான். அந்த இயந்திரத்தில் ஏதோ ஒன்று பெரிதாகவோ, சிறிதாகவோ இருப்பதை அறிகிறான்; அந்த இயந்திரத்தில் ஏதோவொன்று கெட்டிருப்பதாக உணருகிறான்; உருளை சுழல ஆரம்பிக்கும் வரையில் இயந்திரத்தில் அங்கும் இங்கும் சில பகுதியைச் சிறிதாகவோ பெரிதாகவோ செய்து, சரியாக ஆக்க முயலுகிறான். மனிதன் எந்த அளவுக்குச் சூழ்நிலைகளுக்கு அடிமைப்படாமல் விலகுகிறானே—எந்த அளவுக்கு வெட்பம், பனிப்படலம், பனிக்கட்டி, இடி முதலியவைகளினின்றும் தப்பித்துக் கொள்ள முயலுகிறானே-எந்த அளவுக்குத் தன்னைத்தானே கட்டுப்படத்திக் காப்பாற்றிக்கொள்ளத் தெரிந்திருக்கிறானே — எந்த அளவுக்கு இயற்கையின் தடைகளைத் தாண்டிச் செல்ல கற்றுக்கொண்டிருக்கிறானே, அந்த

அளவுக்கு அறிவிலும், உடலுறுதியிலும் முன்னேற்றம் அடைந்தவனாகிறான். மனிதன் வளர்ச்சியுற, வளர்ச்சியுற, அவனுடைய சொந்த உரிமைகளுக்கு அதிக மதிப்பு அளித்தவனாகிறான். விடுதலை அழகுள்ளதும், அற்புதம் வாய்ந்ததுமான பொருளாகிறது! அவன் தன் சொந்த உரிமைகளை மதிப்பிடத் தொடங்கிவிட்டால், பிறருடைய உரிமைகளையும் மதிப்பிடத் தொடங்கிவிடுபவனாகிறான். எல்லாமக்களும், பிறர்க்கு, அவர்கள் கோருகிற எல்லா உரிமைகளையும் கொடுக்கத் தொடங்கும்போது, உலகம் நாகரிகம் வாய்ந்த உலகமாக ஆகிவிடுகிறது!

சில காலத்திற்கு முன்பெல்லாம், மக்கள் மன்னனைக் கேள்வி கேட்க அஞ்சினார்கள்; மதக்குருவிடம் ஐயம்கேட்க அஞ்சினார்கள்; ஒரு மதக் கோட்பாட்டை ஆராய்ந்து பார்க்க அஞ்சினார்கள்; ஒரு புத்தகத்தை மறுத்துரைக்க அஞ்சினார்கள்; நிலைபெற்றுவந்த ஒரு கொள்கையை ஒதுக்கித்தள்ள அஞ்சினார்கள்; பகுத்தறிந்துபார்க்க அஞ்சினார்கள்; சிந்தித்துப்பார்க்க அஞ்சினார்கள்! செல்வச் செருக்கின் முன்னால் இந்த உலகையே பணியவைத்தார்கள்; பட்டம் பதவிகளுக்கு முன்னால் அவர்கள் ஒரு பொருளாகவே காட்சியளித்தார்கள். இவையெல்லாம் மெதுவாக, ஆனால் உறுதியாக மாறிவரத்தான் செய்கின்றன. பணக்காரர்கள் என்ற காரணத்துக்காகவே ஒரு சிலர் முன் நாம் மண்டியிட்டு இனி ஒருபொழுதும் வணங்கப் போவதில்லை. நமது தந்தைமார்கள் பொன்னாலான கன்றுக்குட்டியை வணங்கிவந்தார்கள். ஆனால் இன்றுள்ள அமெரிக்கர்கள் அதைவிட மிகத் தாழ்வானமுறையில், கன்றுக் குட்டியாலாகும் பொன்னை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். கன்றுக்குட்டிகூட இந்த வேற்றுமையை அறியத் தொடங்கிவிட்டது!

மன்னனாக இருப்பதோ, அல்லது மன்னர் மன்னனாக ஆவதோ ஒருபெரிய மனிதனின் பேராசையை நிறைவேற்றித் தருவதாக இருப்பதில்லை. கடைசி நெப்போலியன், பிரெஞ்சுப் பேரரசின் மன்னர் மன்னனாக இருப்பதிலேமட்டும் மகிழ்ச்சி கொள்ளவில்லை. தலையிலே பொன்னாலான முடியைத் தாங்கிக்கொண்டிருப்பதிலேமட்டும் அவன் மகிழ்ச்சி கொள்ளவில்லை. தான் பிறரால் மதிப்பிடத்தக்க அளவுக்கு அறிவாற்றல் உடையவன் என்பதற்கான எடுத்துக்காட்டு ஏதேனும் இருக்கவேண்டும் என்று அவன் விரும்பினான். ஆகையினாலேயே அவன் ஜூலியஸ் ஸீஸரின் வாழ்க்கை வரலாற்றை எழுதினான்—அதன் மூலமாகவாவது பிரெஞ்சு இலக்கியப் பெருமன்றத்தில் உறுப்பினனாக முடியுமா என்று எதிர்பார்த்தான். பேரரசர்கள், குறுநில மன்னர்கள், மடாதிபதிகள் ஆகியவர்களால், கற்றறிந்த பேரறிஞர்கள் பெற்ற அளவுமிக்கப் புகழைப் பெற்று எந்தக் காலத்திலும் நிற்கமுடியவில்லை. வில்லியம் என்ற அரசனையும், ஹெக்கேல் என்ற தத்துவ அறிஞனையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஆண்டவன் அருளாலே அதிகாரத்தை வாங்கித்தருவதாகக் கூறிக்கொண்டிருந்தவர்களின் பிடியிலே அந்த மன்னன் சிக்கிக்கிடந்தான். அறிவுத் துறையில் உயர்ந்துவிளங்கிய ஹெக்கேல், முடிசூடிய மன்னனைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு உயர்ந்தல்லவா விளங்கினான்!

இந்த உலகம் இப்பொழுதுதான் அறிவையும், பேராற்றலையும், இதய அன்பையும் பாராட்டத் தொடங்கியிருக்கிறது!

நாம் எப்படியோ முன்னேறிவந்துள்ளோம்! ஒவ்வொரு அற்புதமான, ஆண்மையான செயலைச்

செய்யவும், எவ்வளவோ உயர்ந்த, வீரஞ் செறிந்த தியாகம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தியாகச் செயலால் ஏற்பட்ட பலனைத்தான் இப்பொழுது நாம் அறுவடை செய்து வருகிறோம். நாம் இப்பொழுது ஏந்தியிருக்கும் அறிவுச் சுடர்ப்பந்தத்தைச் சற்று அருமையாகவும், அழகாகவும் எரியச் செய்து வருங்காலத் தலைமுறைக்குக் கொடுகக நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.

இந்த உலகம் எவ்வளவு துன்பப் பட்டிருக்கிறது என்பதை நினைக்கும்போதும்; நம்முடைய தந்தைமார்கள் எவ்வளவு அடிமைகளாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும், அரியணையின் காலடியிலேயும், ஆண்டவன் பீடத்தின் புழுதியிலேயும் எவ்வளவு வளைந்தும், தவழ்ந்தும் கிடந்திருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் தங்களைத் தாங்களே எவ்வளவு தாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இருப்புப் பட்டயம் அணிந்திருந்த மூடநம்பிக்கையின் முன்னாலும், முடிசூட்டிக்கொண்டிருந்த மூடநம்பிக்கையின் முன்னாலும் எவ்வளவு தன்மதிப்பு அற்றவர்களாக இருந்துவந்திருக்கிறார்கள் என்பதையும் நினைக்கும்போதும் நானே ஆச்சரியப்பட்டுப் போகிறேன்.

ஒரு மனிதன் ஐம்பது ஆண்டுகள் கூட வாழமுடியாதபடி, அவ்வளவு தகுதியற்ற நிலையில் இந்த உலகம் வைக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 1808-ம் ஆண்டு வரையிலும்கூட கிரேட் பிரிட்டன், அடிமை வாணிகத்தை அழிக்கவில்லை. அதுவரையில் அந்நாட்டின் நீதிபதிகள், நீதியின் பேரால்; நீதி மன்றத்தில் வீற்றிருந்துகொண்டும், மதக் குருமார்கள் அகண்ட அன்பின்பேரால் அறவுரை மன்றத்தில் அமர்ந்துகொண்டும், அடிமைகளை அடிமைக் கப்பலிலே குவித்துக்

கொண்டிருந்தார்கள்—கப்பற் கொள்ளை மூலமும், கொலை மூலமும் கிடைக்கும் வருவாய்களை வைத்துக் கொண்டு மகிழ்ச்சி கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். அந்த ஆண்டு வரையில், அமெரிக்காகூட தன் அடிமை வாணிகத்தை அகற்றிவிடவில்லை. அது தன்னுடைய நாட்டிற்கும், பிறநாட்டிற்கும் அடிமை வாணிக முறையைக் கையாளவில்லை என்றாலும், தன்னுடைய பகுதிகளுக்கிடையே அடிமை வாணிகத்தை நடத்திவந்தது. 1833-ம் ஆண்டு, ஆகஸ்டு 28-ம் நாள் வரையில், கிரேட் பிரிட்டன் தன் குடியேற்ற நாடுகளில் அடிமை வாணிகத்தை ஒழிக்கவில்லை. 1863-ம் ஆண்டு ஜனவரி 1-ம் நாள் வரையில், அமெரிக்காவில் அடிமை வாணிகம் அழிக்கப்படவில்லை பெருந்தன்மையும், வீரமும்படைத்த வடபகுதியின் துணைக்கொண்டு, குடியரசுத் தலைவனான ஆப்ரஹாம்லிங்கன், வானளாவப் பறந்துகொண்டிருக்கும் நமது கொடியை மாசுமறுவற்ற வானம்போல் தூய்மையுடையதாகச் செய்தான்.

ஆப்ரஹாம் லிங்கன், என் கருத்துப்படி, அமெரிக்கக் குடியரசுத் தலைவர்களிலே, பல வகையிலும் மிக்கப் புகழ்பெற்ற பெருந்தலைவனாவான். அவன் கல்லறைமீது பொறிக்கப்படவேண்டிய சொற்கள்: “இந்த உலக வரலாற்றிலேயே, தன்னிடத்தில் முழு அரசியல் அதிகாரமும் ஒப்படைக்கப் பட்டிருந்தும், அவற்றைக் கருணையின் பக்கம் அல்லாமல், வேறு முறையற்றவழியில் ஒருபோதும் செலவழிக்காத ஒருவன் இங்கே தூங்குகிறான்” என்பவையே யாகும்.

அடிமை வாணிக முறையிலே நாம் எவ்வளவு காலம் தொத்திக்கொண்டிருந்திருக்கிறோம் என்பதையும், அடிமைகளிடம் வேலை வாங்குவதற்காக, அவர்களின்முதுகில் எவ்வளவு அடிகள் கொடுத்

திருக்கிறோம் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். இந்த நாட்டின் மதபீடம், சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக இயேசுவின் சிலுவையை சாட்டைக் கம்பாக மாற்றிவைத்து வந்திருக்கிறது!

கொடுங்கோன்மையின் ஒவ்வொரு செய்கையையும், அடிமைத்தனத்தின் ஒவ்வொரு முறையையும், என்னுடைய உடலில் ஓடும் ஒவ்வொருதுளி குருதியினாலும் அருவருக்கிறேன்; வெறுக்கிறேன்! வலுக்கட்டாயத்தை நான் வெறுக்கிறேன்; உண்மை விடுதலையை நான் விரும்புகிறேன்!

விடுதலை என்று நான் எதைக் குறிப்பிடுகிறேன்? விடுதலை—உடலைப்பற்றியதாகக் கொள்ளும்போது, மற்றவரின் இன்ப வாழ்வுக்குத் துன்பம் விளைவிக்காத எந்த ஒரு செயலையும் செய்ய உரிமை வேண்டும் என்னும் பொருள்படுவதாகும். விடுதலை—உள்ளம் பற்றியதாகக் கொள்ளும்போது, தவருகவோ, சரியாகவோ சிந்திக்க முழு உரிமையும் வேண்டும் என்னும் பொருள்படுவதாகும். சிந்தனையின் மூலமாகத்தான் நாம் உண்மையை அறிய முயலுகிறோம். நாம் உண்மையை முன்கூட்டியே அறிந்திருப்போமேயானல், சிந்திக்கவேண்டிய தேவையேயிருக்காது. இங்கு வேண்டப்படுவதெல்லாம் நாணயமான செய்கையாகும்! ஏதாவது ஒன்றைப்பற்றி என்னுடைய கருத்தை நீங்கள் கேட்கிறீர்கள்; நான் அதுபற்றி நாணயமான முறையில் ஆராய்ச்சி செய்கிறேன். என்னுடைய உள்ளம் ஒருவித முடிவுக்கு வந்தானதும், நான் உங்களுக்கு எதைச் சொல்ல வேண்டும்? என்னுடைய உண்மையான கருத்தையா, அல்லது பொய்யான பிறிதொன்றையா? நான் எதைச் சொல்ல

வேண்டும்? என்னுடைய கைகளில் ஒருநூல் கொடுக்கப்படுகிறது; அது குர்ரான் என்றும், அது ஆண்டவன் அருளாலே எழுதப்பட்டது என்றும் சொல்லப்படுகின்றது. நான் அதைப் படிக்கிறேன்; நான் அதைப் படித்துக்கொண்டிருக்கும்போதே, அதில் கூறப்பட்டிருப்பவை உண்மைக்குப் புறம்பானவை என்று என் இதய உணர்ச்சியும், அறிவுத் திறனும் எனக்கு உணர்த்துகின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது நீங்கள் கேட்கிறீர்கள்; அது பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று. நான் இப்பொழுது துருக்கி நாட்டில் வாழ்வதாகவும், குர்ரானை ஏற்றுக்கொண்டாலொழிய, எனக்கு அலுவல் ஏதேனும் கிடைப்பதற்குவழியே கிடையாதுஎன்பதாகவும் நிலைமை இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்; நான் என்ன பதில் சொல்வேன்? என்னுடையநெஞ்சைத் திறந்துகாட்டி,என் அறிவுக்கு எட்டிய வரையில் அதை நான் நம்புவதற்கில்லை என்று கூறிவிடமுடியுமா? அப்படிக் கூறுவதாக வைத்துக்கொண்டால், அப்படிக் கூறும் என்னைப்பார்த்து, "அந்த மனிதன் அபாயக்காரன்; அவன் ஒரு உண்மையற்றவன்" என்று அந்நாட்டுமக்கள் கூறுவார்களேயானல், அவர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

நான் பைபிள் என்ற நூலைப்படிப்பதாகவும், அதனைப் படித்துப் பார்த்த பிறகு, அது மனிதர்களாலேயே எழுதப்பட்டதாகும் என்ற முடிவுக்கு வருவதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு மந்திரி, "நீ அந்த பைபிளைப் படித்தனுண்டா?" என்று கேட்கிருன். "படித்திருக்கிறேன்" என்று நான் பதிலிறுக்கிறேன். "அது ஆண்டவன் அருள்வாக்காலே எழுதப்பட்டது என்று அதனை நீ நினைக்கிருயா?" என்று கேட்கிருன். அதற்கு நான் என்ன பதிலைச் சொல்

வது? 'மத நூல்கள் அருள் வாக்காலே எழுந்தன என்பதை நான் மறுத்தால், எனக்கு எவ்வித அதிகார அலுவலையும் மக்கள் தரமாட்டார்களே' என்று எனக்குள்ளே நானே நினைத்துக்கொண்டு மாற்றிக் கூற நினைப்பதா? நான் என்ன பதிலைச் சொல்வது? "நான் அதனைப் படித்தேன்; அதனை நான் நம்புவதற்கில்லை" என்று சாதாரணமாகக் கூறுவதுபோல் கூறிவிடவேண்டியது என் கடமையல்லவா? என் உள்ளத்தில் தோன்றியதை, தோன்றியபடியே நான் வெளியிடவேண்டியது முறையா? அல்லது நான் ஏமாற்றுபவனாக மாறி, நான் எப்படி உணர்ந்தேனோ அப்படி உணரவில்லை என்று பாசாங்கு செய்து, எதற்கும் வளைந்து கொடுக்கும் கோழையாகி, என்னை நானே எப்பொழுதும் வெறுத்துக் கொள்ளவேண்டியது முறையா? என்னைப் பொறுத்தவரையில், நான் நேர்மையாகச் சிந்தித்ததைச் சிந்தித்தபடியே வெளியிடும் மனிதனாகவே வாழ விரும்புகிறேன். மனிதத் தன்மையைக் காப்பாற்றும் ஒருவனாகவே நான் எப்பொழுதும் இருக்க விரும்புகிறேன். மனிதத் தன்மையில்லாமல், மத நம்பிக்கையுடைய ஒருவனாக இருப்பதைக் காட்டிலும், மனிதத் தன்மையோடு மத நம்பிக்கையற்ற ஒருவனாக வாழ்வதையே நான் ஆயிரம் மடங்கு சிறந்ததாகக் கருதுகிறேன். தீர்ப்புக் கூறும் இறுதிநாள் என்றொரு நாள் இருந்தால்—எல்லா மக்களும் ஆண்டவன் முன்னிலையில் நிறுத்தப்படும் காலம் என்று ஒன்று வந்தால், அப்பொழுது, நான் நம்பாத ஒன்றை நம்புவதாக வாழ்வு முழுவதும் பாசாங்கு செய்யும் ஒருவனைக் காட்டிலும் உயர்ந்த நிலையிலேயே இருப்பேன் என்பதிலும், என்னுடைய வழக்கில் எனக்குச் சாதகமாகவே 'ஆண்டவனின் தீர்ப்பு கிடைக்கும்' என்பதிலும் எனக்கு முழு நம்பிக்கையுண்டு!

நான் என்னுடைய எண்ணத்தை எண்ணியபடியே வெளியிடுவதென்று முடிவு செய்துள்ளேன். நான் அதை அன்போடு—தெளிவோடு செய்வேன்! நான் அதைத்தான் செய்யவும் போகிறேன்! என்னுடையகருத்தை மொத்தத்தில் ஒப்புக்கொள்கின்றமக்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள் என்பதைநான் அறிவேன்; ஆனல், அவர்கள் தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டுரைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஏழைகள்-பெரும்பாலோர் வாணிகத் துறையிலிருப்பவர்கள். அவர்களுக்குத் தெரியும், தங்களுடைய உண்மையான—நேர்மையான—நாணயமான கருத்தை வெளியிட்டால், அவர்களை ஆதரிக்கவோ, அவர்களோடு வாணிகம் செய்யவோ, மற்றையோர் மறுத்துவிடுவார்கள் என்பது. அவர்கள்தங்கள் குழந்தைகளுக்கு உணவுப்பொருள் தேடித்தரவும், தங்களுடைய மனைவிமார்களைக் காப்பாற்றவும், தங்களுக்கேற்ற இல்லங்களை அமைத்துக் கொள்ளவும், வாழ்க்கை வசதிகளைச் சம்பாதித்துக் கொள்ளவும் விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட ஒவ்வொரு மனிதனும், அவன் வாழுகிற சமுதாயத்தின் இழிதன்மைக்குஒருஎடுத்துக் காட்டாக விளங்குபவனாவான். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய எண்ணத்தை வெளியிடவில்லை என்பதற்காக, அவர்களை நான் குற்றங்கூறவில்லை. நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், "நீங்கள் உங்களுடைய கொள்கைகளை உங்களிடத்திலேயே வைத்துக் காப்பாற்றுங்கள்; நீங்கள் விரும்புகிற மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் கொடுங்கள்; உங்களுடைய கருத்துக்களை உங்களுக்காகநான் வெளியிடுகிறேன்; எந்தக் கோயிலாலும் என்னைத் தொடமுடியாது-நசுக்கமுடியாது-பட்டினி போடமுடியாது—தடுக்கமுடியாது—நிறுத்தி வைக்கமுடியாது; நான் உங்களுடைய கருத்துக்களை வெளியிட்டுப் பரப்புகிறேன்" என்பதாகும்.

மனிதன் முழுக்க முழுக்க சீர்கேடடைந்துவிட்டான் என்று கோயில்களெல்லாம் பறைசாற்றி வருகின்றன. கொடுங்கோன்மைக்கு ஒரு மன்னிப்பு அளிப்பதாகவும், அடிமைத்தனத்திற்கு ஒரு சமாதானங் கூறுவதாகவும் இருக்கட்டும் என்று நினைத்துப் போலும் அவைகள் அப்படிக் கூறி வருகின்றன! மனிதன் சீர்கேடடைந்துவிட்டான் என்பதை விளக்கக் கோவில் ஒன்றுதான் ஒரு உறுதியான சான்றாக இருந்துவருகிறது! உண்மை என்னவென்றால், நாமே நல்லவர்களாகவும் இருக்கிறோம்; நாமேதீயவர்களாகவும் இருக்கிறோம். தீயவர்கள் எனப்படுவோர் சில நல்ல செயல்களைச் செய்வதற்கு ஏற்றவர்களாகவும் இருக்கிறார்கள்; நல்லவர்கள் எனப்படுவோர் சில தீய செயல்களைச் செய்வதற்கு ஏற்றவர்களாகவும் இருக்கிறார்கள். கீழே இருப்பவர்கள் உயர்ந்துபோகவும் முடிகிறது; மேலே இருப்பவர்கள் கீழே சாய்ந்துவிடவும் முடிகிறது. மனித சமுதாயத்தைப் பாபிகள் என்றும், புண்ணியவான்கள் என்றும் இரு கூறாகப் பிரித்துவிடலாம் என்பது முழுக்க முழுக்கப் பொய்யாகும். அடியோடு சீர்கெட்டுப போனவர்கள் என்று யார் மாதாகோயிலால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்தாம், பெரும் பெரும் அழிவுநிகழ்ச்சிகள் ஏற்படும்போதும், ஆடவரும், பெண்டிரும் உயிருக்காக அலறித் துடிக்கும்போதும் விரைந்தோடி, தங்கள் உயிரைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறார்கள். அத்தகையவர்களால்தான் தன்னலமற்ற தியாக உணர்ச்சியும், அன்பின் வழிப் பிறந்த வீர உணர்ச்சியும் செறிந்து காணப்படும் சீரியசெயல்களைச் செவ்வனே ஆற்றமுடிகிறது. அத்தகையவர்களைத்தான் கோடிக்கணக்கான மக்கள் நினைந்து, பாராட்டி, மகிழ்கிறார்கள்; அவர்களின் மறைவுக்காகக் கண்ணீர் மல்கிக் கசிந்துருகவும்

செய்கிறார்கள். மதங்கள் எல்லாவற்றையும்—மதக் கோட்பாடுகள் எல்லாவற்றையும் காட்டிலும், மிக உயர்ந்ததாக விளக்கும் அரிய பொருள்—பகுத்தறிவாகும். கொந்தளிக்கும் கடலின் நடுவிலோ, கொடும் பாறைகளின் இடையிலோ, உருக்குலைந்த துறை முகங்களின் ஓரத்திலோ, கப்பல்கள் உடைந்து அழிவை அணுகும்போது, சிலர் வீரச்செயல்புரிந்து அவ்வழிவினின்றும் அவைகளைக் காப்பாற்றுகிறார்கள். சீறிக்கொண்டெழும் பெருந்தீ எங்கும்பரவிப் பாழ்படுத்தும்போது, அதனை அடக்கி ஒடுக்க அருஞ் செயல் புரிகிறார்கள் சிலர். அப்படிப்பட்ட துன்பந் துடைப்போர் சிலரின் செயல், வானமண்டலத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் உடுப்போல எப்பொழுதும் வரலாற்றில் மின்னிக்கொண்டேயிருக்கிறது. அவர்களுடைய அந்தச் செயல் மூடநம்பிக்கையின் காரணமாக எழுந்த கோட்பாடுகள் அனைத்தையும் பொய்யாக்குகிறது. மதக் கோட்பாடுகள் அனைத்தும், மனித சமுதாயத்துக்கு அச்சமூட்டி, அதனைக்கீழ் நிலைக்குக் கொண்டுபோகவும், அடிமைப்படுத்தவுமே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

மதங்களும், மதக் கோட்பாடுகளும், அவை பற்றிய ஏடுகளும், விதிமுறைகளும், சட்டதிட்டங்களும் மனிதனின் உணர்விலிருந்து விடுதலை வேட்கையையும், பகுத்தறிவையும் எவ்வளவோ அளவுக்கு வேறு பிரித்து எடுத்துவிட்டன.

சிந்திப்பது ஆபத்திற்குரியது என்ற கொள்கை அடியோடு வீழ்ச்சியுறட்டும்! மனிதனை மனிதன் அடிமைப்படுத்தலாம் என்ற மிக மோசமான கோட்பாடு அழியட்டும்! நம்முடைய உள்ளங்களுக்கு விலங்கிடுவதற்கென்று எடுத்துக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு

நடவடிக்கையையும் நாம் மனக்கசப்போடு வெறுத்துத் தள்ளுவோமாக! கடவுள் இல்லை என்றால், நாம் நிச்சயமாகக் கடவுளின் பேரால் எதையும் வணங்கக்கூடாது—எதற்கும் அடிமைப்படக்கூடாது—எதனிடமும் தாள்பணிந்து கிடக்கக்கூடாது. கடவுள் இருக்கிறார் என்றால், அடிமைகளாக யாரும் இருந்திருக்கக்கூடாது!

## 2. பெண்ணுரிமை.

பெண்கள் அடிமைகளின் அடிமைகளாகவே இருந்து வந்திருக்கிறார்கள்! என்னுடைய கருத்துப்படி, பெண்கள், மிகத்தாழ்வான அடிமைநிலையிலிருந்து, மணம் பெறும்வாழ்க்கை நிலைக்கு உயர்வதற்கு, எத்துணையோ கோடிக்கணக்கான ஆண்டுகள் பிடித்திருக்கும். இந்த ஒன்று குறிப்பிடவிரும்புகிறேன்—நான் திருமணம் என்பதை, ஒரு தூய்மையான வழக்கம் என்று கருதுகிறேன் இல்லற வாழ்வு இல்லாமல் மனித முன்னேற்றம் எதுவும் இல்லை; குடும்ப உறவுமுறையில்லாமல்,உயிர் வாழ்வுக்கு ஏற்ற ஊதியம் எதுவும் இல்லை! ஒவ்வொரு நல்ல அரசாங்கமும், நல்ல பல குடும்பங்களால் உருவாகின்றது.குடும்பம் என்பது நல்ல அரசாங்கத்தின் ஒரு சிறு பகுதியாகும். குடும்பத்தின் சீரிய கட்டுக் கோப்பைச் சிதைக்கும் எந்தவொரு செயலும், தீங்குதரக் கூடியதும்-வெறுக்கத்தக்கதுமாகும். திருமண வாழ்க்கையில் நான் முழுநம்பிக்கை கொண்டவனுவேன். திருமண வாழ்க்கையை வெறுப்பதாகச் சொல்லி,மயிரை வளர்த்துக் கொண்டிருக்கும் பாதிரிமார்களும், மயிரைச் சிரைத்துக்கொண்டிருக்கும் பெண்களும் கூறும்கருத்துக்களை, நான் அருவருப்போடு வெறுத்தொதுக்குகிறேன்.

ஏதாவதொரு அழகுள்ள மங்கையின் காதலன்பைப் பெறுவதற்கேற்ற வகையில், தான் வாழ

வேண்டும் என்பதும், அதற்கேற்ற வகையில் தன் அறிவையும், அன்பையும் வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுமே ஒரு மனிதன் கொள்ளக் கூடிய சிறந்த பேராவலாக இருக்கமுடியும். மிகச் சிறப்புடைய ஒருவனின் காதலையும், அன்பு மொழி களையும் அடைதற்கேற்ற வகையில் தன்னைத் தயா ராக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான், ஒரு பெண்ணின் பேராவலாக இருக்கமுடியும். இதுதான் என் கருத்து! காதலன்பும், திருமண வாழ்வும் இல் லாத வகையில், வாழ்க்கையில் எந்தவித வெற்றியும் இல்லை. அன்பும், குழைவு நெஞ்சமும் படைத்த ஒரு பெண்ணுக்கு நீங்கள் பேரரசனாக ஆவதும், அவள் உங்களுக்குப் பேரரசியாக இருப்பதும், அவனியா ளும் அரசனைக் காட்டிலும், எத்துணையோ மடங்கு சிறத்தனவாகும். இந்த உலகினில், நல்ல ஒரு பெண் மணியின் காதலன்பை ஒருவன் உள்ளபடியே கொள்ளைகொண்டு விடுவானேயானால், அவன் ஒரு பிச்சைக்காரனாக இருந்து இறந்தால்கூட, நான் கவ லைப்படமாட்டேன்; அவன வாழ்க்கை வெற்றி பெற்ற தாகிவிடுகிறது.

நான் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன்: பெண்கள் மிகக் கீழான—அடிமை நிலையிலிருந்து, மிக உயரிய மணவாழ்க்கை நிலைக்கு உயருவதற்கு, எத்துணையோ கோடிக்கணக்கான ஆண்டுகள் நிச்ச யம் பிடித்திருக்கும் என்பதை. பெண்டிரே!........நீங் கள் உங்கள் மீது அணிந்திருக்கும் அணிகலங்கள், உங்கள் தாய்மார்களுக்குப் பூட்டப்பட்டிருந்த விலங் குகளை நினைவுபடுத்தும் சின்னங்களைத் தவிர வேறொன்றுமில்லை. காதலன்பனின் கரத்தால் நடுக் கத்தோடு உங்கள் கழுத்தில் பூட்டப்பட்டுள்ள சங்கி லியும், கைகளில் பூட்டப்பட்டுள்ள வளையல்களும்,

இரும்பு வடிவிலிருந்து, ஒளிவீசும் தங்கவடிவிற்கு மாறுவதற்கு நாகரிக வளர்ச்சிதான் முக்கிய காரணமாகும்.

உலகில் நடைபெறும் கேடுகள் அனைத்திற்கும் பெண்கள் செய்யும் குற்றமே பெருங் காரணமாகும் என்று, கிட்டத்தட்ட எல்லா மதங்களும் செப்புகின்றன. இது எவ்வளவு அற்புதமான செய்தி பாருங்கள்!........இது உண்மையாக இருக்குமேயானால், ஆடவரோடு மட்டும் வாழுகின்ற 'சுவர்க்கத்தை' விட, நான் காதலிக்கின்ற பெண்ணோடு, 'துன்பங்கள்' நிறைந்த இந்த உலகில் வாழ்வதையே சிறந்ததாகக் கருதுகிறேன்!

நான் படித்த புத்தகம் ஒன்றின் நினைவு எனக்கு வருகிறது. மறதியின் காரணமாக, அதில் எழுதப்பட்டிருக்கும் அதே சொற்களை என்னால் கூறமுடியாவிட்டாலும், அதன் கருத்துரையை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். எல்லாம்வல்ல பரம்பொருளான கடவுள் ஒரு உலகையும், ஒரு மனிதனையும் உண்டாக்குவது என்று முடிவு செய்தாராம். அவர் ஏதோ சில பயன்தராப்பொருளை எடுத்து ஒரு உலகையும், ஒரு மனிதனையும் உண்டாக்கி, அந்த மனிதனை ஒரு பூந்தோட்டத்தில் உலாவவிட்டாராம். சிறிது நேரத்திற்கெல்லாம், அந்த மனிதன் தன்னந்தனியே இருக்கும் நிலையைக் கடவுள் உணர்ந்தாராம்; புகை வண்டிக்குக் காத்திருப்பது போன்ற நிலையில், அவன் அங்கும் இங்குமாக உலாவிக்கொண்டிருந்தானும்; அவனுக்கு இன்பந் தரக்கூடியது எதுவும் புலப்படவில்லை—செய்திகள் இல்லை—பத்திரிகைகள் இல்லை—அரசியல் நிகழ்ச்சிகள் இல்லை—கொள்கை இல்லை; சாத்தான் அதுவரையில் வெளிப்படாத காரணத்

தால், அவனுக்குத் திருப்தியளிக்கக்கூடிய பொருள் ஏதொன்றுமில்லை! அவனுக்கு ஒரு துணை அவசியம் ஏற்படுத்திவிட வேண்டியதுதான் என்ற முடிவுக்குப் பரம்பொருளான கடவுள் வருகிற வரையில், அவன் அந்தத் தோட்டத்திலேயே அலைந்து கொண்டிருந்தானும்!

ஒரு உலகையும், ஒரு மனிதனையும் உண்டாக்கு, பயன்படாப் பொருள் அனைத்தையும பயன்படுத்தி விட்டபடியால், அவனுக்கு ஒரு பெண் துணையை உண்டாக்க, அவன் உடலிலிருந்தே ஒரு பகுதியை எடுக்க வேண்டியிருந்ததாம். ஆகவே அந்த மனிதனுக்குத் தூக்கத்தை வரவழைத்தாராம்! இந்தக் கதை உண்மையானது என்று நான் சொல்ல வரவில்லை; அதை மறந்துவிடாதீர்கள்!.... அந்த மனிதன் தூக்கத்தில் ஆழ்ந்த பிறகு, பரம்பொருளான கடவுள், அவன் விலா எலும்பில் ஒன்றை எடுத்து, அதிலிருந்து ஒருபெண்ணை உருவாக்கினாராம்! ஒருபெண்ணை உருவாக்குவதற்கு எடுத்துக்கொண்ட மூலப் பொருளைப் பார்த்தால், இது மிகவும் வெற்றிகரமானவொரு செயல் என்றே கூறவேண்டும். இது மாதிரியான வெற்றிகரமான செயல், வேறு எப்போதும் நடத்தியிருக்கமுடியாது! பெண் உருவாக்கப்பட்டதும், அந்த ஆடவனிடம் கொண்டுவரப்பட்டாள்; அவள் அவனை எப்படி விரும்புகிறுன் என்பதைப்பார்ப்பதற்காக அல்ல, அவன் அவளை எப்படி விரும்புகிறுன் என்று பார்ப்பதற்காகவே. அவன் அவளைவிரும்பினுன்; இருவரும் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்தினார்கள். அவர்கள் செய்யக்கூடியன என சில செயல்கள் அவர்களிடம் சொல்லப்பட்டிருந்தன; செய்யக்கூடாது என்றும் ஒரு செயல் சொல்லப்பட்டிருந்தது. அதையும் அவர்கள் செய்தார்கள்! பிறகு அவர்கள் அந்தத்

162964

கோட்டத்திலிருந்து விரட்டப்பட்டார்கள். அவர்கள் மீண்டும் அந்தக் கோட்டத்திற்குத் திரும்பி வந்து விடாதபடிப் பாதுகாக்கத் 'தனிப் போலீஸ்காரர்கள்' ஏற்படுத்தப்பட்டார்கள்!

அவர்கள் 'சாத்தான்' ஆட்டிவைத்தபடி ஆட ஆரம்பித்தார்கள். நடுக்கமும், நலிவும், தொத்து நோயும், கொலையும், இருமலும், பொருமலும், சுரமும், சளியும் ஒன்றன்பின், ஒன்றாக ஏற்பட்டன. அவர்கள் பலவலி கொள்ள ஆரம்பித்தார்கள்; ரோஜாமலர்கள் முட்களைக்கொள்ள ஆரம்பித்தன. பாம்புகள் நச்சுப்பற்களைக் கொள்ள ஆரம்பித்தன; மக்கள் பல்வேறு மதமாகவும், அரசியல் கட்சியாகவும் பிரிய ஆரம்பித்தார்கள். அந்த நாளிலிருந்து இந்நாள் வரையில் உலகில் துன்பங்கள் மலிய ஆரம்பித்தன!

கிட்டத்தட்ட உலகிலுள்ள எல்லா மதங்களும், உலகில் துன்பம் நிலவுவதற்கு, அப்படிப்பட்ட ஒரு கதையையே காரணமாகக் காட்டுகின்றன.

நான் மற்றொரு நூலைப் படித்தேன். அதிலும் இதுபோன்றவொருநிகழ்ச்சியேகாரணமாகக்குறிப்பிடப்படுகின்றது. இந்த நூல், நான் முதலில் குறிப்பிட்ட நூலைக் காட்டிலும், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதாகும். எல்லா விளக்கவுரையாசிரியர்களும், கடைசியில் எழுதப்பட்ட நூல்தான் மூலநூல் என்பதாகவும்; முதலில் எழுதப்பட்ட நூல், கடைசியில் எழுதப்பட்ட ஒன்றிலிருந்து அப்படியே தழுவி எழுதப்பட்டது என்பதாகவும் ஒப்புக்கொண்டு சாதனை செய்கிறார்கள்.

ஆனால், நான் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்: நான்கு அல்லது ஐந்து ஆயிரம ஆண்டுகள்

N53

என்ற சிறு காரியத்திற்காக, உங்களுடைய கோட்பாட்டை அலைக்கழிக்கவிடாதீர்கள்என்று! இந்த மற்றொருகதைப்படி, பிரம்மா ஒரு உலகையும், ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும் உண்டாகக முடிவு செய்துகொண்டாராம்! அவர் முதலில் உலகை உண்டாக்கி, பிறகு ஒரு ஆணை உண்டாக்கிப் பிறகு ஒரு பெண்ணை உண்டாக்கி, அவர்களை இலங்கைத் தீவில் வாழும்படி விட்டுவிட்டாராம்! எவ்வளவு அழகாக இருக்கவேண்டுமென்று மனிதனால் எண்ணிப் பார்க்கமுடியுமோ, அவ்வளவு அழகாக இருந்ததாம் அந்தத்தீவு! விதவிதமான பறவைகள்—பல்வகைப்பட்ட பாடல்கள்—மகிழ்ச்சியூட்டும் மலர்க் கூட்டங்கள்—கண்ணைக் கவரும் கவின் பொருள்கள்! எல்லாம் நிறைந்திருந்தனவாம் அங்கே! யாழிலுள்ள நரம்புகள் அசைந்தால் இனிய ஓசை எழுவதுபோல, காற்றடிக்கும்போது இனிய ஓசை எழும்பும் வகையில், மரக்கிளைகள் அவ்வளவு அருமையாக அமைக்கப்பட்டிருந்தனவாம்!

பிரம்மா அவர்களை அங்கே விடும்போது, "அவர்கள் காதல் வாழ்வு நடத்திக களிப்புறட்டும்; ஏனெனில், திருமணத்திற்கு முன்பு உண்மையான காதலன்பு மலர்வதுதான் என் விருப்பமும், ஆவலுமாகும்" என்று கூறினாராம்! நான் இதைப் படிக்கும்போது, இந்தக்கதை முன்பு பார்த்த மற்றொரு கதையைக்காட்டிலும், எவ்வளவோ அழகு வாய்ந்ததாகவும், உயர்ந்ததாகவும் எனக்குக் காணப்பட்டது. அப்பொழுது எனக்குள்ளாகவே நான் சொல்லிக்கொண்டேன்: "இந்த இரண்டு கதைகளில் எந்தவொரு கதையாவது உண்மையானதென நிலை நாட்டப்படுமானால், அது இந்தக் கதையாகத்தான் இருக்கவேண்டும் என விரும்புகிறேன்" என்று.

வானம்பாடியின் இசையும், உடுக்களின் மின்னும் ஒளியும், மொட்டவிழ்ந்து மலரும் பூக்களும் அவர்களை மகிழ்விக்க, அவர்கள் காதல் வாழ்விலே கலந்து நின்றார்களாம்! ஒருவரை ஒருவர் காதலன் பால் கட்டித்தழுவி நின்றார்களாம்! அந்தக் காதலனைச் சற்று நினைவு கூர்ந்து பாருங்கள்!....... எவ்வளவு அழகியதாய்க் காணப்படுகிறது!.......அறிவுரைகள் பகரும் தந்தைமார்களோ, அல்லது மாமியார்களோ இல்லை—உற்றுப் பார்த்துக் குசுகுசு வென்று பேசும் பக்கத்து வீட்டுக்காரர்கள் எவரும் இல்லை—"ஏ இளைஞனே! உன்னால் அவளைக் காப்பாற்றமுடியும் என்று எப்படி நீ எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்க எவரும் இல்லை! அதுபோன்ற தொல்லைகள் எதுவும்இல்லை! அவர்கள் பிரம்மாவால்,பிறகு மணம் முடித்துவைக்கப்பட்டார்களாம்! அப்பொழுது அவர் கூறினாராம்: "இங்கேயே இருங்கள்; இந்தத் தீவைவிட்டு நீங்கள் ஒருபோதும் அகலக்கூடாது" என்று! சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் அவளிடம் கூறினானும்—அவன் பெயர் ஆதாமி, அவள் பெயர் ஹேவா—அதாவது ஆதாமி ஹேவாவிடம் கூறினானும்; "நான் இந்தத் தீவிற்கு அப்பாலுள்ளதையும் காணவிரும்புகிறேன்" என்று! அவன் அந்தத் தீவின் வடகோடி முனைக்குச் சென்றானும்!

அங்கு மிகச் சிறிய—கழுத்து போன்றவொரு நிலப்பகுதி, பெரிய நிலப் பாகத்தைத் தொடர்புபடுத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தானும்! நம்மிடத்திலே அடிக்கடி, தந்திர வித்தைகளைக் காட்டும் 'சாத்தான்', கானல் நீர் போன்ற கண் கவர்காட்சி ஒன்றைக் காட்டினானும்! ஆதாமி அந்தப் பெரும் நிலப்பகுதியைக் கண்டானும்; அவன் உள்ளங் கவ

ரும் வண்ணம், மலைகளும்—மலைச்சாரல்களும், பள்ளங்களும்—பள்ளத்தாக்குகளும், பனிப் பாறைகளும் மூடிய நெடுமலைகளும், வளைந்து வீழும் பெரிய நீர் வீழ்ச்சிகளும் அங்கே காணப்பட்டனவாம்! அவன் திரும்பிச் சென்று ஹேவாவிடம், "அந்த நிலப்பகுதி நாம் வாழும் இதைக் காட்டிலும், ஆயிரம் மடங்கு சிறந்ததாகக் காணப்படுகிறது; ஆகவே நாம் அங்குக் குடியேறுவோம்" என்று சொன்னனும்! அவள், எந்தக் காலத்துப் பெண்ணும் எப்பொழுதும் சொல்வதுபோல், "நாம் இங்கு நன்ருகத்தான் வாழுகிறோம்; நமக்குத் தேவையானவற்றையெல்லாம் நாம் கொண்டிருக்கிறோம்; நாம் இங்கேயே வாழுவோம்'' என்று மொழிந்தாளாம்! ஆனல் அவன், "இல்லை, நாம் போகத்தான் வேண்டும்" என்ருனும்! எனவே, அவளும் உடன்செல்ல இசைந்தாளாம்! அவர்களிருவரும் அந்தக் கழுத்துப் போன்ற—சிறிய நிலப்பகுதிக்கு வந்ததும், அவன் அவளைத் தன் முதுகிலே தூக்கிக்கொண்டு அந்த நிலப்பகுதியைக் கடந்தானும்! அவர்கள் பெரிய நிலப்பாகத்திற்கு வந்ததும், ஒரு பெரிய ஓசை கேட்டதாம்; என்னவென்று திரும்பிப் பார்க்கும்போது, அந்தக் கழுத்துப்போன்ற—குறுகிய நிலப்பகுதி நொருங்கிக், கடலிலே அமிழ்ந்து மறைந்ததாம்! அது வரையில் அவர்கள் கண்டுவந்த கவர்ச்சிகரமான காட்சிகளும் உடனே மறைந்தனவாம்; வெறும் பாறைகளையும், மணலையும் தவிர வேறொன்றும் காணப்படவில்லையாம்! பிறகு பரம்பொருளான பிரம்மா, அவர்களிருவரும் ஆழ்ந்த நரகம் சேரவேண்டும் என்று சாபமிட்டாராம்!

பிறகு அவன் கூறினனும்: "என்னைச்சபி, அவளைச் சபிக்காதே; அது அவளுடைய குற்றம் அல்ல,

அது என்னுடையதுதான்" என்று. இந்த ஒரு செய்திக்காகவே நான் அவனை விரும்புகிறேன்!

அப்படிப்பட்ட மனிதனைக் கொண்டுதான் உலகம் முதலில் தோன்றியது!

பரம்பொருளான பிரம்மா கூறினாராம்: "நான் அவளைக் காப்பாற்றுவேன்; ஆனால் உன்னைக் காப்பாற்றமாட்டேன்" என்று! பின்னர், அவள் தன் காதலன்பு ததும்ப, இதயம் திறந்து கூறினாளாம்—அந்தக் காதலன்பு, என்றென்றும் அவள் வழிவழி வரும் பெண்களுக்கெல்லாம் படிந்து காணப்படும் வகையில் கூறினாளாம்: "அவனை நீர் விட்டு வைக்காவிடில், என்னை விட்டுவைக்க வேண்டாம்; அவனை விட்டுவிட்டு நான் வாழவிரும்பவில்லை; நான் காதலிக்கிறேன்" என்று! அதற்கு பிரம்மா, "நான் உங்களிருவரையும் வாழவிடுகிறேன்; ஆனால் உங்களையும், உங்கள் குழந்தைகளையும் என்றென்றும் கண்காணித்துக் கொண்டேயிருப்பேன்" என்று கூறினாராம்! அதற்காகவாவது அந்தப் 'பிரம்மாவை' நான் விரும்பவேண்டியவனாகிறேன்!

அறிவுள்ள செயலுக்கு மதிப்பளிக்கப்படுகிறது!-இது சிறந்ததும், அழகு வாய்ந்ததுமான கதையல்லவா?....

அந்த நூலிலிருந்தே, அந்த நூலுக்குரிய மக்கள்—அதாவது நம்மால் துன்பப்படும் அஞ்ஞானிகள் என்று கருதப்படுபவர்கள்—நம்மால் மதம் மாற்ற முயலப்படும் அந்த அஞ்ஞானிகள், எப்படிப்பட்டக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன். நீண்ட தொலைவுக்கு அப்பாலுள்ள அஞ்ஞானிகளை, மத மாற்றுவ

தற்காக நாம் பாதிரிமார்களை அனுப்பிவைக்கிறோம்- இங்குள்ள அஞ்ஞானிகளைக் கொன்று குவிப்பதற்காகப் போர்வீரர்களை அனுப்புகிறோம்! அங்குள்ள புற சமயத்தாரை நம்மால் மதமாற்றமுடியுமாயின், ஏன் நமக்கு அருகிலுள்ளவர்களை மாற்ற முயலக் கூடாது? நமக்கு எளிமையிலுள்ளவர்களை மாற்ற ஏன் முயலக்கூடாது? முற்போக்கில் வரக்கூடிய வகையில், சராசரி அறிவு பெற்றிருப்பவர்களைத் தான் மாற்ற ஏன் முயலக்கூடாது? மதம்மாற்ற வேண்டும் என்று முயன்றுகொண்டிருக்கிற உங்களுக்கு, இந்த நூலில் கூறப்பட்டிருப்பதைக் காட்டுகிறேன் கேளுங்கள்:

"ஆண் ஆண்மையின் அறிகுறி;பெண் அழகின் அறிகுறி! ஆண் வீரத்தின் அறிகுறி; பெண் காதலின் அறிகுறி! ஒரு ஆடவன் ஒரு பெண்ணைக் காதலிக்கும்போதும், ஒரு பெண் ஒரு ஆடவனைக் காதலிக்கும் போதும், அழகு தேவதைகள் சுவர்க்கத்தைவிட்டு நீங்கி, நில உலகை அடைந்து, அவர்கள் வீட்டிலே தங்கி, இன்பப் பாட்டுகள் இசைக்கும்" என்பதாகும்!

அப்படிப்பட்டவர்களைத்தான் நாம் மதம்மாற்றிக்கொண்டிருக்கிறோம். அதுபற்றிச் சிறிது சிந்தித்துப்பாருங்கள்!....இப்படிப்பட்டக் கருத்துக்களைப் படிக்கும்போது, காதலன்பு என்பது-ஒரு நாட்டிற்கு மட்டும் சொந்தமானதல்ல, பெருந்தன்மை என்பது- ஒரு இனத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல என்று புலப்படுவதை நீங்கள் உணரலாம். எல்லாக் காலங்களிலும், பெருமையும், அன்புள்ளமும் கொண்டவர்கள் மிகச் சிலராக ஆங்காங்கு தோன்றி, அன்பையும், இரக்கப் பண்பையும் மனித சமுதாயத்தில் மலரச் செய்துள்ளார்கள்.

என்னுடைய கருத்துப்படி, பெண் ஆணுக்குச் சரிசமானமானவளாவாள். எனக்குள்ள உரிமைகள் எல்லாவற்றையும் அவள் கொண்டிருக்கிறாள். அவற்றிற்கு மேலும் ஒன்றைக்கொண்டிருக்கிறாள்—அதாவது: அவள் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியவள் என்ற உரிமையாகும். அதுதான் என்னுடைய கோட்பாடு! நீங்கள் எல்லோரும் மணம் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்—உங்களால் காதலிக்கப்படுகின்ற பெண் மகிழ்ச்சியோடு இருக்க, அவைகளைவற்றையெல்லாம் செய்ய முற்படுங்கள். எவனொருவன் அவளுக்காக மட்டுமே மணம் புரிந்துகொள்கிறானோ, அவன் தவறிழைத்தவனாகிறான்; எவனொருவன் "அவளை மகிழ்விப்பேன்" என்று கூறி மணம் புரிகிறானோ, அவன் தவறேதும் இழைப்பதில்லை—அது போன்றதுவேதான், "நான் அவனை மகிழ்விப்பேன்" என்று கூறுகிற பெண்ணின் நிலையும். மகிழ்ச்சியோடு இருக்க வேண்டுமானால், அதற்கான ஒரேவழி, மற்றவர்களை மகிழ்விப்பதே; குறுக்குவழிகளில் செல்வதன் மூலம் மகிழ்ச்சியைப் பெறமுடியாது; அதற்கான நேர்வழியிலே சென்றால்தான் அதனைப் பெறமுடியும்.

நான் யாரையாவது ஒருவனை அடியோடு வெறுக்கிறேன் என்றால, அவன்தான் தன்னைத்தானே குடும்பத்தலைவன் என்று எண்ணிக்கொண்டிருப்பவன்—தன்னைத்தானே அதிகாரத் "தலைவன்" என்று கருதிக்கொண்டிருப்பவன். மரப்படகிலே ஏறிச்சென்ற ஆதிகாலத்து மனிதன், நாடாளும் "தலைவன்" தான் தான் என்னும் கருத்துப்பட, அச்சொற்களைப் பயன்படுத்திவந்தான்; அவன் வெளியிட்ட எண்ணங்களிலே அதுவும் ஒன்று.

ஒரு இளைஞனும், ஒரு இளநங்கையும் காதலுணர்வோடு நிலவொளியிலே நடந்து செல்ல, அங்கோர் வானம்பாடி, காதலிசையும் துன்ப இசையும் பொழிய, அவை அவள் உள்ளத்தை மூள்ளொன்று தொடுவதுபோல் தொடுவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்; அவர்கள், நிலவொளி—உடுக்களின் மின்னொளி இசைப்பாட்டு இவற்றினிடையே நின்றுகொண்டு, இப்பொழுது, இங்கு யாருக்கு யார் 'ஆளுந்தலைவன்' என்பதை முடிவு செய்து விடுவோம் என்று கூறிக்கொள்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நான் உங்களிடம் மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன், அது ஒரு தீங்கிழைக்கும் சொற்றொடர்—தீங்கிழைக்கும் உணர்ச்சி என்பதாக ஆளுந்தலைவன் தான் தான என்ற உணர்ச்சியோடு இருப்பவனையும், குடும்பத்தைக் கட்டி ஆள வேண்டியவன் தான் தான் என்ற உணர்ச்சி கொள்பவனையும் நான் முழு மனதோடு வெறுத்தொதுக்குகிறேன். அப்படிப்பட்ட ஒருவன் கட்டளையிடும்போது, அவன் வாயினின்றும் ஏதோ மாபெரும் எண்ணம் ஒன்று வெளிப்படுவது போலவும், மற்றவர்கள் அதற்காக ஆடாமல், அசையாமல் நிற்க வேண்டும் என்பது போலவும் இருக்கும் முறையை. நான் முழுக்க முழுக்க வெறுக்கிறேன! சொற்களால் விளக்கிக் காட்ட முடியாத அளவுக்கு, அவனை நான் வெறுக்கிறேன்!

மற்ற எல்லாப் பொருள்களைக்காட்டிலும், பண்பற்றமனிதனை நான் வெறுக்கிறேன். பட்டப்பகலிலேபடும சூரிய வெளிச்சததைக் குடும்பத்தினர்க்குப்படாமல் மறைக்க, அவனுக்கு என்ன உரிமையிருக்கிறது? குடும்ப வாழ்விலே பொங்கி எழும் மகிழ்ச்சியை அடக்க, அவனுககுஎன்ன உரிமை இருக்கிறது?

நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லும்போது, ஒளி வீசும் ஒளிக் கதிர்போல் செல்லவேண்டும்! இருள் சூழ்ந்திருக்கும் இரவுக் காலமானாலும், சாளரங்கள், கதவுகள் வழியாகப் பாய்ந்து, இருளை ஓடச் செய்யும் ஒளிக் கதிர்போல் நீங்கள் செல்லவேண்டும்! அது அல்லவா முறை! சில மனிதர்கள், தங்கள் வலிவுள்ள மூளை குழம்பிவிட்டதாக நினைத்துக்கொள்கிறார்கள்; ஐந்தாவது வட்டத்திலிருந்து, யார் நகர சபைக்குப் பிரதிநிதியாக வரக்கூடும் என்பதைப்பற்றிச் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்; வேறு சிலர் அரசியல் நிலையைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்; அரும் பெரும் பிரச்சினைகள், மற்றுஞ் சிலரின் உள்ளத்தைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன; ஐந்து, அல்லது ஆறு சதத்திற்கு வாங்கிய காலிகோவை, ஏழு சதத்திற்கு விற்க விரும்புகிறார்கள்! இப்படிப்பட்ட பெரும் பிரச்சினைகளில், தங்கள் அறிவினைச் செலவழித்துக்கொண்டிருப்பதாகக் கருதுபவர்கள், வீட்டிற்குச் சென்றதும், வீட்டிலுள்ள மற்றவர்கள், தங்களுடைய நலத்தை மட்டுமே கவனிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். வீட்டில் ஒரு பெண், ஐந்து, அல்லது ஆறு குழந்தைகளை வைத்துக்கொண்டு, ஓரிரு குழந்தைகள் நோய்வாய்ப்பட்டிருக்க, அவைகளைக் கவனித்துக் கொண்டும், ஓரிரு குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைத்துக்கொண்டும், ஓரிரு குழந்தைகளுக்கு உடைகள் தைத்துக்கொண்டும், பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அவள், மலர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும், தயாராகவும் நின்று, தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்று எண்ணுகிறான், குடும்பத் 'தலைவன்' என்று தன்னைக் கருதிக்கொண்டிருப்பவன்!

நான் இன்னென்று கூற விரும்புகிறேன்: கஞ்சத்தனம் கொண்டவனை நான் இகழ்ந்தொதுக்குகிறேன். பஞ்சமும், வறுமையும் வாட்ட, உலர்ந்த உதடும், ஒட்டியவயிறுமா காங்கிய பிச்சைக்காரரை அன்றாடம் கண்டும், ஊரில் ஏழ்மை தாண்டவமாடுவதைப் பார்த்தும், எப்படி ஒருவனல் ஐந்து கோடி டாலர்களையோ, அல்லது பத்துக் கோடி டாலர்களையோ, இறக்கும் பொழுது சேமித்துவைத்துவிட்டு இறக்கமுடிகிறது என்பது எனக்குப் புலப்படவில்லை. இவற்றையெல்லாம சகித்துககொண்டிருந்துவிட்டு, ஒருவனல் எப்படி மூன்று, அல்லது நான்கு கோடி டாலர்களைப் பதுக்கிவைத்துக்கொள்ளமுடிகிறது என்பதை என்னல் எண்ணிப்பார்க்கக்கூட முடியவில்லை. இப்படிப்பட்ட செயலைச் செய்ய ஒருவனல் எப்படி முடிகிறது என்பதைக்கூட என்னல் அறிந்துகொள்ள முடியவில்லை. நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் மக்கள் மூழ்கிச் சாகும் கடற்கரையோரத்தில, கட்டைமுட்டை சாமான்களை அடுக்கி, அவர்களைக் காப்பாற்றககூட அவன் முன் வருவான் என்று நான் கருதவில்லை.

தங்கள் மனைவிமார்களின் இதய அன்பைக் கொண்டும, மரியாதைப் பணபைக் கொண்டும் நம்பி வாழுகின்ற ஆடவர் பலரை நான் கண்டிருக்கிறேன். கணக்குப் புத்தகத்தையோ, பணத்தையோ அளவு கருவியாகக்கொண்டு எதையும நம்ப, அந்த ஆடவர்கள் ஒருபோதும முற்படுவதில்லை. அப்படிப்பட்ட மனிதனைக் காணும்போதெல்லாம், அவன் பொருள்களின் தரம் அறியும் திறமுடையான் என்று நான் எண்ணிக்கொள்வதுண்டு. உங்களுடைய மனைவியை, ஒரு பிச்சைக்காரியாக மாற்றுவதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்!....ஒவ்

லொருநாளும் ஐம்பது சதத்திற்காகவும், ஒரு டால ருக்காகவும், இரண்டு டாலருக்காகவும், உங்களைக் கெஞ்சிக் கேட்கக் கூடிய நிலையில், உங்கள் மனைவி வைக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சிந்தியுங்கள்!.... 'நான் சென்ற வாரம் உன்னிடத்தில் கொடுத்த ஒரு டாலர் பணத்தை என்ன செய்தாய்?' என்று நீங்கள் கேட்கும்போது, உங்களைக் கண்டு அச்சப்படுகின்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கும் மனைவியைப்பற்றிச் சிந்தியுங்கள்!.... பிச்சைக்காரியாகவும், கோழையாக வும் வைக்கப்பட்டிருக்கின்ற தாயாரிடமிருந்து, எப் படிப்பட்டக் குழந்தைகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர் கள்?.... நான் உங்களுக்குக் கூறுவதெல்லாம், உங் களிடம் ஒரு டாலர் பணம் இருக்குமேயானால், உங் களை நீங்கள் ஒரு அரசனாக நினைத்துக்கொண்டு, அதனைச் செலவழியுங்கள்; அதனை ஒரு காய்ந்த சரு காக நினைத்துக்கொண்டு செலவழியுங்கள். எல்லை யற்ற பெருங்காடுகளின் சொந்தக்காரர் என்று நினைத்துக்கொண்டு செலவழியுங்கள்! அதுதான் செலவழிப்பதற்கான வழி என்பதாகும். ஒரு அரச னாக இருந்து, பிச்சைக்காரனைப்போல் செலவழிப் பதைக் காட்டிலும், நான் ஒரு பிச்சைக்காரனாக இருந்து, என்னுடைய கடைசி டாலர் பணத்தை, ஒரு அரசன்போல் செலவழிப்பதையே பெரிதாக விரும்புகிறேன்! அது செலவழிக்கப்படுவதாக இருந் தால், செலவழிக்கப்பட்டுப் போகட்டுமே!

உங்களுடைய குடும்பத்தை எவ்வளவு நல்ல நிலையிலே வைக்கமுடியுமோ, அவ்வளவு நல்ல நிலை யிலே வையுங்கள்!— உங்களைப்பற்றி எவ்வளவு கவலை எடுத்துக்கொள்வீர்களோ, அவ்வளவு கவலை, உங்களுடைய குடும்பத்தைப் பற்றியும் எடுத்துக்

கொள்ளுங்கள்! நீங்கள் காதலன்பால் கட்டித் தழுவச் செல்லும்போது, நீங்கள் எவ்வளவு பெருமிதத்தோடு காணப்படுகிறீர்கள்! உங்களுடைய கண் ஒளி வீசுகிறது—உங்களுடைய நடை அழகை சவு கொடுக்கிறது—நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு அரசிளங்குமரன் போல காணப்படுகிறீர்கள்! ஒரு பெண் உங்களைக் காதலன்பால் பிணிக்கவரும்போது, நீங்கள் எவ்வளவு துப்புக்கெட்டவர்களாக இருக்க முடியுமோ, அவ்வளவு துப்புக்கெட்ட வர்களாக நடந்துகொண்டால், அப்போது நீங்கள் சகிக்கமுடியாத தற்புகழ்ச்சிக் காரர்களாகக் காட்சியளிக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணருகிறீர்களா? அதுபற்றிச் சிந்தித்துப் பாருங்கள்! உங்களால் ஆனவரையிலும் நீங்கள் அன்பு காட்டுவீர்களேயானல், உலகிலுள்ள எந்த ஒரு நல்ல பெண்மணியும் உங்களிடத்தில் இறுதி வரையில் அன்புடன்தான் இருப்பாள்!

"காதலைப்பற்றியும், மனைவிமார்களைப் பற்றியும், மற்றுமுள்ளவர்களைப் பற்றியும் நீ கொண்டிருக்கிற கோட்பாடு, பணக்காரர்களுககு வேண்டுமானல் அழகு வாய்ந்தனவாக இருக்க முடியுமேயொழிய, ஏழைகளுக்கு எந்த விதத்திலும் பயன்படுவதாகா" என்று சிலர் சொல்லக்கூடும். பணக்காரர்களின் அரண்மனையைக் காட்டிலும், ஏழைகளின் எளிய குடிசைகளிலேதான், அன்பு அதிகமான அளவுக்குத் தாண்டவம் ஆடுகிறது. அன்பு தவழ்கின்ற மிகச் சாதாரணக் குடிசை—'கடவுள்கள்' வாழுவதற்கேற்ற சீரிய அரண்மனையாகும், அன்பு தவழாத அரண்மனை—காட்டு விலங்குகள் வாழ்வதற்கான இருட்குகையாகும்! இதுதான் என்னுடய கோட்பாடு! நீங்கள் ஒவ்வொருவரும், பிறர்க்கு உதவி செய்யமுடியாத அளவுக்கு, அவ்வளவு ஏழையாகி விட்டீர்கள் என்று கூறிவிடமுடியாது. நல்ல

பழக்கம், உலகிலேயே மிக மலிவான பொருளாகும்! அன்பு ஒன்றுதான் கொடுத்தவனுக்கும், வாங்கின வனுக்கும் சமஅளவு பலனைத்தரும் அருப்பொருளா கும். பணக்காரர்களாகும் வாய்ப்புடையோம் என்று சொல்லிப் பெருமையடித்துக் கொள்ளாதீர்கள்! இங்கு—அமெரிக்காவில், தவறான முறையில், பெருந் தன்மைக்குப் பொருள் கொண்டுள்ளோம். இங்கு, ஒரு ம்னிதன் பெருமையாகக் கருதப்படவேண்டுமா னல், அவன் இழிதுறைகளில் வளர்ந்து, பலரறியும் பேருடையவனக இருக்கவேண்டும் என்றும், அவன் பெரும் பணக்காரனுக வேண்டும் என்றும், மக்களி டையே உலாவும் வதந்திகளில், அவன் பெயர் எப் பொழுதும் அடிபட்டுக் கொண்டேயிருக்க வேண்டும் என்றும் எண்ணிக் கொள்கிறேம். இதெல்லாம் தவ றுபட்ட மனப்பான்மையாகும். ஒருவன் மகிழ்ச்சி கரமாக இருப்பதற்கு அவன் பணக்காரனுகவோ, பெரியமனிதனுகவோ, அதிகாரம் படைத்தவனுக வோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம எதுவு மில்லை. மகிழ்ச்சி யுடையவனே வாழ்க்கையில் வெற் றிபெற்றவனுவான்.

மகிழ்ச்சி, உயிர் வாழ்க்கைக்கு முறையான பரி சாக இருந்து இலங்குகிறது!

மகிழ்ச்சிதான் மட்டற்ற செல்வமாகும்!

நான், சிறிதுநேரத்திற்குமுன்பு, மாவீரன்நெப் போலியனின் கல்லறையின்முன்னல் நின்றிருந் தேன்—சலியாமல் உழைத்த அவன், புழுதியாய்ச் சமைந்துகிடந்த கல்லறையைக் கண்டேன்; அருமை யும், அழகும் வாய்ந்த பளிங்கினல் மூடப்பட்டிருந்த அந்தக்கல்லறையைக் கண்டேன்; அதன்மேல் மின் னும் பொன் ஒளிவீச நாட்டப்பட்டிருந்த அழகான

கல்லையும் கண்டேன்! அந்தக் கல்லறையின் சுற்று மதிற்சுவரைப் பற்றி நின்று, எட்டிப்பார்த்தேன்; ஏதேதோ நினைத்தேன்: புது உலகத்தின் அம்மா பெரும் வீரன், ஆற்றிய செயலாற்றல்களைப் பற்றிச் சிந்தித்தேன்! அந்தக் காட்சிகள் என் உள்ளத் திரையிலே படிந்து காணப்பட்டன!

அவன் தன்னைத்தானே வெறுத்துக்கொண்டு, தற்கொலை செய்துகொள்ளும் நினைப்புடனே, சேன் நதிக்கரையில் உலாவிக்கொண்டிருப்பதைக் கண்டேன்—அவன் தூலான் நகரில் நடமாடுவதைக் கண்டேன்—அவன் பாரிஸ் நகரத் தெருக்களில், கிளர்ச்சியுற்று எழுந்து, ஆர்ப்பரித்து நின்ற மக்கட் கூட்டத்தை அடக்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன்—அவன் இத்தாலியில் போர்ப்படைத் தலைவனாக இருப்பதைக் கண்டேன்—அவன் மூவண்ண ஃபிரெஞ்சுக்கொடியைக் கையிலேந்திக் கொண்டு, லோடி ஆற்றுப்பாலத்தைக் கடந்துகொண்டிருப்பதைக் கண்டேன்-அவன் எகிப்து நாட்டுப் பிரமிட்களின் நிழலிலே, நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன்-அவன் ஆல்ப்ஸ் மலைகளை வென்று வெற்றிக்களிப்போடு வீற்றிருப்பதைக் கண்டேன்—அவன தஃபிரான்ஸ் நாட்டுக் கொடிகளிலே பொறிக்கப் பட்டிருக்கும் கழுகுகள், மலைமுகடுகளின்மேல் நின்றிருக்கும் கழுகுகளோடு கலந்திருப்பதைக் கண்டேன்—அவன மராங்கோ, உல்ம், ஆஸ்டர்லிட்ஜ் ஆகிய போர்க்களங்களில், கடும் போரிட்டுக்கொண்டு நிற்பதைக் கண்டேன்—கடும்பனியும், கடுங்காற்றும் படையணிகளையெல்லாம் சின்னபின்ன மாக்கிக் கொண்டிருக்க, ரஷ்யாவின் களத்திலே அவன் கவலையற்று நிற்பதைக் கண்டேன்—லீப்ஸிக்கில்

தொல்லையையும், தோல்வியையும் அவன் அணைப் பதை, பாரிஸ் நகரில் பல்லாயிரக் கணக்கான துப் பாக்கிகள் பின்தொடர அவன் செல்வதை, காட்டு விலங்கு பிடிபடுவதுபோல் அவன் பிடிபடுவதை, எல்பா தீவிற்கு அவன் நாடு கடத்தப்படுவதை ஆகிய எல்லாவற்றையும் கண்டேன்—அவன் தப்பி ஓடிவந்து தன் பேரரசைத் தன் அறிவாற்றலின் வலிவால் மீண்டும் கைப்பற்றிக் கொள்வதைக் கண் டேன்—அவனுடைய வாய்ப்புகளும், வசதிகளும் அடியோடு அழியக்கூடிய விதத்திலும், காண் போர்க்கு அச்சமூட்டும் வகையிலும் அமைந்த வாட் டர்லூ போர்க்களத்தில், அவன் கலங்கா நெஞ்சத் துடன் நிற்பதைக் கண்டேன்-தன் இருகைகளையும் பின்புறத்தில் கட்டிக்கொண்டு, அமைதியும் அந்த காரமும் சூழப்பெற்றதாய், அசைவற்றதுபோல் காணப்படும் பெருங்கடலிலே தன் பார்வையைச் செலுத்திக்கொண்டு, செயின்ட் ஹெலினா தீவில் அவன் சிறைப்பட்டுக் கிடப்பதையும் கண்டேன்!

அவன் காரணமாக ஏற்பட்ட விதவைப் பெண் களையும், அனாதைச் சிறுவர்களையும் பற்றிச் சிந்தித் தேன்—அவன் பெருமையடைய, மக்கள் சிந்திய கண்ணீர் வெள்ளத்தைப்பற்றிச் சிந்தித்தேன்—காதலன்பைக் காட்டித் தன்னை நாடிவந்த கட்டழ கியை, நாடுபிடிக்கும் பேராசையின் காரணமாக அவன் ஒதுக்கித்தள்ள, அவள் சிந்திய கண்ணீர்த் துளிகள் பற்றிச் சிந்தித்தேன்! அப்படிப்பட்ட அந்த மாவீரனைக் காட்டிலும், அற்றுப்போன மிதியடிக ளைப் போட்டுக்கொண்டு உலாவும் ஒரு சாதாரண பிரெஞ்சுநாட்டு உழவனாக இருப்பதே மேல் என்று எண்ணினேன். திராட்சைக் குலைகள் கதிரவன் ஒளியிலே கவர்ச்சி கொடுத்துக்கொண்டிருக்க,

திராட்சைக் கொடிகள் கதவின்மேல் படர்ந்து காணப்பட ஒரு சிறு குடிசையில் வாழும் வாழ்வையே பெரிதெனமதிக்கிறேன். கதிரவன் மறைந்த மாலை வேளையில், தோள்மீதும் தொடைகள் மீதும் ஏறிக் குழந்தைகள் விளையாட அருகில், அன்பு மனைவி தையல் தைத்துக்கொண்டிருக்க, அகமகிழ் வோடு அமர்ந்திருக்கும் ஒரு ஏழைக் குடியானவன வாழ்க்கையையே நான் பெரிதெனவிரும்புகிறேன்.

போர், கொலை ஆகியவற்றின் அதிபதியாய், பேரரசின் தலைவனாய், "மாவீரன் நெப்போலியன்" என்று பெயரெடுத்து வாழ்வதைக் காட்டிலும், அரு மை பெருமையற்றவனாய், புழுதியோடு புழுதியாய்க் கலந்திடும் ஒரு உழவனாக இருந்து வாழ்வதையே நான் சிறந்த வாழ்வெனக் கருதுகிறேன்.

மகிழ்ச்சியோடு இருக்க, ஒருவன் பெருமை வாய்ந்தவனாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை; அன்புள்ளத்தோடு—இரக்க இதயத்தோடு—பரந்த நோக்கத்தோடு வாழ, ஒருவன் பணக்கார னாய் இருந்து தீர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நீ பணக்காரனாக இருந்தாலும், ஏழையாக இருந்தா லும் அதுபற்றிக் கவலையில்லை; நீ உன்னுடைய மனைவியை அழகுமலர் என்று நினைத்து, அன்புடன் நடத்து; அவள் உன் வாழ்வை மணங் கமழச்செய் வாள்—மகிழ்ச்சிகரமாக ஆக்குவாள்!

நீ உள்ளன்போடு ஒரு பெண்ணைக் காதலிப்பா யேயாகில், அவள் ஒரு பொழுதும் வயதேறியவளா கக் காணப்படமாட்டாள். இந்த அருமையை நீ உண ரவேண்டும். காலத்தின் கொடுமையால் சுருக்கங்கள் ஏற்பட்டாலும், ஆண்டுகளின் கழிவால் பொலிவு

குன்றி அழகுமறைக்கப்பட்டாலும், நீ முழு உள்ளன்போடு ஒரு பெண்ணைக் காதலித்து வருவாயாகில், நீ விரும்பிய—வெற்றிகண்ட அதே முகம் உனக்கு எப்பொழுதும் தென்படும். அதுபோலவே, ஒரு பெண் ஒரு ஆடவனை உள்ளன்போடு காதலிப்பாளேயானால், அவன் அதிக வயதுடையவனாகிறான் என்பது அவளுக்கு ஒருக்காலும் தெரியாது; அவன் கிழடு தட்டியவனாக அவளுக்குத் தென்பட மாட்டான். அவன் தளர்வுற்று நடுக்கங் கொண்டவனாக ஒருபோதும் அவளுக்குப் புலப்பட மாட்டான. அவள் இதயத்தையும், கரத்தையும் தொட்டு, அவளை வெற்றிகொண்டு, அவளை மனைவியாக ஆக்கிக் கொள்ளும்போது, அவன் எவ்வளவோ அழகுடையவனாகத்தான் அவள் கண்களுக்கு என்றென்றும் படுவான். இந்த வழியில், அன்பைப்பற்றிச் சிந்திக்கவேண்டும் என்று விரும்புகிறேன்; காதலன்பு என்றும் அழியாத ஒரு பொருளாக மதிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த வழியில், காதலன்பைச் செலுத்தி, வாழ்வு என்னும் மலையுச்சியிலிருந்து இருவரும் ஒன்று சேர்ந்து படிப்படியாக இறங்கிவர, அப்படி இறங்கி வரும்போது பேரப்பிள்ளைகளின் சிரிப்பொலிகளைக் கேட்க நேரிடவுங்கூடும்; அப்படிப்பட்ட நிலைமை, காதலன்பு-மகிழ்ச்சி என்னும் பாடும் பறவைகள், வயது என்னும் பட்ட மரத்தின் கிளைகளிலே உட்கார்ந்து, மீண்டும் இன்னிசைப் பாட்டுக்கள் இசைப்பது போலத்தான் தோன்றச் செய்யும்.

நான் குடும்பக் கட்டுக்கோப்பில் நம்பிக்கை கொண்டவன்—குடும்பத்தின் பொது நாயகத்தன்மையில் நம்பிக்கை கொண்டவன்—குடும்பத்தின் குடியரசுத் தன்மையில் நம்பிக்கை கொண்டவன்_

விடுதலை—சமத்துவம்—அன்பு ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டவன்!

## 3. குழந்தைகள்.

பெண்களே அடிமைகளாக இருந்து வருகிறார்களென்றால், குழந்தைகளைப்பற்றி என்ன சொல்வது? சந்து பொந்துகளிலும், இருட்டறையிலும் வளரும் குழந்தைகளின் நிலைமை என்ன? தந்தையாரின் காலடி ஓசை கேட்டவுடனேயே, முகம் வெளுத்து விறுவிறுத்துப்போகும் குழந்தைகளின் நிலைமை என்ன? தாய் பெயரிட்டு அழைக்க, அதைக் கேட்டறியும் தன்மையிலிருக்கும் குழந்தைகளின் நிலைமை என்ன? சிறு குழந்தைகள்—வறுமையில் உழலும் குழந்தைகள்—குற்றம் புரியுங்குழந்தைகள், கொடுமை செய்யும் குழந்தைகள்—வாழ்வு என்னும் மடமைக் கடலில் தூக்கி எறியப்பட்ட பொருள்கள் என விளங்கும் குழந்தைகள், இன்னபிற எப்படிப் பட்டக் குழந்தைகள் ஆனாலும் அவர்களின் நிலைமை என்ன? அவர்கள் எல்லோரிடத்திலும் நான் இரக்கங் கொள்கிறேன்!

நாம் எவ்வளவு உரிமைகள் கொண்டிருக்கிறோமோ, அவ்வளவு உரிமைகளைச் சிறு குழந்தைகளும் கொண்டிருக்கின்றன. ஆகவேதான், அவர்களும் மக்களைப்போல் நம்மால் நடத்தப்பட வேண்டுமெனக் கூறுகிறேன். அவர்கள், அன்பால், ஆசையால், இதத்தால், மென்மையால் ஊக்குவித்து, உயர்விக்கப்படவேண்டுமேயொழிய, கொடிய விலங்குத் தன்மையால் அல்ல. இதுதான், குழந்தைகளைப் பொறுத்து நான் கொண்டிருக்கும் கருத்தாகும்.

உங்களுடைய சிறு குழந்தை பொய் ஒன்று கூறிடுமேயானால், அதற்காக இந்த உலகமே ஒன்று மில்லாமல் போய்விட்டதாக எண்ணிக்கொண்டு, அந்தக் குழந்தைமேல் பாய்ந்து செல்லாதீர்கள்! அக் குழந்தையிடம் நீங்கள் உண்மையாக நடந்துகொள் ளுங்கள்! கொடுங்கோன்மைகொண்ட தந்தையர்கள் தாம், பொய் கூறும் குழந்தைகள் தோன்ற முக்கிய காரணமாகிறார்கள். ஒரு பக்கத்தில் கொடுங்கோன்மை இருப்பதாலும், மற்றொரு பக்கத்தில் ஆற்றலற்றத் தன்மை இருப்பதாலுமே பொய் பிறக்கிறது. கையில் சழியொன்று எடுத்துக்கொண்டு, சின்னஞ் சிறு குழந்தையின்மீது நீங்கள் பாயத் தொடங்கினால்; வேறு வழி காணாமல், அக்குழந்தை பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ள எண்ணுகிறது; ஆகவே பொய் சொல்கிறது.

நான் 'இயற்கை அன்னை'க்கு நன்றி செலுத்த விரும்புகிறேன்! ஏனெனில், கொடுமைவாய்ந்த தந்தை தாக்க வரும்போது, கரடுமுரடாகச் செய்யப் படும் மண்பாண்டம் போன்று, பொய் ஒன்றைக் கற் பனை செய்து, திருப்பி அவன்மேல் வீசுவதற்கேற்ற அறிவினை குழந்தைகளுக்குக் கொடுத்திருப்பதற் காக!

உங்களுடைய குழந்தைகளிலே ஒன்று பொய் கூறினால், அதனிடத்தில் நீங்கள் உண்மைப் பண் போடு நடந்துகொள்ளுங்கள்; நீங்களே நூற்றுக் கணக்கான பொய்கள் கூறியிருப்பதாகவும், ஆனால் அது சிறந்த வழி ஆகாது என்றும், அதை முயன்று பார்த்தறிந்த முடிவு என்றும் அதனிடம் கூறுங் கள். "உண்மையாக நடப்பதுதான் சிறந்த கொள்கை; நான் உண்மை, பொய் ஆகிய இரண்டு

வழிகளையும் கடைப்பிடித்துப் பார்த்துள்ளேன்'' என்று அதனிடம் கூறுங்கள். நீங்கள் ஐந்து வயது குழந்தையைவிட எவ்வளவு பெரியவர்களோ அதே அளவுக்கு, உங்களைவிடப் பெரியவன் ஒருவன் உங்களிடம் வந்து, இடியோசை போன்ற பலத்த குரலில், ''அந்தத் தட்டத்தை யார் உடைத்தது?'' என்று கேட்டால்; உங்களில், ''அதை நான் பார்க்கவேயில்லை'' என்றோ, ''அது முதலிலேயே உடைந்திருந்தது'' என்றோ சொல்லாதவர் யாரும் இருக்கமாட்டார்கள். தன்னிடத்திலுள்ள சரக்குகள் பற்றித் தப்பான வதந்திகளை வெளியிட்டுவிட்டான் என்று தன் மகனை அடிக்கும் ஒரு வியாபாரியைக் கற்பனை செய்து பாருங்கள்! உண்மையை மறைத்துக் கூறுவதாலேயே வாழ்க்கைக்கான பாதி வருவாயை அடைந்து வருகிற ஒரு வழக்கறிஞர், தன் மகன் உண்மையை மறைக்கிறான் என்று அடிக்கிறார்! இவரைப் பற்றிச் சிந்தியுங்கள்! நாடாளும் ஒரு அமைச்சர், தன் மகன், தான் சிந்திப்பதை எல்லாம் வெளியிடுவதில்லை என்பதற்காக அவனுக்குத் தண்டனை தருகிறார்! இவரைப்பற்றியும் எண்ணிப்பாருங்கள்! இவர்களெல்லோரும் ஏன் தங்கள் பிள்ளைகளிடத்து உண்மையாக நடந்துகொள்ளக் கூடாது?

உங்களுடைய குழந்தை தவறு ஒன்று இழைத்துவிடுமேயானால், அதனை உங்கள் கைகளால் வாரி அணைத்துக்கொள்ளுங்கள்; அது, தன்னுடைய இதயத்துடிப்பை, உங்களுடைய இதயத் துடிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கட்டும்; நீங்கள் உண்மையாகவும், உறுதியாகவும், உள்ளன்போடும் அதனிடம் அன்பு செலுத்துகிறீர்கள் என்பதை அது அறிந்துகொள்ளட்டும்! என்றாலும், குழந்தை ஒன்று தவறு செய்துவிடுமேயானால், அதனை வீட்டிலிருந்து துரத்தியடித்து

"இந்த வீட்டில் இனிமேல் அடியெடுத்து வைக்காதே போய்விடு" என்று சொல்லுகின்ற கிருத்துவர்கள், அதுவும் 'நல்ல' கிருத்துவர்கள் சிலர் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள். இது முறைதானா? இவ்வளவும் செய்தானபிறகு, அவர்களே 'ஆண்டவன்' முன்னால் முழங்கால் மண்டியிட்டுக்கொண்டு, வீட்டைவிட்டுத் துரத்தியடிக்கப்பட்ட குழந்தையைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிககொள்கிறார்கள். நான், என்னுடைய குழந்தைகளை என்னால் முடிந்த மட்டும் காப்பாற்றமுயலுவேனேயல்லாமல், காப்பாற்றவேண்டும் என்று சொல்லி 'ஆண்டவனிடம்' ஒரு நாளும் மண்டியிட்டுக் கேட்கமாட்டேன்.

"நீங்கள் விரும்புகிற இடத்திற்குச் செல்லுங்கள்; உங்களால் செய்யக் கூடிய குற்றத்தைச் செய்யுங்கள்; எவ்வளவு இழிவான நிலைமைக்கு உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளமுடியுமோ, அவ்வளவு தாழ்த்திக்கொள்ளுங்கள்; ஆனால் என் வீட்டிலிருந்தோ, என் கை அணைப்பிலிருந்தோ, அல்லது என் இதய அன்பிலிருந்தோ உங்களைப் பிரிக்கக்கூடிய குற்றம் எதையும் ஒரு பொழுதும் செய்ய முனையாதீர்கள்; நான் வாழுங்காலம் வரையிலும், நீங்கள் உண்மைத் தோழன் ஒருவனைக் கொண்டிருக்க வேண்டுமல்லவா!" என்றுதான் நான் என்னுடைய குழந்தைகளுக்குச் சொல்லுவேன்.

'சிறு குழந்தைகளை என் அருகில் வரவிடுங்கள்; ஏனென்றால், சுவர்க்கமே அப்படிப்பட்டக் குழந்தைகளைக் கொண்டதாகத் தானிருக்கிறது" என்ற ஏசுவின் வாக்கு, குழந்தைகளை அடிக்கும் பொருட்டு அருகில் அழைப்பதற்காகச் சொல்லப்பட்ட சூழ்ச்சிக் கருத்துடையது எனக் கருதுபவர்கள்போல நடிக்கும் சிலரையும் நான் கண்டிருக்கிறேன்.

சவுக்கு ஆளும் கொடுங்கோலாட்சியில் எனக்கு நம்பிக்கை இல்லை!

உங்களில் எவரேனும் ஒருவர், உங்களுடைய குழந்தைகளை மீண்டும் அடிக்க நேரிட்டால், நீங்கள் அப்படி அடிக்கும்போது, கடுங்கோபத்தால் சிவந்து போகும் உங்கள் முகத்தையும், திடீரென்று வீசும் குளிர்ந்த காற்றால் தாக்கப்பட்டுத் தெறிக்கும் தண்ணீர்த் திவலைகள் போன்ற கண்ணீரில் நீந்தும் கண்களோடு, அச்சத்தால் குழிவிழுந்து போகும் மோவாயுடனும் கூடிய அந்தச் சிறுகுழந்தையின் முகத்தையும், ஒருசேர ஒரு நிழற்படம் எடுக்கச்செய்யுங்கள். அந்தக் குழந்தை இறக்க நேரிட்டால், ஒரு இளவேனிற் காலத்தின் மாலைப் பொழுதைக்கழிக்க, அக்குழந்தை புதைக்கப்பட்ட இடுகாட்டிற்குச் செல்வதைத் தவிர, வேறு நல்ல வழி எனக்கு என்ன இருக்கமுடியும்! பொன்னிறப் பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களும், மண்மடந்தை தன் உடைந்த உள்ளத்திலிருந்து வருத்த வெண்பாக்களை எழுப்பிக் கொண்டிருப்பதுபோலத் தோன்றும் செந்நிறப் பூக்களும் அடர்ந்த அக்குழந்தையின் கல்லறையின் மீது அமர்ந்து, அந்த நிழற்படத்தைப் பார்ப்பதோடல்லாமல், அடித்து இரக்கச் செய்த அந்தக் குழந்தை சதைப் பற்றோடு இருந்த முன்னைய நிலையையும், அது மண்ணோடு மண்ணாய்க் கலந்திருக்கும் இப்போதைய நிலையையும் எண்ணிப்பார்ப்பேன்! அதையே மாலைப்பொழுதைக் கழிக்கும் நல்ல வழியாகக் கொள்வேன்!

குழந்தைகளை வளர்க்கும் முறை இதுவல்ல—கூடவேகூடாது—தவறு, பெருந்தவறு என்று உங்களுக்குக்கூற விரும்புகிறேன். உங்கள் இல்லத்தை இன்பமயமாக்குங்கள்! உங்கள் குழந்தைகளிடம்

நாணயமாய்—நேர்மையாய், உண்மையாய் நடந்து கொள்ளுங்கள்! எல்லாவற்றிலும் அவர்களோடு சேர்ந்து பங்குகொண்டு இன்பவாழ்வு வாழுங்கள்!

அவர்களுக்கு விடுதலையும், அன்பும் வழங்குங் கள்—பின்னர் உங்கள் வீட்டை விட்டுக்கூட, அவர் களை விரட்ட உங்களால்முடியாது! அவர்கள் வீட்டி லேயேதான் வாழவிரும்புவார்கள்; உங்கள் வீட்டை மகிழ்ச்சிகரமாக்குங்கள்! அவர்கள் விரும்புகிற விளை யாட்டு எதுவாலுலும், அதை விளையாடட்டும். நீங்கள் பந்தைத் தரையில் உருட்டலாம்; ஆனல் பச்சை நிறப் படுதாவில் உருட்டாதீர்கள நீங் கள் அதைக் கொட்டாப்புளியால் உடைக்கலாம்; ஆனல் அதனைக் கழியால் தள்ளாதீர்கள். நீங்கள் ஆசிரியர்கள் பெயர் பொறிக்கப்பட்ட சிறு காகிதத் துண்டுகளை வைத்துக்கொண்டுவிளையாடலாம்; ஆனல் 'சீட்டுக் கட்டு'வைத்துக் கொண்டு விளையாடாதீர்கள் என்று முட்டாள் தனமாக உங்கள் குழந்தைகளி டம் ஒருபோதும் சொல்லாதீர்கள்! இதுபற்றி நீங்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். "முகத்தில் கரி பூசிக் கொண்டு மிகமிகக் கீழ்த்தர மக்களைப்போல் நடி த்துப் பேசும் கூத்தாடிகள் நிறைந்த தெருக்கூத்து களுக்குச் செல்லலாம்; ஆனல் பேரறிஞர்களால் எழுதப்பட்டு நடிக்கப்பெறும் நாடகங்களைப் பார்க்க நாடகக் கொட்டகைகளுக்குச் செல்லக்கூடாது" என்று குழந்தைகளிடம் நீங்கள் ஏன் சொல்லவேண் டும்? இரண்டைப்பற்றியும் குறிப்பிடும் சொற்களிலே வேறுபாடு இருப்பதைத் தவிர, வேறு என்ன கார ணங் காட்டி, ஒன்று அனுமதிக்கப்படவும், மற் ருென்று தடுக்கப்படவும் செய்யப்படுகின்றனவோ தெரியவில்லை!

குழந்தைகளை உங்கள் வீட்டிலேயே வைத்து வளர்க்க நீங்கள் விரும்பினாலும், அவர்களை ஞாயிற்றின் ஒளியிலே உலாவவிடுங்கள்! தொட்டில் பழக்கத்திலேயே "இதைச் செய்யாதே" "அதைச்செய்யாதே" "நிறுத்து" என்று அதட்டிச்சொல்லாதீர்கள்! குழந்தையாயிருக்கும் தொட்டிற் பருவத்திலிருந்து, அவன் இருபத்தோரு வயது அடைகிற வரையிலும், "செய்யாதே!" என்ற சொல்தான் அவனிடம் கூறப்படுகிறது. அவன் போதுமான வயதான பிறகுங்கூட, "செய்யாதே!" என்றுதான் மற்றவர்கள் சொல்கிறார்கள். மாதா கோயில் கூறுகிறது: "செய்யாதே!" என்று. அவன் சேர்ந்திருக்கும் கட்சி கூறுகிறது, செய்யாதே என்று. இப்படிப்பட்ட முறையிலே நடத்தும் உலக வாழ்வை நான் இகழ்ந்தொதுக்குகிறேன்.

கொஞ்சத்துக்குக் கொஞ்சம் ஆனாலும், நாம் உரிமையோடு வாழ்வோமாக! என்னை நமபாதவன் என்று அழைத்தாலும் சரி; என்னை நாத்திகன் என்று அழைத்தாலும் சரி; என்னை எப்படி அழைக்க விருப்பமோ அப்படி அழைத்தாலும் சரி; என்னுடைய குழந்தைகள் என் கல்லறையின் அருகில் வந்து நின்று, "இவ்விடத்தில் உறங்குபவர் எங்களுக்கு ஒருபோதும் துன்பம் கொடுத்ததில்லை, இப்பொழுது மண்ணாய் மடிந்திருக்கும் அவரின் வாயினின்றும் அன்பற்ற சொல் ஒரு பொழுதும் வந்ததில்லை" என்று உள்ளன்போடு சொல்லும் அளவுக்கு அவர்களை நடத்துவதையே நான் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறேன்.

குழந்தைகள் அடியோடு சீர்கெட்டவர்கள் என்ற அடிப்படையில் நின்று, அவர்களுக்கு இழைக்

கப்படும் கொடுமைகளுக்கெல்லாம் சமாதானம் கூற வருகிறார்கள் சிலர். அடியோடு சீர்கெட்டவர்கள் என்ற இந்தக் கோட்பாடு, காட்டுமிராண்டிக் கொடுமைக் காலத்தில் ஏற்பட்ட முடிவாகும். மதம், ஒரு குழந்தையை வாழும் குற்றம்—நீங்காச் சாபக்கேட்டின் வாரிசு—ஊழித் தீய்க்கான பலி என்றே கருதி வருகிறது.

பழங்காலத்தில், ஒரு குழந்தை மகிழ்ச்சிகரமாக இருப்பதற்குச் சில நாட்கள் தாம், நல்ல நாட்களாக இருக்கின்றன என்று மக்கள் எண்ணி வந்தனர். நான் சிறு பையனாக இருக்கும் போது, ஞாயிற்றுக்கிழமை மகிழ்ச்சியாக இருக்கக் கூடாத அளவுக்குப் புனித நாளாகக் கருதப்பட்டது. அப்போதெல்லாம், சனிக்கிழமை மாலை கதிரவன் மறைந்தவுடன், இரவோடுகூட ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகிவிடுவதாகக் கணக்கிடப்பட்டது. சனிக்கிழமை மாலை, பரிதி மேற்றிசையில் அடிவானத்திற்சென்று மறையும்போது, இரவின் இருளைக் காட்டிலும், பதினாயிரக் கணக்கான மடங்கு அதிகமான இருள் வீட்டைக் கப்பிக்கொள்வதாகக் காணப்படும். ஒருவரும் அன்புமொழி பேசமாட்டார்கள்; ஒருவரும் சிரிக்கமாட்டார்கள்; ஒருவரும் நகைக்கமாட்டார்கள்; நோய் வாய்ப்பட்டு ஊமையாய்க் கிடக்கும் குழந்தை பக்திமானாகக் கருதப்படும். அந்த இரவில், நீங்கள் முந்திரிக் கொட்டையைக்கூடக் கடிக்கக்கூடாது. நீங்கள் ஏதாவதுமென்று தின்று கொண்டிருந்தால், அதுவே போதும் மனித இதயம் சீர்கெட்டுப் போய்விட்டது என்பதற்கு. அந்த இரவு, முழுக்க முழுக்க பயபக்தி நிலவும் இரவாகும் நீங்கள் வெளியிடும் மூச்சிலேயே நோய்க் கிருமிகள் இருப்பதாகக் கருதப்படும். ஒவ்வொருவரும் வருத்தத்தோடும், துக்கத்தோடும் காணப்படுவார்கள். அசிரண

நோயால் வருந்துபவர்கள், அந்நோய் காரணமாகத் தங்களை மதபக்தி மிகுந்தவர்களாகக் கருதிக் கொள் பவர்கள் பலரையும், நான் கண்டிருக்கிறேன். அந்த நோயைநீக்கும் மருந்து ஏதாவது கண்டுபிடிக்கபட் டால், அது மாதாகோயில் மீதுவிழும் பெருந் தாக்கு தலாகவே கருதப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் பயபக்தியின் தன்மை படிப்படியாக வளருவது வழக்கம். அதற்குப் பிறகு, நாங்கள் மாதா கோவிலுக்குச்செல்லுவோம். அங்கு, இருபது அடி உயரத்தில் போடப்பட்ட மே டையில் மதகுரு நின்று கொண்டிருப்பார்; அவருககு மேலே பேச்சின் ஒலி சிதறிப் போகாமல் அதனைத் தடுத்துப் பரவச் செய்ய, பலகையாலான மேல் தளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் மதகுரு "முதலாவ தாக" என்று ஆரம்பித்துப் படிப்படியாகப் பலகட் டங்கள் தாண்டி, "இருபத்தி மூன்றாவதாக" என்ற முறையில் போய்க்கொண்டிருப்பார். பிறகு, மக்களி டம விண்ணப்பித்துக்கொள்ளும் முறையில் சில சொல்வார்; பின்னர் எடுத்துக் கொண்ட பொரு ளின் பொதுப்படையான நோக்கத்தைப்பற்றிக் கூறுவார்; இரண்டு மணி நேரத்திற்குள்ளாகக் கடைசி அத்தியாயமான ஆண்டவன் அறிவிப்புப் பகுதிக்கு வந்துவிடுவார்.

அந்த நாட்களில், எவ்வளவு குளிர்ந்த காற்று வீசினாலும் சரிதான், மாதாகோயிலில் குளிர் காய்வ தற்கான கணப்புச் சட்டி ஏதும் இருக்காது. ஆண்ட வனை வழிபட்டுக்கொண்டிருக்கும்போது, வசதியைத் தேடுவதே பாபச்செயல் என்று எண்ணப்பட்டது. அமெரிக்காவின் நியூ இங்கிலாந்து மாகாணத்தில், மாதா கோயிலில், முதன்முதலில், "ஸ்டவ்" வைத் துக்கொண்ட காரணத்திற்காக, அந்த மாதா

கோயில் இரண்டாகப் பிரிந்தது. பாட்டின் மெட்டு களை மாற்றியமைத்துக்கொண்ட காரணத்திற்காக, முதல் மாதாகோயில் பின்னர், பல்வேறு வகை மாதா கோயில்களாகப் பிரிந்தன.

மதகுரு அறவுரை பகர்ந்தான பிறகு, இடை வேளை சிறிது தரப்படும் பின்னர், ஒவ்வொருவரை யும் கேள்வி கேட்டுப் பதில் கூறும் முறை நடக்கப் பெறும். நாங்கள் கேட்கும் கேள்விக்கு ஒவ்வொரு வராகப் பதில் கூறுவோம். தரையில் அரை அடி அகலத்தில் எங்கள் அடிகள் படிந்திருக்கும் படியாக, நாங்கள் எல்லோரும ஒரு வரிசையில் உட்காரு வோம். மதகுரு நாங்களெல்லோரும் நரகத்திற் சென்று சேரும்படியான பாபச் செயல்களைச் செய்யவில்லையா என்று கேட்பார். நாங்களெல் லோரும் "ஆம்" என்று விடையிறுப்போம். நாங்கள் நரகத்திற்குப் போகவேண்டுமென்பது ஆண்டவனின் விருப்பமானல், அதன்படி நரகத்திற் குச் செல்ல நாங்களெல்லோரும் விரும்புகிறோமா என்று கேட்பார். ஒவ்வொரு பொய்யனும் "ஆம்" என்று கூறுவான். பிறகு, ஆண்டவனின் அதேகட் டளை மீண்டும் இறுதியிலிருந்து விளக்கப்படும். அதற்குப் பிறகு, பாபச செயல்களைப் போகருவ தற்கு ஆண்டவன் எடுத்த அவதாரம்பற்றிய செய்தி களை நினைத்துக்கொண்டு, பயபக்தியும், மகிழ்ச்சி யற்ற தன்மையும் உடைய முகத்தோடு வீடு திரும்பு வோம். நாங்கள் வீட்டிற்குப் போனதற்குப் பிறகு, நாங்கள் நல்ல பையன்களாகக் கருசப்பட்டால், வெப்ப சூழ்நிலையும இருந்தால், எங்களுக்கு மகிழ்ச்சி யூட்ட, எங்களைக் கலலறை நிலத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அது, உள்ளபடியே எனக்கு மகிழ்ச் சியைத்தரும். இகோட்டில் மறக்கப்பட்டுப்போய்

அமைதியில் அமிழ்ந்துகிடக்கும் கல்லறைகளையும், சிதைந்துபோன கல்லறைகளையும், கற்கள் மட்டும் நீட்டிக்கொண்டிருக்கும் கல்லறைகளையும், பாதி எழுத்துக்கள் அழிந்துபோய் அரைகுறையாக இருக்கும் கல்லறைகளையும் காண்போம். அந்தக் காட்சி எனக்குச் சிறிதளவு மனத்திருப்தியை அளிக்கும். பிறகு வீடு திரும்பி, புத்தகங்களைப் படிப்பதில் காலங் கழிப்போம்.

கடைசியாக, ஞாயிற்றுக்கிழமை முடியுந்தருவாய்க்கு வந்துசேரும்; கதிரவன் மேற்றிசையில் சென்று மறைவான்; நாங்கள் விடுதலைபெற்றவர்களாவோம். கதிரவன் எழுவதைக் காண, நாங்கள் சில வேளைகளில் வெளியே சென்று பார்ப்பது வழக்கம். கடைசியாகக் கதிரவனும் மறைந்து விடுவான். கதிரவனின் கடைசி ஒளிக்கதிர் அடிவானத்தில் சென்று மறையும்போது, நாங்கள் விடுதலைக்கு வாழ்த்துக்கூறி மகிழ்வோம்.

புனித நாட்கள் எங்களுக்குச் சிறைச்சாலைகளாகவே காணப்படும்! ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் எங்களுக்கு ஒரு பாஸ்டிலி சிறையாகும்! ஒவ்வொரு கிறித்தவனும் சிறைக் கதவு திறக்கும் காவலாளி போலவும், ஒவ்வொரு குழந்தையும் கைதி போலவும்—குற்றவாளி போலவும் இருந்துவந்தனர்! அந்த இருட் குகையில் புன்சிரிப்புப்புரிவது என்பது குற்றமாகக் கொள்ளப்பட்டது!

புனிதநாளில், குழந்தை சிரிப்பதே தவறாகக்கருதப்பட்டது இது எவ்வளவு கொடுமையானது என்பது பற்றிச் சிந்தியுங்கள்!

சிறு குழந்தை ஒன்று ஒரு பூந்தோட்டத்திற்குள் நுழைகிறது; அங்கு, மரங்களில் பூக்கள் பூத்துத்

திளைப்பதை அக்குழந்தை பார்க்கிறது; மேலும் அண்ணாந்து பார்க்கிறது; மரக்கிளைகளின் ஒன்றில் பறவை ஒன்று உட்கார்ந்திருப்பதையும், அது ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் இருப்பதையும், தன் கூட்டாளியான ஆண் பறவையால் அடைகாக்கப் படும் நான்கு முட்டைகளைப்பற்றி எண்ணிக்கொண் டிருப்பதையும் அக்குழந்தை பார்க்கிறது; பறவை ஆடியும், பாடியும் தன் இனிய சிறிய குரலால் இசை யை எழுப்பிக்கொண்டிருக்க, எங்கும் பூக்கள் மலர்ந் திருக்க, காற்றில் நறுமணங் கமழ்ந்து கொண்டி ருக்க, வானத்தில் வெண்முகில்கள் நீந்திக்கொண்டி ருக்க குழந்தை அந்தமரத்தைக் களிப்புடன் அண் ணாந்து பார்த்துக்கொண்டேயிருக்கிறது; அப்பொழு தும் நரகத்தைப்பற்றிய நினைவும், அதில்நெளியும் சாகாப்புழுக்களைப்பற்றிய நினைவும் அக்குழந்தைக்கு வராமல் இருப்பதில்லை! நரகத்தைப்பற்றிய எண்ணம், அந்த அளவுக்கு அதன் உள்ளத்தில் ஏற்றப்பட் டிருக்கிறது!

நான் சிறுவனாக இருக்கும்போது, ஆலயத்தில் இருந்து அறிவுரை கூறிக்கொண்டிருக்கும் பாதிரி யார், நாம் இறுதியாகச் சென்றடையும் "வீடு பேறு" பற்றிக் கூறப் பல தடவைகள் கேட்டிருக்கி றேன். காலத்தின் அதிக அளவைக்கண்டு, குழந்தை கள் அதிசயப்படவேண்டும் என்பதற்காகச் சில கூற் றுக்கள் அடிக்கடி பாதிரியாரால் கூறப்பட்டன. "வெகுதொலைவிலுள்ள கோளத்திலிருந்து, பதினை யிரக் கணக்கான ஆண்டுகளுக்கு ஒரு முறை பறவை ஒன்றுவரும்; அது, தன்னுடைய சிறு அலகால், ஒரு சிறு மணி அளவுள்ள மண்ணை எடுத்துச்செல் லும்; இப்படியாக எடுத்து எடுத்துக் கடைசியாக எஞ்சும் ஒரு துளி மண்ணையும் எடுத்துச் சென்று

விடும்; அந்தக் கடைசி கூளி மண் எடுக்கப்படும் போது, கதிரவன் அடியோடு மறைந்து விடுவான்;'' என்ற கதையை அடிக்கடிக் கூறுவார்கள் இப்படிப் பட்ட அறிவற்ற கொள்கையைக் குழந்தைகளிடம் போதிப்பதால் என்ன விளையும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

உள்ளபடியே குழந்தையின் சிரிப்புதான் தூய நாளை, மேலும் தூய்மையானதாக ஆக்குவதாகும். ஓ, பாடகனே!....நீ உன்னுடைய அழகிய வீணையை மீட்டி, அதன் இனிய ஓசையும், உன்னுடைய இனிய இசையும் மாதா கோவிலின் மண்டபம் முழுவதும் பரவி நின்று ஒலிக்கும்படிச் செய்தாலும்; ஓ, குழல் ஊதுவோனே! நீ உன்னுடைய குழலை ஊதி, அதன் ஓசை காற்றில் மிதந்து சென்று, திராட்சைக் கொடிகள் படர்ந்துகிடக்கும் மலையடிவாரத்தின் நிலவொளியிலே உலாவிக் கொண்டிருக்கும் காதலர்களின் காதில்விழும்படிச்செய்தாலும், அவைகள் குழந்தைகளின் மகிழ்ச்சிச் சிரிப்புக்கு எவ்வகையிலும் ஈடாகா! குழந்தைப் பருவத்தின் அந்த மகிழ்ச்சிச் சிரிப்புதான ஒவ்வொருவரின் கண்களையும் ஒளிபெறச் செய்கிறது ஒவ்வொருவரின் இதயத்தையும் இன்பத்தில் ஆழ்த்துகிறது! ஓ, சிரிப்பு வெள்ளமே!..நீ தான் மக்களுக்கும், மாக்களுக்கும் இடையேயுள்ள எல்லைக் கோட்டை அமைக்கிறாய்! உன்னிடத்தில் எழும் ஒவ்வொரு அலையும் கவலையை அழிக்கும் ஆற்றலுடையது! மகிழ்ச்சி பெற்றெடுக்கும் மகளாகிய—சிவந்த கன்னங்களையுடைய ஏ, சிரிப்பே!....நீ, துன்பக் கண்ணீர்த் திவலைகளையெல்லாம் ஏற்கவும், தாங்கவும், எழிலூட்டவும் தகுந்த மாதிரியில் உன்னுடைய கன்னங்களிலே அழகிய குழிகளைக் கொண்டிருக்கிறாய்!

அப்படியிருந்தும், ஆண்டவனின் "அழியாத் தண்டனை" பற்றிய இழிவான கோட்பாட்டால், குழந்தைகளின் உள்ளங்கள் கெடுக்கப்படுகின்றன. அதை ஒரு கோட்பாடு என்பதையே நான் வெறுக்கிறேன்; அதன் இழிவான தன்மையை எடுத்தியம்புவதென்றால், எந்த மொழியிலும் சொற்கள் அகப்படா!

ஆடவர்-பெண்டிர்-குழந்தைகள் ஆகியோர்க்கு அளிக்கப்படுவதாகக் கூறப்படும் "அழியாத் தண்டனை" பற்றிய இந்தக் கோட்பாடு எங்கிருந்துவந்தது? கட்டையில் குடைந்தெடுக்கப்பட்ட மரப்படகில் ஏறிக் காலந்தள்ளிய அறிவற்றவனும், விலங்குத்தன்மையும் பூண்டவனுமான காட்டுமிராண்டியின் மண்டையோட்டினுள்ளிருந்து எழுந்ததே அந்தக் கோட்பாடு. அவன் எங்கிருந்து அதனைப் பெற்றான்? அது விலங்குகளிடத்திருந்து மறையாமல், மறக்காமல் வந்த விலங்குத் தன்மையாகும். பசிக் கொடுமையால் இரையை எதிர்பார்த்து, பயங்கரமாகச் சுருண்டு தொங்கிக்கொண்டிருக்கும் பாம்புகளின் ஒளிவீசும் கண்களிலிருந்து, அந்த "அழியாத் தண்டனை" பற்றிய கோட்பாடுபிறந்தது! அது காட்டு விலங்குகளின் கத்துதல், கரைதல், கூவுதல், கொக்கரித்தல், ஊளையிடுதல், உறுமுதல், கனைத்தல், கர்ச்சித்தல், குலைத்தல், குமுறுதல், பிளிறுதல், பிராண்டுதல் போன்ற காட்டுக் கூச்சல்களினின்றும் தோன்றியது! கழுதைப் புலிகளின் கர்ச்சனையிலிருந்தும், வாலில்லாக் குரங்குகளின் கொக்கரிப்பிலிருந்தும் அது உண்டானது! என்னுடைய ஒவ்வொரு சொட்டுக் குருதியினாலும் அந்தக கோட்பாட்டை இகழ்கிறேன். நாணயமான நம்பிக்கையை வெளியிடுவதற்காகத் தன்னுடைய குழந்தைகளைத் தண்டிக்கும்

ஒரு 'கடவுள்' அப்பழுக்கற்ற மேல் உலகிலே இருக்கிறான் என்று நீங்கள் கூறுகிறீர்கள்! ....உங்களுடைய வைதிகக் கோட்பாடுகளை வைத்துக்கொண்டு கணக்கிட்டுப் பார்த்தால், உலகம் முழுவதும் உள்ள காடுகளில், உதிர்ந்துகிடக்கும் சருகுகளின் எண்ணிக்கையைப்போல் பதினுயிரக கணக்கான அளவு மக்கள் "பாவம்" செய்தவர்களாகவே இதுவரையில் இறந்திருப்பார்கள் அவர்களெல்லோரும் நரகத்திலேயே கிடக்கிறார்கள்—கொடுந் தண்டனை கொடுக்கப்படுகிறார்கள் – அழியா வேதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள் – எல்லையற்ற காலமாக—எப்பொழுதுமே வதைக்கப்படுகிறார்கள் என்று நீங்கள் கூறுகிறீர்களா? என்ன சொல்கிறீர்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம்! மிகமிக வெறுக்கத்தக்க, பொய்கள் நிரம்பிய இந்தக் கொள்கையை, நான் அடியோடுவெறுத்தொதுக்குகிறேன். உலக நன்னம்பிக்கைகளையும், நல்லாசைகளையும் கொண்டுள்ள பெரிய கப்பல்—மனிதத் தன்மையாகிய சரக்கை ஏற்றிக் கொண்டிருக்கும் கப்பல், இறப்பு—கொந்தளிப்பு—அழிவு ஆகிய நள்ளிரவில் அழிந்துபோக நேர்ந்தால், நான் அந்தக் கப்பலுடனேயே மூழ்குதலைத்தான் விரும்புகிறேன் சொல்லமுடியாத கீழ்த்தர மனப்பான்மையைக் கையாண்டு, வைதிகச் சிறு படகில ஏறிச் செல்லும் குற்றவாளியாக இருக்க ஒருபொழுதும் ஒருப்படமாட்டேன். என்னை விரும்புபவர்களோடும், என்னால் விரும்பப்படுபவர்களோடும் சேர்ந்து கப்பலில் மூழ்கிப்போவதையே நான் விரும்புகிறேன். தன்னுடைய குழந்தைகளை எப்பொழுதும் தண்டனைக்குள்ளாக்கும் 'கடவுள்' ஒருவர் இருப்பாரேயானால், அருவருக்கத்தக்க கொடுங்கோலனோடு கூடிவாழும் 'மோட்சத்தை'க் காட்டிலும், 'நரகத்'திற்குச் செல்வதையே நான் பெரிதென மதிப்பேன்.

எனக்கு விருப்பமான வழியை, நானே இப்பொழுது வகுத்துக் கொள்கிறேன். வெறுக்கத்தக்க 'அழியாத் தண்டனை' பற்றிய கோட்பாட்டை நான் இகழ்ந்தொதுக்குகிறேன் அந்தக் கோட்பாடு, உலக மக்களின் அழகிய கன்னங்களிலே கண்ணீர்த் துளிகளை நிரப்பியுள்ளது!

அது குழந்தைகளின் உள்ளங்களைக் கெடுத்து விட்டது; மனிதனின் சிந்திக்கும் திறனை மாய்த்து விட்டது! ஒவ்வொரு நல்ல ஆண்—பெண் குழந்தை ஆகியோர்க்கு இடைவிடாத அச்சத்தையும், அவதியையும் ஊட்டிவருகிறது! அது, நல்லவர்களை அஞ்சும்படியாகவும், அலறித் துடிக்கும்படியாகவும் செய்கிறது! மிக இழிவானவர்களை, மிகக் கீழ்த்தரமானவர்களை எந்த விதத்திலும் அது பாதிப்பதில்லை! அது, மென்மைத்தன்மையுடையோரின் இதயங்களை வருத்தியுள்ளது; நல்லவர்களின் கன்னங்களிலே, ஆழ்ந்த கோடுகளைக் கிழித்துள்ளது! இந்தக் கோட்பாடு, இனி ஒரு பொழுதும் அறிவுறுத்தப்படக்கூடாது என்பதே என் விருப்பம். ஒருவனுடைய கல்லறையின் அருகிலேயும், காலத்தின் இறுதியிலேயும் நின்று, எதிர்காலத்தை அந்தகாரம் நிறைந்ததாகவும், அச்சம் நிரம்பியதாகவும் ஆக்க, மிஸ்டர் பாதிரியாருக்கு-விவிலிய வேதவிளக்கக் கர்த்தாவுக்கு என்ன உரிமை இருக்கிறது? இந்தக் கோட்பாட்டை நான் நம்ப முடியாது; நீங்களும் நம்பமுடியாது, நீங்கள் நம்புவீர்களேயானால், உங்களால் ஒரு வினாடிகூடத் தூங்க முடியாது. அந்தக் கோட்பாட்டை நம்புபவனும், தன்னுடைய நெஞ்சிலே அதனைப் பதியவைத்துக் கொள்பவனும் யாரேனும் இருப்பானாகில், அவன் பைத்தியக்காரனாகத்தான் கருதப்படுவான். அந்தக் கோட்பாட்டை நம்பி, அவன் பைத்தியக்காரனாக ஆகா

மல் இருப்பானேயானால், அவன் பாம்பின் இதயத்தையும், கழுகைப் புலியின் மனப்பான்மையையும் கொண்டிருப்பவனாவான்.

இந்தக் கோட்பாட்டை அடிப்படையாக வைத்துக்கொண்டு, "நம்பாத மனைவி நரகத்திலே கிடக்க, நம்பும் கணவன் மோட்சத்தில் இருக்க, அவன் மகிழ்ச்சியோடு இருப்பானா? நம்பாத குழந்தைகள் நரகத்திலே கிடக்க, நம்பும் தந்தை மோட்சத்தில் இருக்க, அந்தத் தந்தை மகிழ்ச்சி கொள்ளமுடியுமா? நம்பாத கணவன் நரகத்திலே கிடந்துழல, நம்பும் காதல் மனைவி மோட்ச உலகில் நடமாட, மனைவி மகிழ்ச்சியோடிருப்பாளா?" என்று கேட்டால், "அவரவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் நீதியின் நெறியுணர்வு அவரவரின் பேரின்பத்தைப் பெருக்குமேயல்லாமல் குறைக்காது" என்று பாதிரியாரால் மொழியப்படுகிறது. இந்தக் கோட்பாட்டைக் கூறக் கேட்டால், ஆஃபிரிக்காவின் கொடிய விலங்கு கூட நடுநடுங்கிப்போகும் என்பதில் ஐயமில்லை.

இப்படிப்பட்டக் கோட்பாடுகள், மதத்தின் பேரால் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன—ஆண்டவன் பேரால் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன—எல்லையற்ற அன்பு—அருள் ஆகியவற்றின் பேரால் சொல்லிக்கொடுக்கப் படுகின்றன. உங்களுடைய குழந்தைகளின் உள்ளங்களை, இப்படிப்பட்ட மதக் கோட்பாடுகளால் கிரப்பாதீர்கள் என்று உங்களை நான் இறைஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். எதையும் அவர்களாகவே படித்து அறிந்துகொள்ளட்டும்,—அவர்களாகவே சிந்தித்துத் தெரிந்துகொள்ளட்டும். வரிசையாக நாட்டப்படும் வைதிகக் கம்பங்களாக உங்களுடைய குழந்தைகளை நடத்தாதீர்கள்! ஒளியும், சூடும், காற்றும் தேவைப்படும் மரங்களாகவே

அவர்களை நடத்துங்கள். அவர்களிடத்தில் நேர்மையாகவும், நாணயமாகவும் நடந்துகொள்ளுங்கள்! அவர்களுக்கு வாய்ப்பும், வசதியும் அளியுங்கள்! உங்களுடைய உரிமைகளுக்குச் சமமாகவே, அவர்களுடைய உரிமைகளும் அமைகின்றன என்பதை உணருங்கள்! அவர்களை அடக்கி ஆளவேண்டியவர்கள் நீங்கள்; உங்களுக்கு அடங்கி நடக்க வேண்டியவர்கள் அவர்களே என்ற எண்ணத்தை உங்கள் மனதிலே கொள்ளாதீர்கள். ஆண்டான்—அடிமைஎன்ற எண்ணத்தைத் தொலைவில் வீசி எறியுங்கள்!

பழைய நாட்களில், குழந்தைகள் தூக்கங்கொள்ளாதபோது, அவர்களைப் படுக்கைக்கு அனுப்புவதும், அவர்கள் தூக்கங்கொள்ளும்போது, அவர்களை விழித்திருக்கச் செய்வதும் ஆன பழக்கம் இருந்து வந்தது அவர்கள் தூக்கங்கொள்ளும்போது படுக்கைக்குப் போகட்டும்; தூக்கங் கொள்ளாதபோது படுக்கையைவிட்டு எழுந்திருக்கட்டும் என்றுதான் நான் கூற விரும்புகிறேன்.

இந்த ஏற்பாடு பணக்காரர்களுக்குத்தான் பொருந்திவருமே யல்லாமல், ஏழை எளியவர்களுக்குப் பொருந்தாது என்று நீங்கள் சொல்லக்கூடும். அப்படியே ஏழை ஒருவன் விடியற்காலையிலேயே தன் குழந்தைகளை எழுப்பிவிட வேண்டியிருக்கிறதென்றாலும், அவர்களை முதுகில் அறைந்து எழுப்புவதைக் காட்டிலும், முத்தங்கொடுத்து எழுப்புதல் அதே அளவு எளிமையுடையதாயிற்றே! உங்களுடைய குழந்தைகளுக்கு முழு விடுதலையை வழங்குங்கள்—அவரவர்கள் தன்னம்பிக்கையும் தன்னுற்றலையும், தன்னறிவையும், தன் மதிப்பையும் தாங்களே வளர்த்துக்கொள்ளட்டும்.

உங்களுடைய குழந்தைகள் எதை உண்ண விரும்புகின்றனவோ, அதை உண்ணட்டும்; உணவு முடிந்ததும் அவர்கள் எதைச் செய்ய விரும்புகிறார்களோ, அதைச் செய்யும்படி அவர்களை விட்டுவிடுங்கள். அது எப்படி இருக்கவேண்டும் என்பது, அவர்களைச் சார்ந்த பொறுப்பாகும்; அந்தப் பொறுப்பு உங்களைச் சார்ந்ததாகாது. அவர்கள் எதைப் புசிக்க விருப்பங்கொள்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தான் தெரியும் தொடக்கத்திலிருந்தே அவர்களுக்கு விடுதலை வழங்கப்பட்டால், உலகிலுள்ள எந்த ஒரு வைத்தியர் கூறுவதைக் காட்டிலும் சிறந்த உணவைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதை அவர்கள் அறிவார்கள். மருந்து வகைகளிலே விதவிதமான முன்னேற்றம் ஏற்படுவதற்கு, நோயாளிகளின் அசட்டைத்தனந்தான் முக்கிய காரணமேயொழிய, வைத்தியர்கள் அல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாக வைத்தியர்கள்; சுர நோயால் வருந்தும் ஒருவன், ஒரு துளி தண்ணீர் அருந்தவிடாமலேயே வைத்தியம் பார்த்து வந்திருக்கிறார்கள். கண்ணீரை ஒருவித நஞ்சு என்ற முறையிலேயே கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால், அவ்வப்போது, நோயாளி நொந்த உள்ளத்தோடு "நான் என்னுடைய வறட்சியைத் தணித்துக்கொள்ளக்கூடாது என்பதைக் காட்டிலும், இறந்துபடுவது மேலாயிற்றே" என்று கதறுவான். அதற்குப் பிறகு, அவன இரண்டு மூன்று கவளம் நீர் அருந்தி நல்ல நிலையை அடைவான். நோயாளி செய்ததை வைத்தியரிடம் கூறும்போது, அவர் அது கேட்டும், கண்டும் அதிசயமுறுவார். அவனுடைய உடலமைப்பு, அப்படிப்பட்ட கேட்டையும் தாங்கிக்கொள்வதாக அமைந்திருக்கிறதே என்பதுபற்றி ஆராய்வார். வேறு வழி காணாதவனாய்த் தண்ணீரையே அருந்திக்

கொண்டு, அதனால் நலமுற்றுக்கொண்டிருப்பான் சுரநோயாளி இறுதியாக, வைத்தியர் 'சுரநோய் இருக்கும்போது தண்ணீர் அருந்துவது மிகமிக நல்லது" என்று கூறுவார். வைத்தியக் கல்லூரிகளில் செய்யப்படும் முடிவுகளைக் காட்டிலும், இயற்கையிலேயே ஏற்படும் நன்மைகளில் நான் அதிக நம்பிக்கையுடையவனாக இருந்து வருகிறேன்.

உங்களுடைய குழந்தைகள் முழு விடுதலையைப் பெறட்டும். பெற்றால், அவர்கள் உங்கள் வழிகளுக்கே வந்து விடுவார்கள் - நீங்கள் செய்யும் அளவு நன்மைச்செயல்களை அவர்களும் செய்வார்கள். நீங்கள் அவர்களைச் செய்யும்படி வற்புறுத்துவீர்களேயானால், அவர்களுடைய இதயத்தில் இடம் பெற்றிருக்கும் அழகிய—அரிய உணர்வு ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்திவிடும். மக்கள், அப்படிப்பட்ட நிலைமையை அறிந்து, நேரியமுறையில் நடந்து கொள்கிறார்கள் என்னும் போதுதான், இவ்வுலகில் நிகழ்தற்கரிய சிறப்பு நிகழ்ச்சி ஏற்பட்டதாகக் கொள்ளப்படும். ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வைத்தியர்கள் கூறுகிறபடி, முறை தவறாமல் மக்கள் நடந்து கொண்டு வந்திருப்பார்களேயானால், மக்கள் எப்படிப்பட்ட நிலைக்குக் கொண்டுவரப் பட்டிருப்பார்கள்? அவர்கள் எல்லோரும் மாண்டு மறைந்திருப்பார்கள்! உலகில் எந்த ஒரு காலத்திலாவது, மாதாகோயில் கூறுகிற முறைப்படித் தவறாமல நடக்க முனைந்திருப்பார்களாயின், அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்திருப்பார்கள்? அவர்கள் எல்லோரும் முட்டாள்களாக மாறியிருந்திருப்பார்கள்! அந்தக் கோட்பாடுகளைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், தனக்குத்தானே சிந்தித்து முடிவுக்கு வரும் பேரறிஞர்கள் அவ்வப்போது இருந்து

லந்திருப்பதுதான் அழகியதும், குறிப்பிடத்தக்கது மாகும்.

குழந்தைகளை, அவர்களுக்குத் தாமே சிந்தித்துக்கொள்ள விடுவதிலே நான் நம்பிக்கை கொள்கிறேன். குடும்பத்திலே ஏற்படும் ஜனநாயக முறையிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது இந்த உலகில் ஏதாவதொன்று அழகியதாக இருக்கிறதென்றால், எல்லோரும் சரிசமமாக இருந்து வாழும் ஒரு இல்லமேயாகும்!

கொஞ்ச நாட்களுக்கு முன்புவரையில், பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை, உண்ணுவிரதம் மேற்கொள்ளும்படி வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். உண்ணுவதையே, அவர்கள் பயபக்தி நிறைந்த ஒரு மதச்சடங்காகக் கருதி வந்தனர் வாழ்க்கை, ஒரு பயபக்திப் பொருளாகக் கருதப்பட்டு நடத்தப்படக் கூடாது குழந்தைகள் மேஜையின் அருகில் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கவும், அவர்கள் தாங்கள் அதிசயமாகக் கண்டதையும், கேட்டதையும் சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்கவும் எனக்குப் பெரு விருப்பமாகும். அவர்களுடைய மகிழ்ச்சிக் குரலொலிகளினிடையே கத்திகளும், முள்கரண்டிகளும், பிற கரண்டிகளும் கலகலப்பதை நான் கேட்க விரும்புகிறேன். நடத்தற்கரியதான இசையரங்கு ஒன்றைக் காட்டிலும், இந்தக் கலகலப்பு ஓசையே எனக்கு அதிக இன்பம பயப்பதாகும் குழந்தைகள் விடுதலையுரிமையோடு வாழட்டும்! அவர்களிடத்தில நாணயமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ளுங்கள்; நீதி உள்ளத்தோடும், மென்மைப் பண்போடும் அவர்களை அணுகுங்கள். அவர்கள் அதிகமான அளவு அன்பையும், இன்பத்தையும் உங்களிடத்தில் கொண்டுவந்து சேர்ப்பார்கள்.

ஆடவர்கள் கருவாலி மரங்கள் போன்றவர்கள்; பெண்கள் திராட்சைக் கொடிகளை நிகர்த்தவர்கள்; குழந்தைகள் மலர்களின் தன்மையினர்!

மனித சமுதாயம், எண்ணற்ற குற்றங்களைச் செய்த ஒரு குற்றவாளியாகவே இருந்து வந்திருக்கிறது; ஆனால் அதற்கான சமாதானம் சிலவும் இருக்கின்றன. பொதுப்படையாகப் பார்த்தால், இந்த உலகம், நல்லமக்களை உற்பத்தியாக்குவதற்கு ஏற்றபடித் தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளாததாகவே இருக்கிறது. முதற்கண், ஏறத்தாழ அதன் பெரும் பகுதி நீர்ப்பரப்பினாலானது. மக்களினத்தைக் காட்டிலும், மீனினத்தை உற்பத்தியாக்குவதற்கு ஏற்ற விதத்தில்தான் அது அமைந்திருக்கிறது. அதில் நிலமாக இருக்கும் பகுதியில எட்டில் ஒரு பங்குகூட, சிறந்த ஆடவர்—பெண்டிரை உற்பத்தியாக்கக் கூடிய அளவில் நல்லமண்ணையோ, நல்ல தட்ப வெப்ப நிலையையோ கொண்டிருக்கவில்லை. ஆர்டிக் மாபெருங் கடலின் பனிப்பாலை வெளியில் கதிர் மணியோ, கோதுமையோ எப்படி விளைவிக்க முடியாதோ, அதுபோல, தகுந்த மண்வளமும், தட்ப வெப்ப நிலையும் அமையாத இடத்தில், அறிவில்வல்ல ஆடவரையும்—பெண்டிரையும் உற்பத்தியாக்க முடியாது. தேவையான நிலைமைகளும், சுற்றுச் சூழல்களும் அமைந்திருக்க வேண்டும். மனிதன் ஒரு உற்பத்திப் பொருள்—அதற்கு வளமான நிலமும், சத்தான உணவும் தேவை.

இயற்கையால் விதிக்கப்படும் தடைகள், மனிதனின் சாதாரண உழைப்பாலும், உறுதியாலும் வென்று வாழ முடியாத அளவுக்கு — அவ்வளவு கொடுமை வாய்ந்ததாக இருக்கக்கூடாது. உலகைச்

சுற்றி அமைந்துள்ள சிறுபட்டயம் போன்ற நிலப் பகுதியிலிருந்துதான், ஆற்றலுடைய ஆண்—பெண் பெருமக்களைத் தோற்றுவிக்க வேண்டியிருக்கிறது. உலகின் தெபாதிக்ன கோளத்தில், மனிதன் வாழ்வதற்கேற்ற தட்பவெப்ப நிலை அமைந்த பகுதி பெரும்பாலும் கடலில மூழ்கியதாகவே இருக்கின்றது அதனால் ஏற்படுவது என்னவென்றால்: உலகின் தென்பாதிப் பகுதி, பேரறிஞர்களான ஆணையோ அல்லது பெண்ணையோ இதுவரையில் ஒரு பொழுதும் தோற்றுவிக்கவில்லை என்பதாகும். வடகோடியில் பேரறிவாளர் யாரும ஏற்பட்டதில்லை—அந்தப் பகுதி அவ்வளவு குளிரடைந்த பகுதியாகும். தென்கோடியில் யாரும் பேரறிஞர்கள இருக்கவில்லை - அந்தப்பகுதி அவ்வளவு வெப்பம் மிகுந்த இடமாகும். குளிர்காலமும இருக்கவேண்டும்; கோடைகாலமும் இருக்கவேண்டும மேகத்தைத்தவிர வேறு மேற்போர்வையை வேண்டாத நிலப்பகுதியில், அன்றாடச் சூழ்நிலையே புரட்சி மணங் கமழ்வதாக இருக்கிறது உழைப்புக்கும, முன்னெச்சரிக்கைக்கும தாயாக விளங்குவது குளிர்காலமேயாகும். இவை எல்லாவற்றையும்விட, குடும்ப உறவுமுறைக்கும் குளிர் காலந்தான் தாயாக விளங்குகிறது. குளிர் காலம் தன்னுடைய பனித்தோள்களிலே, கணவன்—மனைவி—குழந்தைகள் ஆகியோரைத் தாங்கி அணைத்துக்கொள்கிறது. இந்த உலகில் மோட்சத்தைப் பற்றிய சாயல் ஏதாவது தெரிவதாகக் கொண்டால், அதுதான் குளிர்காலத்து இரவிலே காணப்படும குடிலாகும்; நாம அந்தக்குடிலின் அருகில் சென்று, திரை நீக்கப்பட்ட சாளரத்தின் வழியே உள்ளே பார்க்கும் போது, இன்பம் தரும் கணப்புச் சட்டியைச் சுற்றிலும் குடும்பத்தினர் கூடியிருக்கின்றனர். கிழவி பின்னல் பின்னிக் கொண்டிருக்கி

ருள்; பூனை அங்குள்ள ஜாடியின் மேலேறி விளையாடிக் கொண்டிருக்கிறது; பொம்மைகள் அல்லது பொற்காசுகள், மடக்குக் கத்திகள் அல்லது மற்றைய பொருள்கள் ஆகியவற்றில் எவ்வளவு கொள்ளமுடியுமோ, அவ்வளவையும் பெற குழந்தைகள் விரும்புகின்றன; ஓசையிட்டுவீசும் காற்றோடு தீப்பொறிகள் சென்று சேர்கின்றன; தந்தை புத்தகத்தைப் படித்துக்கொண்டும், புகைபிடித்துக் கொண்டுமிருக்கிறார்; குடும்ப இன்பம் என்னும் கோயில் மண்டபத்தில் எழும் நறும்புகை என்று சொல்லும்படி புகைக்கூட்டம் மேல் எழுந்து கொண்டிருக்கிறது! நான், வாழ்வின்பம் பெற்றதாக உணரும் ஒரு வித நல்லுணர்வோடு அல்லாமல், ஒரு பொழுதும் வேறுவகையில் அப்படிப் பட்டச் சிறு குடிலைக் கடந்து சென்றது கிடையாது.

நாகரிகம், விடுதலை, நீதி, கொடை, அறிவு முன்னேற்றம் ஆகிய இவையெல்லாம் பனிக்கட்டிகளில் வளர்ந்து மலர்ந்த அழகிய பூக்களாகும்!

உலகின் ஒரு பகுதியில்தான், சிறந்த ஆடவரையும், பெண்டிரையும் தோற்றுவிக்க முடிகிறது என்ற உண்மையில்; பள்ளத்தாக்குகளில் வளரும் பயிருக்கும், மலைகளில் வளரும் பயிருக்கும் உள்ள வேறுபாட்டை உங்களுக்குக்காட்டி விளக்குவதைத் தவிர, வேறு நல்ல எடுத்துக்காட்டு காட்ட இயலாது என்று கருதுகிறேன். பள்ளத்தாக்குகளில், கருவாலி போன்ற காட்டு மரங்கள், புயற்காற்றுக்கும் தலையசைத்துக் கொடுக்கும் கிளைகளை யுடையனவாய், ஓங்கி உயர்ந்து வளர்கின்றன. அவற்றையடுத்து விளங்கும் மலைகளில், மேலே போகப்போகக் கள்ளியும், முள்ளியும், சிறு செடிகளும், கொடிகளும்

காணப்படுகின்றன. மலைச்சாரலில் வளரும் மரங்கள் மிகக் குட்டையாய்ப் பெரிய மரங்களைத் தொலை நோக்கு ஆடியால திருப்பிவைத்துப் பார்க்கும் போது தெரிவது போன்று, மிகச் சிறியனவாய்க் காணப்படுகின்றன. மேலும் மேலும் சென்று கொண்டே இருந்தால், இறுதியில், பாசி படிந்த மலையச்சி காணப்படும்—மாவகையின் பசுமை அத்தோடு முடிவடையும். பாசியும், காளானும் வளரும் நிலப்பகுதியில், கருவாலியையும், தேக்கையும் வளரச் செய்ய முயலுவது எப்படியோ, அப்படித்தான் மாறுபட்டச் சுற்றுச்சார்புகள் நிறைந்த இடத்தில் சிறந்த ஆடவரையும், பெண்டிரையும் தோற்றுவிக்க முயலுவதும் ஆகும். மக்களினத்தை வளர்க்கப் போதுமான அளவு, தேவையான தட்ப வெப்ப நிலையும், மண்ணும் மிகமிகத் தேவையாகும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, சாண்டோ டொமிங்கோவை (Santo Domingo,) இந்த நாட்டுடன் சேர்ப்பது பற்றிய பேச்சுக்கள் நடைபெற்றன. அப்பொழுது, நான் வாஷிங்டன் நகரில் வாழ்ந்துவந்தேன். அப்படிச் சேர்க்கும் திட்டத்தை நான் எதிர்த்தேன். அது அழகிய தட்ப வெப்ப நிலையையுடையதென்றும், அதன் மண்வளம் எதையும் கொடுக்கக்கூடியது என்றும் என்னிடம் பலர் கூறினர். "நாம் அதை விரும்பக்கூடாது அமெரிக்க மக்களை வாழ வைத்து வளரச் செய்வதற்கேற்றப் பொருத்தமான நாடு அல்ல அது. அந்நாட்டின் தட்ப வெப்ப நிலை நம்மைச் சிதைத்துச் சீரழித்துவிடும். நீங்கள் ஐயாயிரம் பாதிரிமார்கள், ஐயாயிரம் ஆட்சி செலுத்தும் பெரியோர்கள் ஐயாயிரம் கல்லூரிப் பேராசிரியர், ஐயாயிரம் போஸ்டன் நகரத்து ஆடவர், அவர்களது மனைவியர் ஆகிய

இவர்களுடன் சென்று சாண்டோ டோமின் கோவில் குடியேறுவதாக வைத்துக்கொண்டாலும், அடுத்தத் தலைமுறையினர் காலில் செருப்பு இல்லாமல் கோவேறுகழுதையின் வெற்று முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டு, உச்சியில் மயிர்க் குஞ்சம் கொங்குப் தொப்பியை அணிந்துகொண்டு, இரண்டு கக்கத்திலும் சேவல்கோழியை அணைத்துக் கொண்டு, ஞாயிறன்று நடக்கும் சேவற் சண்டைக்குப்போகிறவர்களாகத்தான் அவர்கள் மாறிவிடுவார்கள்" என்று நான் கூறினேன். தட்பவெப்ப நிலை அந்த அளவுக்கு மாறுபாட்டை உண்டாக்குகிறது.

விஞ்ஞானம், நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறது; அதன் வளர்ச்சியில்தான் பேரறிஞர்களைத் தோற்றுவிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. உணவு, உடை, உறையுள் உதவிகள் ஆகியவற்றைப் பெறுமளவுக்கு. நாம் வடபகுதியை விஞ்ஞானத்தின் துணைகொண்டு வென்றுவிட்டோம். தென்பகுதியிலுள்ள வெப்பத்தைச் சமாளித்து நிற்கக் கூடிய அளவுக்கு முன்னேறிவிட்டோம். வேறு ஒரு உலகத்தைப்பற்றிக் கவலைப்படாமல், இவ்வுலகைப்பற்றி அதிகக் கவலை எடுத்துக் கொண்டால், நாம் இந்த நாட்டில் அறிஞர் திலகங்களைத் திகழக் கூடிய ஆடவரையும், பெண்டிரையும் தோற்றுவிக்கலாம்.

மக்கள் எல்லோரும் பேரறிவுடையவர்களாக ஆகமுடியாமைக்கு, வேறு ஒரு காரணமும் காட்ட முடியும். மிகத் தாழ்வான விலங்கினத்திலிருந்து மனிதன் வளர்ந்து வந்திருக்கிறான் என்று நான் நம்புகிறேன். இது முழுக்க முழுக்க உண்மைஎன்று நான் கூற வரவில்லை. இது உண்மையாக இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன் என்றுதான்

கூறுகிறேன். நடைமுறைப் பழக்கங்களைப் பார்த்தால், எட்டுக்கு ஏழு பங்கு நான் கூறுவது உண்மை என்ற நிலைக்குத்தான் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அந்தக் கருத்தை நான் முதன் முதலில் கேள்விப்படும்போது அதனை வெறுக்கத் தொடங்கினேன். முன்னோர்களின் பெருமைபற்றிப் பெருமிதங் கொள்வதைத் தவிர, வேறு எந்த வகையிலும் பெருமையைக் கொண்டிராத மக்களிடத்தில், அப்பொழுதெல்லாம் எனக்கு அனுதாபம் ஏற்பட்டிருந்தது. பழைய உலகின் பெருந்தன்மையை, அந்தக் கருத்து எந்த அளவுக்குப் பாதிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்தேன். அவர்கள், முன்னோர்களின் பெருமையைப் பற்றி எவ்வளவோ பழைய காலத்திலிருந்து வழி வழித் தலைமுறையாகக் காட்டி பெருமையடித்துக் கொள்கிறார்கள். நான் எல்லாவற்றையும் பற்றிச் சிந்தித்த பிறகு அந்தக் கருத்து சரிதான் என்று ஒப்புக்கொள்ள வேண்டியவனானேன். எனக்குத்தானே நான் கொண்டிருந்த கருத்து, முதலில் மாறுபட்டதாகக் காணப்பட்டாலும், நான் அந்தக் கருத்துபற்றி நன்கு தெளிவு பெற்றேன். நான் ஆரம்பநிலை எலும்புகளையும், தசைகளையும் பற்றிப் படித்தேன். ஒவ்வொருவரும் காதிலிருந்து கன்னம் வரையிலும், ஆரம்பநிலைத் தசைகளைக் கொண்டிருப்பதாகக் கேள்வியுற்றேன். "அவைகளெல்லாம் என்ன?" என்று கேட்டேன். அவைகள் உபயோகப்படுத்தாத காரணத்தால், தம் வேலையை மறந்துவிட்ட ஆரம்பநிலைத் தசைகள் என்றும், அந்தத் தசைகளால்தான் உங்கள் முன்னோர்கள் காதுகளை அசைத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் என்னிடம் சொல்லப்பட்டன. ஆம், ஒரு காலத்திலே அவைகளை உபயோகப்படுத்திக்

கொண்டிருந்தோம் என்பது கண்டு, நான் அதிசய முறவில்லை; ஏனென்றால், நாம் அவைகளை உபயோகப்படுத்தாமல் அவற்றின் வேலையை அவைகள் மறக்கும்படி செய்துள்ளோம்.

சாதாரணமாகக் கணக்கிட்டுப் பார்த்தால், நான் மூளையற்ற முதுகெலும்புடைய உயிர் வகையிலிருந்து தோன்றிய இனத்தைச் சேர்ந்தவன். மூளையற்ற அந்த முதுகெலும்புடைய உயிர்கள், ஏன் அசைகிறோம் என்பது தெரியாமலே முன்பின் அசைந்தும், ஏன் நீந்துகிறோம் என்பது தெரியாமலே முன்பின் நீந்தியும், சிறிது சிறிதாக வளர்ச்சியடையத் தொடங்கி, தம் வாழ்வை நிலைநாட்டிக் கொள்வதற்கான முறைகளில் முன்னேறின. அவைகள், கோடானுகோடி ஆண்டுகளாகப் படிப்படியாகப் பிறந்து வளர்ந்து உயிரினங்களில் பல சட்டங்களைத் தாண்டி, தாவிக் குதிப்பனவாகவும், நீந்துவனவாகவும், மிதப்பனவாகவும், தாவி ஏறுவனவாகவும், நடப்பனவாகவும் வளர்ந்து, கடைசியில் மரக்கட்டைப் படகில் வாழ்ந்த மக்களாக மாறின. அதற்குப் பிறகு, மனிதன் சிறிது சிறிதாக வளரத் தொடங்கினான். கீழிருக்கும் ஒவ்வொருவனும் மேலிருப்பவனைப்பார்த்து மதவிரோதி என்று அழைத்தான்; சிறிது முன்னேற்றமடைந்த ஒவ்வொருவனையும் நம்பாதவன் என்றும், நாஸ்திகன் என்றும் அழைத்தான் உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், சிறந்து விளக்கும் ஒவ்வொரு மனிதனும், மதவிரோதி என்றே அழைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மூளையற்ற முதுகெலும்புடைய உயிரினத்திலிருந்து தொடங்கி, படிப்படியாகச் சிறந்து தோன்றி இறுதியில், ஷேக்ஸ்பியர் என்னும் மாபெருங் கவிஞனை உண்டாக்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் தான்

நான். முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் இருப்பிடமாக இருக்கும் எல்லையற்ற எதிர்காலத்தை உடைய, ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன். ஆண்டவனடத்திலிருந்து நேரே தோன்றிய இருவர் என்று சொல்லிக்கொண்டு, இருப்பதையெல்லாம் இழந்துவிட்டவர்கள் என்று சொல்லிக்கொள்வதைவிட, முதுகெலும்புள்ள அறிவற்ற விலங்கினத்திலிருந்து ஆரம்பித்து, அறிவுடைய ஷேக்ஸ்பியர் வரையில் வளர்ந்து வந்துள்ள சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொள்வதிலேயே பூரிப்படைகிறேன்.

என்னுடைய நாணயமான கருத்தை உங்களிடம் கூறிவிட்டேன். சிந்திக்காமல் கொள்ளும் நம்பிக்கையைக் காட்டிலும், ஆராய்ந்து பார்க்கும் தன்மை உறுதியாகச் சிறந்ததாகும். பயத்தைக் காட்டிலும் பகுத்தறிவு உறுதியாகச் சிறந்த வழிகாட்டியாகும். இந்த உலகம் வாழ்பவர்களால் ஆளப்பட வேண்டுமேயொழிய, இறந்தவர்களால் அல்ல. கல்லறை அரியணை ஆகாது; மாண்ட பிணம் மன்னன் ஆகாது. மாண்டு மடிந்தவர்களின் புழுதியிலே வாழ மனிதன் முயலக்கூடாது!

இருக்கும் தத்துவாசிரியர்களைக் காட்டிலும், இறந்துபட்ட தத்துவாசிரியர்கள் எந்த வகையிலும் சிறந்தவராகார். இதைவிட அதிகமாக ஏதும் கூறுவதற்கில்லை. இந்த உலகைப்பற்றி நமக்கு மிகக் குறைவாகத்தான் தெரியும். ஆனால், மறு உலகைப்பற்றியோ நமக்கு ஏதும் தெரியாது.

நம்முடைய தந்தைமார்கள், அறிவிலே அடிமைப்பட்டுக்கிடந்தார்கள். அவர்கள் தந்தைமார்களோ அறிவு, ஆக்கம் இரண்டிலுமே அடிமைக

ளாக இருந்தார்கள். நமக்கு மதக்கோட்பாடுகளை உண்டாக்கியவர்கள் மடையர்களாகவும், கொடியவர்களாகவுமே இருந்தார்கள். நாம் கொண்டிருக்கும் ஒவ்வொரு மதக் கட்டளையும், சாட்டையின் தழும்பையும், இருப்புச் சங்கிலியின் துருவையும், எரிசுள்ளியின் சாம்பலையும் தாங்கிக்கொண்டு தானிருக்கின்றன.

அடிமைத்தனத்தின் குழந்தையே மூடநம்பிக்கையாகும். கட்டுப்பாடற்ற சிந்தனை நமக்கு உண்மையைத் தருகிறது. எல்லா மக்களும் எண்ணவும், தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறவும் உரிமை வழங்கப்படும்போது, ஒவ்வொருவரின் மூளையும் எவ்வளவு சிறப்புடைய கருத்தைக் கொடுக்கமுடியுமோ, அவ்வளவு சிறப்புடைய கருத்தைக்கொடுக்க முடியும். அதற்குப் பிறகு, உலகம் அறிவுச் செல்வம் கொழிக்கும் உலகமாக ஆகும்.

எவ்வளவு காலத்திற்கு ஆடவரும், பெண்டிரும் மாதாகோவிலைக்கண்டு அஞ்சுகிறார்களோ, எவ்வளவு காலத்திற்குப் பாதிரியார் பக்தர்களுக்குப் பயத்தை ஊட்டுகிறாரோ, எவ்வளவு காலத்திற்கு ஒன்றைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்ற காரணத்திற்காகவே மக்கள் அதற்கு மரியாதை காட்டி வருகிறார்களோ, எவ்வளவு காலத்திற்குத் தன் மதிப்பை இழப்பது என்பதையே போற்றுதலுக்குரிய செயலாகக் கருதுகிறார்களோ, எவ்வளவு காலத்திற்கு மாதா கோவிலுக்கு அதிகாரம் இருக்கிறதோ, எவ்வளவு காலத்திற்கு மனித சமுதாயம் ஒரு புத்தகத்தை வணங்கி வழிபாடு செய்து வருகிறதோ அவ்வளவு காலம் வரையிலும் மூடநம்பிக்கை என்னும் சேறு படிந்த, அற்றுப்போன, கிழிந்த, கந்தல் ஆடையைச் சுற்றித்திரியும் அறிவுப்

பஞ்சைகளும், நாடோடிகளுமே இவ்வுலகில் நிரம்பிக் கிடப்பார்கள்.

எவ்வளவு காலத்திற்குப் பெண்கள் பைபிளைத் தங்களுக்கு உரிமைகள் வகுக்கும் சட்டம் என்று கருதுகிறார்களோ, அவ்வளவு காலம் வரையிலும் பெண் ஆணுக்கு அடிமையாகத்தானிருப்பாள். பைபிள் பெண்ணினுல எழுதப்பட்டதல்ல! அதனுள் பெண்ணுக்கு அவமானமும், இழிவும் பயப்பது தவிர வேறு எதுவும் இல்லை. பெண் ஆடவனின் சொத்து என்றுதான் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. அவள் குழந்தையின் தாயாவதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டும். அவளுடைய கணவன், ஏசுவின் கீழே எவ்வளவு தாழ்ந்தவனாகக் காணப்படுகிறானோ, அவ்வளவு தாழ்ந்தவளாக, அவள் கணவனின் கீழே இருக்கவேண்டும். அவள் பேச அனுமதிக்கப்படமாட்டாள். அவளுடைய உதடுகளால் உச்சரிக்கப்படாத அளவுக்கு அவ்வளவு தூய்மை படைத்தது மதப் புத்தகம். வாய் திறவாமல் மௌனமாக இருந்தே அவள் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு நாகரிகமுள்ள வீட்டைப்பற்றிய விவரிப்பு எதையும் பைபிளில் காணமுடியாது. சுதந்திர உணர்வுடைய கணவனல் போற்றப்பட்டு, சுதந்திரமும், அன்பும் கொண்ட குழந்தைகள் சுற்றிலும் இருக்க, சுதந்திரத்தோடு வாழும் பெண்ணைப் பற்றிய குறிப்பு எதுவும் பைபிளை எழுதிய 'அருள் பெற்ற' எழுத்தாளர்க்குத் தெரியாது. குடும்ப வாழ்வில் நிலவும் ஜனநாயக உணர்ச்சியில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

இந்த 'அருள் பெற்ற' எழுத்தாளர்க்குக் குழந்தைகளின் உரிமைகள்பற்றிய செய்தி எதுவும் தெரி

யாது. அவர்களுக்குக் கொடுந் தண்டனைகளைப் போதிக்கத் தெரியும், அவர்கள் சாட்டையின் சிட கோடிகளாகலால் மனித சமுதாய உரிமைகள் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. அவர்களுடைய கோட்பாடுகள் பல்லாயிரக் கணக்கானவர்களின் குடும்பங்களைக் கொடுமை வாய்ந்தனவாக மாற்றியிருக்கின்றன; குழந்தைகளின் கண்களிலே நீர் வழிந்தோடும்படிச் செய்திருக்கின்றன.

விடுதலை உணர்வோடு வாழும் ஆடவர்—பெண்டிர் தலைமுறை ஒன்று கூட இதுவரையில் ஒரு பொழுதும இருந்ததில்லை. அத்தகையதொரு கொள்கையை எழுத, இதுகூடத் தக்க சமயம் இல்லை. விலங்குச் சங்கிலிகள் உடைபடுகிறவரையிலும், இருட்குகைகள் கோவில்கள் என்று கருதப் படாத நிலை ஏற்படுகிற வரையிலும் பொறுத்திருங்கள்! மதபக்தியை ஆழ்ந்த அறிவு என்று தவறுகக் கருதா நிலை ஏற்படுகிறவரையிலும், மனக் கோழைத் தனத்தை மரியாதைக்குரிய பண்பாக எடுத்துக் கொள்ளாதநிலை ஏற்படுகிற வரையிலும் பொறுத்திருங்கள்! வாழ்கிறவர்கள் இறந்தவர்களைப் போலவே சரிசமத்துவத்தன்மை வாய்ந்தவர்கள் என்று கருதப்படுகிற வரையிலும், பிணப் பெட்டியைக காட்டிலும் தொட்டிலுக்கு அதிக மரியாதை கொடுகக முயலுகிற காலம் வரையிலும் பொறுத்திருங்கள்! மற்றவர்கள் எப்படி நம்பியிருக்கிறார்களோ என்று கவலைப்படாமல், நாம் என்ன அறிந்து கொண்டோமோ அதை அப்படியே வெளியிடுவதற்கான நிலை ஏற்படுகிற வரையிலும் பொறுத்திருங்கள்! மதபோதகர்களின் இடத்தை ஆசிரியர்கள் கைப்பற்றுகிற காலம் வரையிலும், மத பக்தர்கள் ஆராய்ச்சியாளர்களாக மாறுங்காலம் வரையி

லும் பொறுத்திருக்கள்! நீங்கள் புதிய கோட்பாடு வரைவதற்குமுன், உலகம் விடுதலை பெறுகிற வரையிலும் பொறுத்திருங்கள்!

அந்தப் புதிய கோட்பாட்டில் "விடுதலை" என்ற ஒரு சொல்லைத் தவிர வேறொன்றும் இருக்காது!

ஏ விடுதலையே! நீ தொலைவிலுள்ள அடிவானத் தருகிலேயே எப்பொழுதும் மிதந்து கொண்டிருக்காதே! உணர்ச்சியாளர், கொடையாளர், புலவர் ஆகியோரின் உள்ளத்தில் கனவாகவே என்றென்றும தங்கியிருக்காதே! நீ இங்கே வந்து மக்களின் குழந்தைகளிடையே குடிகொள்வாயாக.

எந்த ஆராய்ச்சிகள், எந்தக் கண்டுபிடிப்புகள், எந்த எண்ணங்கள் உலகின் அறிவுக் களஞ்சியத்திலிருந்து வெளிப்படுமோ எனக்குத் தெரியாது. வருங்காலம் எப்படிப்பட்ட புகழணிமாலையை உலகிற்குச் சூட்டப்போகிறதோ, அதுவும் எனக்குத் தெரியாது. இக்கணப் போர்க்களங்களில், எப்படிப்பட்ட எண்ணங்கள் வெற்றி பெறுமோ அதுவும் எனக்குத் தெரியாது. ஆனால், எதிர்காலம் என்னும எல்லையற்றப் பெருங் கடலிலிருந்து, இந்தக் காலம் என்னும் மணற்திட்டைத் தொட்டுத் தழுவிக்கொள்ளவரும் சிறந்த பரிசு—அரிய வாழ்த்து, "ஆண்—பெண்—குழந்தை ஆகியோர்க்கான விடுதலை"யைத் தவிர, வேறொன்று இருக்கமுடியாது என்பதை மட்டும் நான் அறிவேன்.



# வாய்மை.

## அறிஞர் ஆர். ஜி. இங்கர்சாலின்

அரிய சொற்பொழிவு.

★

**தோழர். ஓ. ரா. கிருட்டினசாமி. எம். ஏ., பீ. காம்.**

**அவர்களின் அழகிய தமிழாக்கம்.**

★

மக்கள் அனைவரும் வாங்குதற்கேற்ற மலிவுப் பதிப்பு நூலாக விரைவில் வருகிறது.

பகுத்தறிவு

**ஆசிரியர்: ப. கண்ணன்.**

★

அறிவுக்கு விருந்தான கருத்துரைகள், கவிதைகள், அறிஞர் வரலாறுகள், பொன்மொழிகள், முற்போக்குச் சிறுகதைகள், தொடர்கதை, கட்டுரைகள், நாடகங்கள், துணுக்குகள் தேன் தமிழில் சுவைக்கத்தரும் அறிவியல் திங்கள் இதழ்.

**ஆண்டுக்கு 3—0—0** **தனி இதழ் 0—4—0**

இலங்கையில் 25 சதம்.

**பகுத்தறிவு அலுவலகம்,** சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.

# தீஞ்சுவைத் தென்றல் வெளியீடுகள்.

ப. கண்ணன் எழுதிய

| | | |
|---|---|---|
| ஜமீன்தார். | (சினிமாப் புதினம்) | 1—8—0 |
| கன்னியின் சபதம். | (நாடகம்) | 0—8—0 |
| மின்னொளி. | ,, | 0—6—0 |
| சிந்தனைச் சித்திரம். | (சிறுகதைகள்) | 0-10—0 |

பாவலர். வேலாயுதசாமி எழுதிய

| | | |
|---|---|---|
| திருக்குறள் இசைப்பாடல்கள். (அறத்துப்பால்) | | 0—7—0 |
| அறிவுத்துளிர். | (அறிவுமொழிகள்) | 0—3—0 |

மு. கருணாநிதி எழுதிய

| | | |
|---|---|---|
| ஒரே முத்தம். | (நாடகம்) | 1—4—0 |

சி. பி. சிற்றரசு எழுதிய

| | | |
|---|---|---|
| சிந்தனைச்சுடர். | (கட்டுரை) | 0—5—0 |

ப. க. குஞ்சிதம் எழுதிய

| | | |
|---|---|---|
| பைங்கிளி. | (சிறுவர்கதை) | 0—2—0 |
| வால்முளைத்தசாமியார். | ,, | 0—2—0 |
| ஆலமரத்துப்பேய். | ,, | 0—2—0 |
| கெட்டிக்காரன். | ,, | 0—2—6 |

★

வாணிபர்க்கு ஏற்றகழிவு உண்டு.

**தென்றல் நூற்பதிப்புக் கழகம்,**

சலகண்டபுரம். சேலம் மாவட்டம்.